Registered as a Newspaper in Srilanka


தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 46 • 05.06.2016

NATHAN
KEY CUTTING CENTER
இல.63, முட்டாஸ்கடைச்சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



மிசின் மூலம் திறப்புகள் வெட்டிக் கொடுக்கப்படும்
0776175609



## 'தமிழர்களிற்குள் சிங்கள இரத்தம் கலந்திருக்கிறது'

### ஆளுனர் பேசுகிறார்

- தீவிரவாதிகள்தான் என்னை எதிர்க்கிறார்கள்
- யாழ்ப்பாண நீரை பருக முடியாதென சொல்லவேயில்லை
- விக்னேஸ்வரனுடன் எந்தப்பிரச்சனையும் இல்லை
- ஊடகங்களே சர்ச்சையை கிளப்புகின்றன
- இனநல்லிணக்கமே முதல் பணி




## நயன்தாரா + நந்திக்கடல் = தமிழீழம்?




திடுக்... திக்கம் 4



முல்லைத்தீவு மாணவர்கள் ஏன் மயங்கி விழுகிறார்கள்? 5



வவுனியாவில் உயிர்வாங்கும் வைத்தியசாலைகள் 23

# இனி வேண்டாம் மிளகாய் அரைப்பு!

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்வை மீள்கட்டுமானம் செய்வதில் அரசிற்கு இருக்கும் பங்கு பெரியது. தொழில், கல்வி, மூலதனம் என வாழ்விற்கான அடிப்படைகளில் கணிசமான பலவீனத்தன்மை இந்த பகுதி மக்களிடம் இருக்கும். ஏனெனில் அவர்கள் யுத்தத்தின் குழந்தைகள். அவர்களின் வாழ்வை மீள்கட்டுமானம் செய்வதென்பது ஒரு மாபெரும் மனிதாபிமானப்பணி. உணர்வுபூர்வமாக முன்னெடுத்தால் மாத்திரமே அதன் இறுதி இலக்கை எட்டலாம். எனினும், வடக்கு கிழக்கில் இந்த தன்மையை பார்க்க முடிவதில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மீள்வாழ்வில் அரசுகள் போதிய கவனம் செலுத்தவில்லையென்பது பலகாலமாகவே தமிழ் அரசியல் தலைமைகளின் குற்றச்சாட்டும் கூட.

சொந்த இடங்களிற்கு அனுமதித்து, தங்குவதற்கு ஏதோ ஒரு இடமிருந்தால் போதும், மிகுதியை மக்கள் கவனித்துக் கொள்வார்கள் என்பதுதான் அரசுகளின் எண்ணம். இதற்கு மேலதிகமான எந்த திட்டமும் அரசுகளிடம் இல்லை. தமிழ் அரசியல்தலைமைகளிடமும் இல்லை. வடக்கு கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற் றத்தில் அரசுகள் அக்கறை செலுத்தாமல் விட, முன்னேற துடிக்கும் மக்களையும், வாழ்விற்காக போராடும் மக்களையும் பல்வேறு தனியார் நிறுவனங்கள் வேட்டையாடிக் கொண்டிருக்கின்றன. நிதி நிறுவனங்கள்தான் இதில் முன்னிலையிலிருந்தன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் புதிய தொழில்முயற்சிகளை ஆரம்பிக்க பெருமளவிற்கு நம்பியிருப்பது நிதி நிறுவனங்களைத்தான். யுத்தத்தின் பின்னர் வடக்கில் அதிகம் காலூன்றியவை நிதி நிறுவனங்கள்தான்.

எனினும், நிதி நிறுவனங்களில் இருந்து கடன்பெற்று தொழில் செய்பவர்களில் கணிசமானவர்களின் நிலை கவலைக்கிடமானது. அதிகரித்த வட்டி, சிறு முயற்சியாளர்களிற்கு உவப்பில்லாத வர்த்தக உலகம் என்பன கடன்பெற்றவர்களின் கழுத்தில் சுருக்கு கயிற்றை வீசிவிட்டது. அவர்கள் அந்தரித்து ஓடித்திரிகிறார்கள். நிதிநிறுவனங்கள், கடன்பெற்றவர்கள் என இருதரப்புடனும் தொடர்புபட்ட பரந்த உலகம் உருவாகிவிட்டது. பெரும்பாலானவர்கள் நிதிநிறுவனங்களிடம் எதையோ ஈடுவைத்தவர்காக மரிவிட்டனர். இதன் வளர்ச்சியடைந்த எதிரொலி கடன்பெற்றவர்களிடம் இருந்து நிதியை வசூலிக்க அடியாட்களை வைத்திருக்கும் நிதிநிறுவனங்கள் பல உருவாகியுள்ளன. நிதிநிறுவனங்களிடமிருந்து பெற்ற பணத்தை செலுத்தாதவர்களிடமிருந்து வசூலிக்க அடியாட்களை வாடகைக்கு அமர்த்தும் நிதிநிறுவனங்கள் தாராளம். பணத்தேவையுடன் போகும் ஒவ்வொருவரையும் சிரித்துபேசி வரவேற்று, இனிக்கப்பேசி கடன்தருபவர்களின் இன்னொரு முகம்தான் அடியாள் வெருட்டல்.

இது இன்று சாதாரண விடயம். சட்டபூர்வமாக அங்கீகரிக்கப் படவில்லையென்ற ஒரேயொரு வருத்தம்தான் சில தரப்பிடம் இருக்கலாமே தவிர, மற்றும்படி இதற்கெதிராக கடுமையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

சிறியதொகை பணத்தை கொடுத்து, அதை தர முடியாவிட்டால் சட்டரீதியாக அதை பெற முயல்வதெல்லாம் அந்தக்காலம். பெருந்தொகை பணத்தை கொடுத்து, அதற்கு அறாவட்டி விதித்து, செலுத்த முடியாவிட்டால் அடியாள் வைத்து வாங்குவது கோட், ரை சகிதம் வலம்வரும் நவீன நிதிநிறுவன உலக ஒழுங்கு.

பேராபத்தாக உருவெடுத்துள்ள இந்த நிதி நிறுவனங்களிற்கு மேலதிகமாக அண்மைநாட்களாக வடக்கில் கடைவிரித்துள்ள இன்னொரு ஆபத்து பிரமிட் திட்டம். இலங்கையில் தடைசெய்யப்பட்ட வர்த்தகமுறைமை பிரமிட். ஆனால் அதற்கு கிட்டவான வர்த்தகமுறையொன்று இலங்கையில் நடக்கிறது. வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பெரும்பகட்டுடன் உள்நுழைந்தும் விட்டது.


தமிழ்சினிமாவில் மாறுவேடம் போடுவதென்றால் அர்த்தம், கன்னத்தில் ஒரு புள்ளி வைத்துக் கொள்வது. கன்னத்தில் ஒரு புள்ளியிட்டாலும் மாறுவேடம்தான் என புதுஅர்த்தத்தை கொடுத்தது தமிழ்சினிமா. அப்படியொரு மாறுவேடத்துடன்தான் புதிய பிரமிட் நுழைந்துள்ளது. தமது வர்த்தகம் பற்றி புரியவைக்கும்போது, இது பிரமிட் இல்லையென்பார்கள். பிரமிட்டில் அப்படியிருக்கும், நமதில் இப்படியிருக்கும் என்ற விளக்கம் கொடுப்பார்கள். யாழ்ப்பாணத்தில் பிரமிட் நுழைந்து விலையுயர்ந்த விடுதிகள், மண்டபங்களில் கூட்டங்களை நடத்தினார்கள். கணிசமான அறிமுக கட்டணம் வேறு.

இந்தவகையான வர்த்தகத்தால் இலாபமடையும் வெகுசிலரைத்தவிர மற்றவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் பட்டியலில்த்தான் இணைவார்கள். இதுதான் வரலாறு. எனினும், வரலாற்றை நினைவுகூர்பவர்கள் அரிது. யாழ்ப்பாணத்தில் இந்தவகை வர்த்தகம் பற்றி அதிக இளைஞர், யுவதிகள் சாதகமாக பேசிக்கொள்வது நல்ல சகுனமல்ல. எல்லோரும் வந்து நமது தலைகளில் மிளகாய் அரைத்துவிட்டு செல்லும்வரை அசட்டையாக இருப்பது முறையல்ல. இந்த விடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது சமூகப்பொறுப்புள்ள ஒவ்வொருவரின் கடமையாகும்.

**தீபம்**
211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

# சொன்னார்கள்



### சி.வி.விக்னேஸ்வரன் – வடமாகாண முதலமைச்சர்

மாகாண சபைகளைப் புறக்கணித்து எமது மக்கள் சார்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். மாகாண சபைகள் வர முன்னர் நடைபெற்ற நடவடிக்கைகள் இனி மாற வேண்டும். அரசியல் மட்டத்தில் எடுக்க வேண்டிய தீர்மானங்களை நிர்வாக மட்டத்தில் எடுப்பது எமது மக்களுக்குப் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும். அரசாங்க அலுவலர்கள் இராணுவத்திற்குப் பயந்து எமது மக்களின் காணிகளை இராணுவத்திற்கு வழங்குவது மக்களைப் பாதிக்கும்.



### இரா.சம்பந்தன் – எதிர்க்கட்சித் தலைவர்

ஏற்றுக் கொள்ள முடியாத காரணங்களைக் காட்டிக் கொண்டு படையினர் குறிப்பாக கடற்படையினர் சிவில் சார்ந்த விடயங்களில் நுழைய எத்தனிப்பது ஏற்றுக் கொள்ள முடியாதவை மாத்திரமல்ல எதிர் விளைவுகளை உண்டாக்க முயலும் செயற்பாடுகளாகும். இதுவே கிழக்கு மாகாண முதல் அமைச்சருக்கும் கடற்படை அதிகாரிக்கும் ஏற்பட்ட முரண்பாடாகும். முதலமைச்சர் கௌரவம் அந்தஸ்து பதவி நிலை காப்பாற்றப்பட வேண்டும். கவனிக்கப்பட வேண்டும். அவரை அவகௌரவப்படுத்தும் வகையிலோ பதவியை உதாசீனம் செய்யும் வகையிலோ யாரும் நடந்து கொள்வதை ஏற்றுக் கொள்வது பண்பற்ற செயலாகும்.




### விஜயதாச ராஜபக்ஷ – நீதி அமைச்சர்

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்ற நிலையில் அதில் அரசியல்தீர்வை உள்ளடக்கவும் அவ்வாறு உள்ளடக்கப்படும் அரசியல் தீர்வில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் புதிய கோணத்தில் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது. புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக 6 உப குழுக்களும் ஒரு நிறைவேற்றுக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுக்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றனர். தேவை ஏற்படின் கூட்டமைப்புடன் இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவும் அரசாங்கம் தயாராக இருக்கின்றது



### சம்பிக்க ரணவக்க – அமைச்சர்

வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பில் அரசாங்கத்தின் ஒத்துழைப்பை விடவும் தமிழகத்தின் ஆதரவையே வடமாகாண சபை விரும்புகின்றது. எவ்வாறு இருப்பினும் வடமாகாண சபையும் தமிழகமும் நட்புறவை பேணுவதால் அரசாங்கத்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பில் எமது அரசாங்கம் தான் தீர்மானம் எடுக்க வேண்டுமே தவிர தமிழக முதல்வர் ஜெயலலிதா அல்ல.



### பொன்.இராதாகிருஷ்ணன் – இந்திய மத்திய இணை அமைச்சர்

45 நாள் தடைக்காலம் முடிந்து, தங்களது வாழ்வாதாரத்தைத் தேடி கடலுக்கு மீன்பிடிக்க வரும் தமிழக மீனவர்களைக் கைது செய்வதை இலங்கை கடற்படையினர் கைவிட வேண்டும்.



### சத்துர சேனாரத்ன – நாடாளுமன்ற உறுப்பினர்

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் இருப்பவர்கள் அரசியல் கைக்கூலிகள். அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தில் இருப்பவர்கள் முதுகெலுப்பில்லாதவர்கள். வீட்டுக்குள் இருப்பவர்கள். காம இச்சை கொண்டவர்கள். இவர்கள் நாடு முழுவதும் பெண்களை வைத்துள்ளனர். சில மருத்துவர்கள் சம்பந்தப்பட்ட காணொளிகள், புகைப்படங்கள் எம்மிடம் உள்ளன. அவற்றை வெளியிடவும் தயாராகவுள்ளோம்.

# க்ளிக் பக்கம்

வாழ்க்கை சுமை விறகு சுமையை ஏற்றியிருக்கிறது. வவுனியா மரக்கரம்பளையில்.

என்னைப் பற்றி: நான் கோகுலன் இரு வருடங்களாக ஊடகத்துறையில் சுதந்திர ஊடகவியலாளராக பணியாற்றி வருகிறேன். செய்திப் படங்களை எடுப்பதில் முன்நிற்கிறேன்.




படம்: கோகுலன்

இடம்: மரக்கரம்பளை



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk



# 'தமிழர்களிற்குள் சிங்கள இரத்தம் கலந்திருக்கிறது'

## ஆளுனர் பேசுகிறார்

எஸ்.என்.நிக்ஷன்

வடமாகாண ஆளுனர் றெஜினோல்ட் கூரேயின் பெயரைத்தான் அண்மைகாலமாக தமிழ் அரசியல்வாதிகள் அதிகம் உச்சரிக்கிறார்கள். வடக்கு மாகாணசபை நிர்வாகத்திற்குள் தலையிடுகிறார் என முதல்வர் உள்ளிட்டவர்கள் பரபரப்பு குற்றச்சாட்டு சுமத்த, ஆளுனர் தரப்பு சத்தமின்றி காய்களை நகர்த்திக் கொண்டிருக்கிறது.

யாழ் நகர அபிவிருத்தி தொடர்பாக ஆராய ஆளுனர் ஏற்பாடுசெய்த கூட்டத்தை முதல்வர் உள்ளிட்ட மாகாணசபை உறுப்பினர்கள் கணிசமானவர்கள் புறக்கணித்தார்கள், ஆளுனர் அரசியல் பேசுகிறார், நயினாதீவில் புத்தவிகாரை அமைக்க ஆளுனர் உதவியாக இருக்கிறார் என ஊடகங்களும் கொளுத்திப்போட்டுக் கொண்டிருக்க, எதுபற்றியும் அலட்டிக்கொள்ளாமல் 'கருமமே கண்ணாக' இருக்கிறது ஆளுனர் தரப்பு. இந்த பரபரப்பான நிலையில் ஆளுனரை சந்தித்து பல்வேறு விடயங்கள் பற்றி கலந்துரையாடினோம்.

**தீபம்: றெஜினோல்ட் கூரே என்ற பெயர் தமிழர்களுக்கு நன்கு பரிச்சயமானது. கடந்த கால நிகழ்வுகளின் அடிப்படையில் ஒரு நேச சக்தியாகத் தான் உங்களைப் பார்க்கிறார்கள். இப்பொழுது ஆளுநராக வந்திருக்கிறீர்கள். பணிச்சூழல் எப்படி இருக்கிறது?**

**ஆளுனர்:** தமிழ் மக்கள் என் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் நான் மிகவும் நன்றியுடையவனாக இருக்கின்றேன். அதே வேளையிலே 13 ஆவது திருத்தச் சட்டத்தையும் மதிக்கின்றேன். 13வது திருத்தச் சட்டம் தேசிய நல்லிணக்கத்திற்கு ஆரம்பப் புள்ளியாக இருக்கக் கூடியது. நல்லிணக்கம், இனப்பிரச்சனை தீர்வு என்பவற்றிற்கும் ஆரம்பப் புள்ளியாக இருக்கக் கூடியது.

**தீபம்: யுத்தத்தின் பின்னர் முக்கியமான காலகட்டத்தில் நீங்கள் வடக்கு மாகாண ஆளுநர் பொறுப்பை ஏற்றிருக்கிறீர்கள். இன நல்லிணக்கம் பற்றிய பேச்சுக்கள் பரவலடைந்துள்ள காலகட்டமிது. அரசின் பிரதிநிதியாக ஏதாவது நல்லிணக்க முன்னகர்வுகளை மேற்கொள்கிறீர்களா?**

**ஆளுனர்:** நான் இலங்கை ஜனாதிபதியினுடைய பிரதிநிதியாக இருக்கின்றேன். மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கத்திற்குமிடையில் ஓர் ஒருங்கிணைப்பாளராகவும் இருக்கின்றேன். வடக்கிற்கும் தெற்கிற்கும் இருக்கக் கூடிய இடைவெளியை நிரப்புவதற்கும் அதை பூரணப்படுத்துவதற்கும் என்னால் இயன்ற மட்டும் பாடுபடுவேன்.

இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை இனநல்லிணக்கம். ஏற்கனவே இதற்கான பல முன்முயற்சிகள் செய்துள்ளோம். தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுவதற்கு முன்னர் அனுமதிக்கப்படவில்லை. இப்பொது அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவொரு உதாரணம்.

அடுத்ததாக, அரசாங்கம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை விரைவுபடுத்தியும் வருகின்றது. மக்கள் வாழ்ந்த நிலங்களை மக்களிடமே மீளக் கையளிப்பதற்கு அரசாங்கம் முடிவெடுத்திருக்கின்றது. போர் வெற்றி நிகழ்வு கூட இந்த முறை போர் வெற்றி நிகழ்வாக அல்லாமல் ஒரு பண்பாட்டு நிகழ்வாக மாற்றப்பட்டிருக்கின்றது. முன்னரெல்லாம் பெரியளவிலே ஆயுதக் கண்காட்சிகளுடன் இராணுவ நிகழ்வுகள் போன்றே நடக்கும். ஆனால் இந்த முறை அதுவொரு பண்பாட்டு நிகழ்வாக மாற்றப்பட்டிருப்பதையும் நீங்கள் பார்க்கலாம்.

இந்தமுறை கிளிநொச்சியில் மக்களுக்கு நன்மையளிக்கும் விடயங்களைக் காட்டுகின்ற வைபவமாகவும் அது இருந்தது. அதாவது மக்களுக்கு இராணுவம் செய்த நன்மைகளைக் காட்டுவதாக அமைந்திருந்தது. வேலைவாய்ப்புக்களை வழங்குதல் மற்றும் உட்கட்டுமான வசதிகளை ஏற்படுத்துதல் போன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

யாழ்ப்பாண நகரத்தின் அபிவிருத்திக்காக உலக வங்கியின் நிதி உதவியுடன் 55 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறுவதற்கான வாய்ப்பும் இருக்கின்றது. இதில் குடிதண்ணீர், கழிவு வாய்க்கால், கழிவகற்றல் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அண்மைக்காலமாக வெளிநாடுகளைச் சேர்ந்த துலீதுவர்கள் இராஜதந்திரிகள் இங்கு வருவது அதிகரித்திருக்கின்றது. இங்கு நடக்கும் அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்றங்களை அடிக்கடி பார்வையிட்டும் வருகின்றனர். சிலசில பிரச்சனைகள் இருந்தாலும் தமது திருப்தியை வெளிநாட்டு பிரதிநிதிகள் தெரிவிக்கின்றார்கள்.

**தீபம்: மாகாணசபை நிர்வாகம் சிறப்பாக இயங்க ஆளுநருக்கும் முதலமைச்சருக்கும் இடையில் சுமூகமான உறவு இருப்பது அவசியம். ஆனால் தற்பொது அது குறைந்துள்ளதைப் போல் தெரிகிறதே.**

**ஆளுனர்:** வடமாகாண ஆளுனருக்கும் வடமாகாண முதலமைச்சருக்குமிடையே உறவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது ஒரு புனை கதை. அது முற்றிலும் பொய். கட்டுக்கதை. எனக்கும் அவருக்கும் இடையே எந்தப் பிரச்சனையும் இல்லை. உண்மையிலையே நான் அவருடைய பணிகளிற்கு அனுசரணையும் ஆதரவும்தான் கொடுத்து வருகின்றேன்.

13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த அதிகாரங்களின் அடிப்படையில் நியதிச் சட்டங்களை மாகாணசபைகள்தான் நிறைவேற்ற வேண்டும். நியதிச் சட்டங்கள் சில ஏற்கனவே வடமாகாணசபையால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

தெற்கில் இயற்றப்பட்ட 15 நியதிச் சட்டங்களை எடுத்து வந்து வடக்கு முதலமைச்சரிடம் கொடுத்து இருக்கின்றேன். சில நாட்களுக்கு முன்னர் கூட இன்னுமொரு பகுதி நியதிச் சட்டங்களையும் கொண்டு வந்திருக்கிறேன். அவ்வாறாக மாகாணசபை தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கு அனுசரணையும் ஆதரவும் நான் கொடுத்து வருகின்றேன்.

**தீபம்: வடக்கு ஆளுனர்கள் என்றாலே சர்ச்சைக்குரியவர்களாக இருக்கிறார்கள். பள்ளிஹக்கார தவிர்ந்த ஏனையவர்கள் மீது மாகாண சபைகள் குற்றம் சுமத்துகின்றன. மாகாணசபை அமைப்பு முறை சிக்கலா? தனிநபர்கள் சார்ந்த பிரச்சனையா இந்தக் குழப்பத்திற்குக் காரணம்?**

**ஆளுனர்:** இல்லை. நான் சொன்னது போல இங்கே எந்தவிதமான சிக்கலான பிரச்சனைகளும் இல்லை. உங்களுக்குத் தெரியும் தானே, ஊடகவியியலாளர்கள் எப்பொதும் முரண்பாடுகள் பிரச்சனைகளில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அதுதானே அவர்களது விரும்பமாக இருக்கின்றது. ஏனெனில் தங்களுடைய அலைவரிசைகளை, பத்திரிகைகளை சந்தைப்படுத்துவதற்கு அவர்கள் விரும்புகின்றார்கள்.

ஊடக நிறுவனங்கள் பிரபல்யமானதாக வருவதற்கு இப்படியான செய்திகள் தேவையாக உள்ளது. முரண்பாடுகள் பிரச்சனைகள் இல்லையென்றால் பத்திரிகைகளுக்குப் பிரச்சனையாக இருக்கின்றது. என்னுடைய பணிவான வேண்டுகோள் மக்களுக்கு பொறுப்புக் கூறுகின்ற நிலைமை ஊடகங்களுக்கு இருக்கின்றது. நீங்கள் உங்களுடைய

**இன, மத, மொழி பேதங்களைக் கடந்து நாங்கள் ஒன்றித்துச் செயற்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். எங்களுடைய வரலாற்றைப் பார்த்தால் நாங்கள் இணைந்தே இருந்திருக்கின்றோம்.**

நலன்களைத் திருப்திப்படுத்துவதற்காக வேலை செய்யாமல் மக்களுடைய நன்மைகளுக்காக வேலை செய்யுங்கள்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பல சம்பவங்களைச் சொல்லலாம். இதற்கு நல்லதொரு உதாரணம் நயினாதீவு விகாரையின் புத்தர் சிலை விவகாரம். தெற்கிலுள்ள தீவிரமானவர்கள் சொல்கின்றார்கள் நயினாதீவில் புத்தர் சிலை அமைப்பது தடுக்கப்பட்டிருக்கின்றது என. அதனால் தெற்கிலே இருக்கின்ற அப்பாவி மக்கள் கோபமடைகிறார்கள். அதேநேரம், நயினாதீவு கோவில் புத்தர் சிலையால் மறைக்கப்படுகிறது என்று வடக்கில் பத்திரிகைகள் சொல்கின்றன. இதற்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலுள்ள

தொடர்ச்சி 8-ம் பக்கம்





# நயன்தாரா + நந்திக்கடல் = தமிழீழம்?

ஹிருத்திக் போஸ் நிஹாலே

தமிழர்களின் சம்பிரதாய அரசியல் நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்ட முள்ளிவாய்க்கால் நினைவுதினம் கடந்த மாதம் அனுட்டிக்கப்பட்டுவிட்டது. தமிழர்களை பொறுத்தவரை அரசியலில் சம்பிரதாயங்களாகிவிட்ட பல்வேறு விடயங்கள், சம்பவங்களை போல இப்பொழுது முள்ளிவாய்க்கால் நினைவுதினமும் சம்பிரதாயமாகிவிட்டது.

ஈழத்தமிழர்களிடம் அரசியல் செய்ய வேண்டுமென்றால் அவர் சட்டத்தரணியாக இருக்க வேண்டும். ஒருவர் தனிப்பட்டரீதியில் நேர்மையானவர், மக்களிற்காக போராடும் குணமுடையவர் என்ற தகுதிகள் இல்லா விட்டாலும் அவர் சட்டத்தரணியாக இருந்தால் போதும். அவரை தமது பிரதிநிதியாக்குவார்கள்.

குமுதின படுகொலை, யூலை கலவரம் என ஈழத்தமிழர்களின் வரலாற்றிலுள்ள கறுப்புபக்கங்கள் எல்லாம் சம்பிரதாய நினைவுநாட்களாகி பலகாலம் ஆகிவிட்டது.

இனப்பிரச்சனை ஆயுதமோதலாக தூபமிட்ட, தமிழர்களின் நெஞ்சில் ரணமாக படிந்த யூலைக்கலவரம் இன்றையதிகதியில் ஒரு சம்பிரதாய நிகழ்வென்பதற்கு அப்பால் வேறெந்த அர்த்தமுமற்றது. அரசியல்கட்சிகளின் அலுவலகங்கள் சிலவற்றில் சிறிய கூட்டம் நடக்கலாம். சில தலைவர்கள் ஊடகங்களிற்கு அறிக்கை அனுப்புகிறார்கள். எரியும்தீபமோ, மெழுகுவர்த்தியோ ஏதோ ஒரு படத்தை எடுத்து பதப்படுத்தி பேஸ்புக் போராளிகள் புரபைல் பிக்சராக்கி விடுவார்கள். அவ்வளவுதான்.

இதற்குமேல் யூலைக்கலவரத்திற்கு ஒரு அசியல் பெறுமானத்தை தமிழர்கள் கொடுக்கவில்லை. அவர்களால் உருவாக்க முடிந்த பெறுமானமெல்லாம் இவ்வளவுதான். யூலைக்கலவரம் என்றால் என்ன? அப்பொழுது என்னவெல்லாம் நடந்ததென பதினெட்டு வயதான ஒரு பையனையோ, பெண்ணையே பிடித்து கேளுங்கள். அவர்களின் பதில்தான் தமிழ் அரசியலின் அறுவடை.

இதுதான் முள்ளிவாய்க்கால் நினைவு நாளிற்கும் நிகழ்ந்துள்ளது. தமிழர்களின் நெஞ்சில் இன்றும் கொதித்துக்கொண்டிருக்கும் ஒரு மாபெரும் துயரத்தை, அரசியல் அர்த்தம் நிறைந்த நிகழ்வொன்றாக தமிழ் அரசியல் தலைமைகளால் மாற்ற முடியவில்லை. அப்படி மாற்ற தமிழர்களும் முனையவில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவுதினம் என்பது இன்றைய அர்த்தத்தில் என்ன? ஒருவாரமோ பத்துநாளின் முன்னர் சிவாஜிலிங்கம் யாழ் ஊடகஅமையத்தில் வந்து உட்கார்வதுடன் ஆரம்பிக்கும். ஆங்காங்கே சில இடங்களில் விளக்கேற்றப்பட்டதாக செய்திகள் வரும். பெரும்பாலும்விளக்கேற்றுபவரும் படம்பிடிப்பவரும் மட்டுமே அதில் கலந்துகொள்வார்கள். பிறகு இணையங்களில் 'வீழ்ந்துவிடாத வீரம்' என்பது மாதிரியான கவிதைகள் வரும். 18ம் திகதி காலையில் வெளியாகும் பத்திரிகைகள் கறுப்பு பக்கத்தில் வெளிவரும். காலையில் முள்ளிவாய்க்காலில் சிலர் விளக்கேற்றுவார்கள். மதியத்தின் பின்னர் யார் யார் கலந்து கொண்டார்கள்? யார் யார் கலந்து கொள்ளவில்லையென்ற தகராறு ஆரம்பிக்கும். பின்னர் அடங்கிவிடும். இடையில் பல்கலைகழகம் மாதிரியான ஒருசில இடங்களிலும் நினைவுகூரப்படும்.

இவ்வளவுதான் தமிழர்களின் மாபெரும் துயரத்தை நினைவுகூரும் முறை. இந்த நிகழ்வுகளை கவனித்தால், இவை மக்கள் நிகழ்வுகளாக இல்லையென்பது புலப்படும்.

காணாமல் போனவர்கள் போராட்டத்தில், காணாமல் போனவர்களின் உறவுகள் மட்டும் எப்படி கலந்து கொண்டார்களோ... நிலசுவீகரிப்பிற்கு எதிராக, நிலங்களை பறிகொடுத்தவர்கள் மட்டும் எப்படி கலந்து கொண்டார்களோ... சிறையிலிருப்பவர்களை விடுவிக்க, சிறையிலிருப்பவர்களின் உறவுகள் மட்டும் எப்படி கலந்து கொண்டார்களோ, அப்படித்தான் முள்ளிவாய்க்காலிலும் பாதிக்கப்பட்ட சிலர்தான் கலந்து கொள்வார்கள். கடந்த ஏழு வருடத்தின் நிலைமையிது.

2014 இல் வடமாகாணசபை முன்றலில் சிவாஜிலிங்கம் விளக்கேற்றுவார் என்பதை அறிந்து, வடமாகாணசபையே அவசர அவசரமாக கதவுகளை இழுத்து மூடியிருந்தது. அன்று சிவாஜிலிங்கம் விளக்கேற்றியபோது மூன்றோ, நான்கு பேர் மட்டுமே நிகழ்வில் கலந்து கொண்டனர். இப்பொழுது யாழ்நகரத்தில் படையினர் வெசாக் வலயமொன்றை அமைத்திருந்தனர். அங்கு பாற்சோறு உண்ட பொதுமக்களின் கணக்கு தோராயமாக பத்தாயிரம். சிவாஜிலிங்கம் விளக்கேற்றிய கைதடிக்கும், படையினர் பாற்சோறு கொடுத்த யாழ்நகரத்திற்குமிடையில் தமிழர்களால் கடக்க முடியாத ஏழு கிலோமீற்றர் இடைவெளியிருந்தது.

2016 இலும் இதையொத்த சம்பவம்தான் நடந்தது. இறுதியுத்தம் நடந்த முள்ளிவாய்க்காலில் நடந்த நினைவு நிகழ்வில் சிறிய எண்ணிக்கையான மக்களே கலந்து கொண்டார்கள். கணிசமான வடக்கு மாகாணசபை அரசியல்வாதிகள் கலந்துகொண்டனர். சாவு அஞ்சலியில் யார் யார் உரையாற்றுவதென குடுமிப்பிடி சண்டை நடத்திவிட்டு, விளக்கும் ஏற்றிவிட்டு வந்தார்கள். இதற்கு சில நாட்கள் கழித்து புதுக்குடியிருப்பில் ஒரு நிகழ்வு நடந்தது. தென்னிந்திய திரைப்பட நடிகர் நாசர் உள்ளிட்டவர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்விற்கு பெரும் கூட்டம் கூடியது. இரண்டு நிகழ்வுகளையும் ஒப்பிட்டு சமூக வலைத்தளங்களில் எழுதும் சிலர், 'தமிழர்களிற்கு என்னவாயிற்று' என பதறினார்கள். உண்மையில் தமிழர்களிற்கு எதுவும் நடக்கவில்லை. தமிழர்கள் அப்படியேதான் உள்ளனர்.

முள்ளிவாய்க்காலில் சனங்கள் கொல்லப்பட்டு கொண்டிருந்தபோது, யுத்த வலயத்திற்கு வெளியில் வசித்த தமிழர்கள் எதையெல்லாம் துறந்தார்கள்? எதையெல்லாம் இடைநிறுத்தி வைத்தார்கள்?

அந்த வருடம் நல்லூர் திருவிழாவும் நடந்தது. எல்லா ஆலயங்களிலும் திருவிழா நடந்தது. கல்யாண வீடு நடந்தது. பூப்புனித நீராட்டுவிழா நடந்தது. பிறந்தநாள் விழா நடந்தது. வெளிநாடு போனார்கள். வியாபாரம் செய்தார்கள். படித்தார்கள். சுற்றுலா சென்றார்கள். எல்லாம் நடந்தது. ஒருபக்கத்தில் மக்கள் கொல்லப்பட்டு கொண்டிருந்தனர்.

இறுதி யுத்தத்தை நிறுத்த கருணாநிதி ஒன்றும் செய்யவில்லை, துரோகி என்றுதான் பெரும்பாலானவர்கள் கூறுகிறார்கள். இன்னொரு நாட்டின் கருணாநிதி என்ன செய்தார் என்பதற்கு முதல், சொந்தநாட்டிலிருக்கும் நான் என்ன செய்தேன் என்று யாரும் கேட்பதில்லை.

வெளிப்படையாக சொன்னால், தமிழர்களிற்கு எல்லாம் தேவை. தமிழீழத்திற்கும் ஓகேதான். ஆனால் அதை யாரும்தான் பெற்றுத்தர வேண்டும். அவர்கள் எதிலும் ரிஸ்க் எடுக்க தயாரில்லை.

யுத்தத்தின் இறுதில் படையினரிடம் சரணடைந்தது கிட்டத்தட்ட பன்னிரண்டாயிரம் போராளிகள். யுத்த வலயத்திற்குள் இருந்ததே மூன்றரை தொடக்கம் நான்கு இலட்சத்திற்கு உட்பட்ட மக்கள்தான். யுத்தத்தை பெரும்பான்மையான தமிழர்கள் ஆதரித்தார்கள். ஆனால் யுத்த வலயத்தில் வசிக்க பெரும்பாலானவர்கள் விரும்பவில்லை, தமது பிள்ளைகள் இந்த நெருக்கடிக்குள் சிக்குவதையும் விரும்பவில்லை. யுத்த வலயத்திற்கு வெளியில் வைத்து படிக்க வைத்தார்கள். அல்லது வெளிநாடுகளிற்கு அனுப்பினார்கள். மொத்த தமிழர்களும் 30 இலட்சம் எனக்கொண்டால், அதில் பத்தில் ஒரு பங்கினர்தான் யுத்த வலயத்திற்கு போனார்கள்.

நிஜஉலகத்திற்கு அப்பாலான இணைய உலகம்தான் தமிழர்களின் உணர்வுகளின் வடிகால். இணையத்தில் அறச்சீற்றம் கொள்பவர்கள்தான் பெரும்பாலான தமிழர்கள். எல்லாவிசயத்திலும் அவர்களிற்குகருத்துக்கள் உள்ளன. கறார் மொழியில் அவற்றை வெளிப்படுத்திவிடுவார்கள். ஆனால் நிஜத்தில் பேசமாட்டார்கள். ஒரு செயலுக்காக இணையத்தில் பொங்குபொங்கென பொங்குபவர், அதனை நேரில் காணும்போது சத்தமின்றி நகர்ந்து சென்றுவிடுவார். இதுதான் தமிழர்கள்.

தமிழர்களின் பொது இயல்பினாலோ என்னவோ முள்ளிவாய்க்கால் நினைவை கூட மக்கள் மத்தியில் பரவலடைய செய்ய முடியவில்லை. முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலிக்கு மக்களை அணிதிரட்ட எந்த அரசியல்கட்சியும் முயலவில்லை. தமிழ்தேசிய கூட்டமைப்பென்றாலும் சரி, தமிழ் தேசிய மக்கள் முன்னணியென்றாலும் சரி ஒரே நிலைமைதான். மக்கள் மத்தியில் நினைவின் அலைகளை ததும்ப செய்ய யாராலும் முடியவில்லை. கூட்டங்களிற்கும் மக்களை சேர்க்க முடியவில்லை.

ஆனால் முள்ளிவாய்க்கால் நினைவின் இரண்டுவாரங்களின் பின் புதுக்குடியிருப்பில் நடந்த நிகழ்வில் ஏராளம் மக்கள் திரண்டனர். காரணம் நாசர். அவர் தீண்டத்தகாதவர் அல்ல. ஆனால் இந்தவகையானவர்களை அழைத்துத்தான் தமிழர்களை ஒருங்கிணைக்க வேண்டுமா? ஒருங்கிணைக்க முடியுமா? மாபெரும் இலட்சியத்திற்காக போராடிய இனமொன்றை கூட்டத்திற்காக திரட்ட நடிகர்கள்தான் வேண்டுமா? எப்படி இதனை கடக்கப் போகிறோம்?

தென்னிந்திய நடிகர்களை, அரசியல் வாதிகளை, சிவில் செயற்பாட்டாளர்களை, மக்களை நேசசக்திகளாக, நெருக்கமான தொடர்புள்ளவர்களாக ஈழத்தமிழர்கள் கைவசம் வைத்திருக்க வேண்டும்தான். அவர்களை நேசசக்திகளாக வைத்திருப்பது, ஈழத்திற்கு அழைத்துவருவது விமர்சிக்கப்பட வேண்டியதல்ல. ஆனால், மக்களின் உரிமை சார்ந்த விடயங்களில் பொறுப்புதவறும் அல்லது மாபெரும் கடமைகளை செய்ய வல்லமையற்ற அரசியல்வாதிகள் தனியே இப்படியான நிகழ்வுகளை நடத்துவதுதான் விமர்சனத்திற்குரியது.

இதுதான் நிலைமையெனில், அடுத்த வருடம் நந்திக்கடலோரமாக போரில் உயிர்நீத்தவர்களிற்கு நினைவிடம் அமைத்து, திறப்பு விழாவில் நயன்தாராவை கவர்ச்சி நடனத்திற்கு அழைக்கமாட்டார்கள் என்ற உத்தரவாதங்கள் உண்டா?







# முல்லைத்தீவு மாணவர்கள் ஏன் மயங்கி விழுகிறார்கள்?

வ.நரேஜி

யுத்தத்தின் பின்னர் அபிவிருத்தி துரிதமடைகிறது. வடக்கு கிழக்கில் மீள்கட்டுமானங்கள் சிறப்பாக நடக்கிறதென அரசு சொல்லித்திரிந்தாலும், யதார்த்தமென்னவோ வேறாகத்தான் இருக்கிறது. யுத்தத்தால் சிதைவடைந்த பகுதி மக்களின் வாழ்க்கையும் சிதைவடைந்துதான் கிடக்கிறது. அரசின் எந்த புனரமைப்பு திட்டமும் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்கு உதவவில்லையென்பதே யதார்த்தம்.

யுத்தத்தில் அதிகம் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலொன்றான முல்லைத்தீவில் நடக்கும் இந்த அதிர்ச்சி சம்பவங்கள் தேவிபுரம், நெத்தலியாறு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளில் தினமும் காலைப் பிரார்த்தனையின் போது 4, 5 மாணவ, மாணவிகள் மயக்கமடைந்து விழுகிறார்கள். அவர்களிற்கு சிகிச்சையளித்து எழும்பி உட்கார வைக்கிறார்கள். மயக்கம் பெரும் சமூகப்பிரச்சனையாக உருவெடுத்துள்ளது.

'ரீச்சர் இன்றைக்கு நான் சாப்பிடல. வீட்டை சமைக்க ஒன்றும் இல்லை. அதனால் அப்படியே வந்து விட்டன்' என கூறும் மாணவர்கள் அங்கு சர்வசாதாரணம் என கனத்த மனதுடன் கூறுகிறார்கள் ஆசிரியர்கள். காலையில் மட்டுமல்ல சில மாணவர்கள் முதல் நாள் இரவு கூட சாப்பிடாமல் இருந்து விட்டு பாடசாலை செல்கிறார்கள்.

ஆசிரியர்கள் பாடசாலை கன்ரினில் தம்மால் முடிந்ததை அந்த மாணவர்களுக்கு வாங்கிக் கொடுத்து விட்டு வகுப்புறைக்குச் அழைத்துச் செல்லும் சம்பவங்கள் கூட நடந்து வருகின்றது. முல்லைத்தீவின் சில பகுதிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப் பட்டுள்ளது. நாளாந்த குடும்ப சீவியத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் இங்கு பல குடும்பங்கள் வாழ்கின்ற போது அரசாங்கமும் மாகாணசபையும் கூறும் அபிவிருத்தி எங்கு செல்கிறது? அரசாங்கத்தின் வாழ்வாதார உதவிகள் யாருக்கு வழங்கப்படுகிறது? இப்படி பல கேள்விகள் எழவே செய்கின்றது. வீதிகள் போடுவதும், கட்டடங்கள் கட்டுவதும் தான் அபிவிருத்தி என்றால் மக்கள் அற்ற ஒரு மயானத்தையே நாம் காணவேண்டி வரும்.

இப்பகுதியில் வாழும் குடும்பங்கள் பல இன்று ஒரு நாள் சீவியத்திற்கு கூட கடற்தொழிலை செய்ய முடியாத நிலையில் உள்ளது. காரணம் இந்திய மீனவர்களின் ஊடுருவல், தென்பகுதி மீனவர்களின் வருகைன நவீன இயந்திர படகுகளின் துணையுடன் முல்லைத்தீவுக்குள் பிரவேசித்து அங்குள்ள மீன்வளத்தை சூறையாடிவிட்டுச் செல்கின்றனர். இதனால் இப்பகுதி மீனவர்களிற்கு மீன் என்பது ஒரு கனவாகிவிட்டது.

சிலபகுதிகளில் சீவல் தொழில் செய்யும் மக்களும் வாழ்கின்றார்கள். தற்போது மதுபானசாலைகளின் வருகை காரணமாக கள்ளு வாங்குபவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்பது ஒருபுறமிருக்க, அதைவிட மிகவும் முக்கியமான பிரச்சனை போரின் காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பல ஆயிரக்கணக்கான தென்னை, பனை மரங்கள் அழிக்கப்பட்டு விட்டது. இதனால் சீவல் தொழில் செய்யும் மக்கள் பலரும் தமது பரப்பரைத் தொழிலை இழந்து

தொடர்ச்சி 7-ம் பக்கம்



அபிவிருத்தி கோசங்களின் உண்மை முகத்தை தோலுரிக்கின்றன.

எல்லாவளமும் நிறைந்ததுதான் முல்லைத்தீவு மாவட்டம். யுத்த காலத்தில் கூட கடற்படையின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் மீன்பிடியில் ஈடுபட்டு வாழ்வை வளமாக நடத்தியவர்கள். உரத் தடை, கிருமிநாசினி தடை என வன்னிக்கான பொருளாதார தடையிலும் சுயசார்பு உற்பத்தியில் நிறைவு கண்டவர்கள். ஆனால் யுத்தம் முடிவடைந்து பல ஆண்டுகள் கடந்தும் ஒரு வயிறு சோற்றை பெற முடியாமலுள்ளவர்களின் கதைகள் யதார்த்தத்தை தோலுரிக்கின்றன.

முல்லைத்தீவின் கொக்கிளாய், தண்ணீருற்று, செம்மலை, அளம்பில், வலைஞர்மடம்,

**அதிபர்**

**மு/ தண்ணீருற்று இலங்கை திருச்சபை த. க. பாடசாலை**



இந்தப் பாடசாலை பழமை, பெருமை வாய்ந்த பாடசாலையாக காணப்பட்டாலும் தற்போது இந்தப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் பூதன்வயல், முறிப்பு, நீலகண்டபுரம், மாமூலை போன்ற பிரதேசங்களில் இருந்து நீண்ட தூரம் வந்து கல்வி கற்கின்றார்கள். இப்பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களாக கூலி வேலை போன்ற தொழிலை தற்போது செய்து வருகின்றார்கள். இதனால் அவர்களின் குடும்பநிலமை மிகவும் வறுமைக்கு இடமாகியுள்ளது. அதனால் இந்த மாணவர்கள் போசாக்கற்றவர்களாக காணப்படுவதுடன் பசியுடனேயே பாடசாலை வருகிறார்கள். இதனைவிட கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கப்பெற்றும் அதனை முழுமையாக பயன்படுத்த முடியாதவர்களாகவுள்ளனர். மாணவர்களுக்கான காலை பிரார்த்தனையின் போது அவர்கள் சோர்ந்திருப்பது, மயங்கி விழுவது போன்ற பிரச்சனைகளையும், வகுப்பு பாடநேரங்களில் படிப்பில் அக்கறை செலுத்தாது சோர்ந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.












# இலாபத்தை "லபக்"கிய அரசியல்வாதிகள்

# திடுக்... திக்கம்




செல்வம்
selvam@deepam.lk

திக்கம் வடிசாலையென்ற பெயர் ஒரு காலத்தில் இலங்கை 'குடிமக்களி'ற்கு தவிர்க்க முடியாத பெயராக இருந்தது. வெளிநாட்டு மதுவகைகள், தென்னிலங்கை மதுவகைகளிற்கு நிகராக திக்கம் வடிசாலையின் உற்பத்தி மது ஒருகாலத்தில் ஓகோவென கொடிகட்டி பறந்தது. திக்கம் வடிசாலை மதுவிற்கு சந்தையில் கேள்வியிருந்ததற்கு இன்னொரு காரணம் நீரிழிவு நோயாளிகளும் அதை பயன்படுத்தலாமென்பது.

ஒருகாலத்தில் கொடிகட்டி பறந்த திக்கம் வடிசாலை இப்பொழுது கேட்பாரில்லாமல் கைவிடப்பட்டு கிடக்கிறது. தொழிற்சாலைக்கு சொந்தமான வாகன ரயர்களை மூடி கரையான் புற்றெடுத்து வளர்ந்திருப்பதே நிலைமையின் தீவிரத்தை உணர்த்துகிறது.

இரண்டு வருடமாக செயலிழந்து போயுள்ள திக்கம் வடிசாலையின் பிரச்சனை என்னதான் என்பதை ஆராய புறப்பட்டால் முழுக்க முழுக்க அரசியல் மணக்கிறது. அரசியல்வாதிகளின் சுயநலம், அதிகாரிகளின் திருகுதாளங்கள் ஒரு சமூகத்தின் தலையில் இடியை இறக்கியுள்ளது.

ஆசியாவிலேயே மிகப்பெரிய பனம் வடிசாலையென்ற பெருமைக்குரியது வடமராட்சியிலுள்ள திக்கம் வடிசாலை. இது தனியே ஒரு தொழிற்சாலையல்ல. ஒரு சமூகத்தின் வாழ்க்கை. பனையை நம்பி வாழும் சமூகத்தின் வாழ்வாதாரம். பனம் உற்பத்திகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்க, திக்கம் வடிசாலை சீவல் தொழிலாளிகளிற்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தது. கள்ளு உற்பத்திக்கு நிலையான சந்தை கிடையாது. தவறணைகளை மட்டும் நம்பி கள்ளு உற்பத்தி செய்பவர்களால் எல்லா காலத்திலும் கிரமமாக வருமானமீட்ட முடிவதில்லை. இந்த நெருக்கடியை திக்கம் வடிசாலை நிவர்த்தி செய்தது. வடக்கின் பிரபலமான கள்ளு உற்பத்தியிடங்களிலிருந்தெல்லாம் கள்ளை கொள்வனவு செய்தது. அந்தக்காலம் முடிந்துவிட்டது. இரண்டு வருடங்களாக மூடப்பட்டுள்ளதால் அவர்கள் நடுத் தெருவிற்கு வந்துள்ளனர்.

திக்கம் வடிசாலை மூடப்பட்டபோது அங்கு பணியாற்றிய 23 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். அதுதவிர, தொழிற்சாலையை நம்பி வாழ்ந்த 6000 வரையானவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

யாழ். மாவட்ட அரசஅதிபராக இருந்த தே.நேசையாவால் 1984 ஆம் ஆண்டு இந்த வடிசாலை திறந்து வைக்கப்பட்டது. 2014 இல் இயங்க முடியாத நிலைக்கு செல்லும்வரை தொடர்ச்சியாக உற்பத்தியில் ஈடுபட்டுவந்தது.

திக்கம் வடிசாலை பனை அபிவிருத்தி சபைக்கு சொந்தமானது. வருடாவருடம் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து, வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி அதனை நிர்வகித்து வருவதே பல வருடங்களாக தொடரும் நடைமுறை. இப்பொழுது இருதரப்பும் இழுபறிப்பட்டுக் கொண்டிருப்பது திக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாததால் மதுவரி திணைக்களத்திடம் மதுபான உற்பத்திக்கான உரிமம் பெற முடியாத நிலையேற்பட்டுள்ளது.

1987இல் சேதமடைந்த தொழிற்சாலையை புனரமைத்து மீள ஆரம்பித்த பனை அபிவிருத்திசபை அதனை நடத்த விரும்புகிறது. கட்டிடம் அமைந்துள்ள காணி, இயந்திரங்கள் அந்த அமைப்பிற்கு சொந்தமானது. பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்கும் அதில் சிறிய காணி சொந்தமாக உள்ளது. இவர்கள் இருதரப்பிற்குமிடையில் இழுபறி உள்ளதை இருதரப்புடன் பேசியதிலிருந்து புரிந்துகொள்ள முடிந்தது.

வடிசாலையின் இயந்திரங்கள் பனை அபிவிருத்திசபைக்கு சொந்தமானவை. அவை இப்பொழுது பழுதடைந்துள்ளது. அவற்றை திருத்தினால் புதிய ஒப்பந்தம் செய்ய தயாராக உள்ளதாக கூட்டுறவு அமைப்பு கூறுகிறது. இயந்திரங்களை திருத்தி மீள தொழிற்சாலையை இயங்க வைக்க பெருந்தொகை பணம் தேவை, அது எங்களிடம் இல்லையென பனைஅபிவிருத்திசபை கையை விரிக்கிறது.

இரண்டுதரப்பின் இழுபறியில் பணியாளர்கள் நடுத்தெருவிற்கு வந்துள்ளனர். வடிசாலையின் வீழ்ச்சிக்கு அதிர்ச்சிக் காரணங்களை அவர்கள் சொல்கிறார்கள்.

**எம்.கணபதிப்பிள்ளை**
பனை அபிவிருத்திசபை



வடிசாலைக்காக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. வடிசாலையை இயக்க வேண்டுமென்றால் 100 மில்லியன் ரூபா செலவாகும். 25 இலட்சத்தை வைத்து ஒன்றும் செய்ய முடியாது. அதனால் அந்தப்பணத்தை இருப்பிலேயே வைத்துள்ளோம். வடிசாலை இழுபறிகள் தீர்க்கப்பட்டு விரைவில் இயங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கிறோம். பனை அபிவிருத்திசபைக்கு சொந்தமா, கூட்டுறவுக்கு உரியதா என்ற இழுபறியே இன்னும் முடியவில்லை. தங்களிடம் தரச்சொல்லி கூட்டுறவுத்துறை கேட்கிறார்கள். அதை பொறுப்பேற்கிறோம் என ஒரு கடிதம் எழுதித்தாருங்கள் என சொன்னோம். சரியாக கடிதம் எழுதத் தெரியாமல் இருக்கிறார்கள்.

இதனை மீள இயக்குவதென்றால் இன்னொரு பெரிய பிரச்சனையுள்ளது. திறமையான பணியாளர்கள் தேவை. முக்கியமான மார்க்கெட்டிங். விற்பனை உபாயங்கள் தெரிந்த புதியவர்கள் கட்டாயம் தேவை. 2014இல் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடத்தி, திக்கம் வடிசாலையில் பனை அபிவிருத்திசபை, கூட்டுறவு, விற்பனை உபாயங்கள் தெரிந்தவர்கள் இணைந்தே நடத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இப்பொழுது பாருங்கள், வடிசாலையை துப்பரவு செய்ய 45 ஆயிரம் ரூபா காசு கொடுத்தோம். அங்குள்ள பணியாளர்கள் அதை செய்யவில்லை. இப்பொழுது சுகாதாரபிரிவால் எமக்கு வழக்கு வந்துள்ளது. இப்படியான பணியாளர்களை வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்?

சீவல் தொழிலாளிகள் எதிர்கொள்ளும் தலையாய பிரச்சனையொன்று பற்றி யாரும் அக்கறை கொள்ளாமல் உள்ளனர். போயா தினத்தில் மதுபானம் விற்பது, வைத்திருப்பதை சட்டம் தடை செய்கிறது. இந்த சட்டம் மதுஉற்பத்தி நிலையங்கள், பார்களை பாதிக்காது. ஆனால் கள்ளு உற்பத்தியாளர்களை மோசமாக பாதிக்கிறது. போயா தினத்திலன்று கள்ளை வீட்டில் வைத்திருக்க முடியாது. சீவாமல் விட்டால் பாளை பழுதடைந்துவிடும். போயா தினத்திலன்று சீவி பனையடியில் கள்ளை ஊற்றச் சொல்லப்படுகிறது. இந்தச்சட்டத்தில் சீவல்தொழிலாளிகளின் நலன் கவனிக்கப்படவில்லையென்றும், அவர்களிற்காக விசேட திருத்தம் செய்யப்பட வேண்டுமென்றும் கூறுகிறார்கள்.

யாழ் மாவட்டத்தில் உள்ள 19 சங்கங்களில் இருந்தும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்தும் கள்ளு வடிசாலைக்கு கொண்டுவரப்படும். மாதாந்தம் சராசரியாக 25,000 30,000 போத்தல் சாராயம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தொழிற்சாலையாக இருந்தது. சந்தை தேவையை பொறுத்த உற்பத்தியை இன்னும் அதிகரிக்கும் வல்லமையையும் கொண்டிருந்தது. தற்போது 6 பணியாளர்கள் சம்பளம் இல்லாமல் இங்கு காவலாளிகளாக பணிபுரிகிறார்கள். ஏனெனில் பெறுமதி வாய்ந்த அசிட் அங்கு கையிருப்பில் உள்ளது.

இங்கு உற்பத்தி செய்யும் மதுசாரத்தை கொள்வனவு செய்ய தென்பகுதி வர்த்தகர் ஒருவர் ஐந்து இலட்சம் ரூபாவை முற்பணமாக செலுத்தி சில வருடங்களாகிறதாம். அதன்பின் வர்த்தகர் அது பற்றி கேட்கவில்லையென்கிறார்கள். வடிசாலைக்குள் அரசியல் இருக்கிறது, அதுதான் இதில் விளையாடுகிறதென்றும் பணியாளர்கள் கூறுகிறார்கள்.

அவர்கள் சொல்லும் முக்கிய காரணம், அரசியல் இழுபறி. பனை அபிவிருத்திசபை அதிகமும் அரசியல் மயப்பட்டது. அரசுடன் நெருக்கமாக இருக்கும் வடக்கு அரசியல்வாதியொருவருக்கு அமைச்சர் பதவி கொடுக்கும்போது பனை அபிவிருத்திசபை அவர்களின் கீழ் கொண்டு வரப்படும். அப்பொழுது கட்சிக்கு சார்பானவர்கள் அந்த அமைப்பில் உயர்பதவிகளிற்கு வருவது வழக்கம். கட்சி சார்பானவர்கள் உயர் பதவிகளிற்கு வந்தால் அதனுடன் தொடர்புடைய அமைப்புக்கள் கட்சியின் கட்டுப் பாட்டில் வருவது வழக்கம். இப்படியொரு விபத்தைத்தான் திக்கம் வடிசாலை சந்தித்துள்ளது. பல்வேறு அமைச்சுக்களும் வடிசாலையால் இலாபம் சம்பாதித்து, ஊழியர்களை நடுத்தெருவில் நிறுத்திவிட்டு போய்விட்டார்கள் என்பதே ஊழியர்களின் குற்றச்சாட்டு.





திக்கம் வடிசாலை மூடப்பட்டதற்கு தனியே எந்த அரசியல்வாதியையும் குற்றம் சொல்ல முடியாது. அதில் பலருக்கு பொறுப்புள்ளது.

திக்கம் வடிசாலை விவகாரத்தில் அதனை இறுதியாக நிர்வகித்த இரண்டு அமைச்சுக்களின் திட்டமிடாத நடவடிக்கைதான் சடுதியான வீழ்ச்சிக்கு காரணமென்கிறார்கள்.



**வ.மதுமதி**
வடமாகாண கூட்டுறவு ஆணையாளர்

பனைஅபிவிருத்திசபை பழுதடைந்த இயந்திரங்களை திருத்தி தந்தால் கொத்தணி அதனை பொறுப்பேற்று நடத்தும். இயந்திரங்களை திருத்த பெருந்தொகை நிதி தேவை. கூட்டுறவால் அவ்வளவு பெரிய நிதியை முதலிட முடியாது. இந்த பிரச்சனைதான் உள்ளது. கூட்டுறவிலிருந்து சரியான கடிதம் அனுப்படவில்லையென்ற பனைஅபிவிருத்திசபை தலைவரின் குற்றச்சாட்டு தொடர்பாக கருத்து சொல்ல விரும்பவில்லை.

உள்ளூர் உற்பத்திகள் இலாபமீட்டுவதென்பது குதிரைக்கொம்பு. வரிச்சலுகை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் திக்கம் இலாபத்தை பெறும்போது, அது வடிசாலையின் வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படவில்லை.


தி.மகேஸ்வரன் இந்துகலாசார அமைச்சராக இருந்த சமயத்தில், திக்கம் வடிசாலையின் நிதி இந்துகலாசார அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது. மகிந்த ராஜபக்ச ஆட்சி பீடமேறிய பின்னர் டக்ளஸ் தேவானந்தாவின் பாரம்பரிய, சிறுகைத்தொழில் அமைச்சிற்கு கீழ் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி கொண்டுவரப்பட்டது. அப்பொழுது திக்கம் வடிசாலை அதன் கீழேயே இருந்துள்ளது. திக்கம் வடிசாலையின் வருவாயில் மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபாயை சமூக அபிவிருத்திநிதி என்ற பெயரில் அந்த அமைச்சிற்கு வடிசாலை வழங்கியுள்ளது.

பனையை நம்பி வாழும் ஒரு சமூகத்தின் தொழிற்சாலையை வளர்த்து, அந்த சமூகத்தை பொருளாதாரரீதியில் வளர்ச்சியடைய வைக்க வேண்டுமென்ற எந்த சிந்தனையும் நமது அரசியல்வாதிகளிடம் இருக்கவில்லை. அதிகாரிகளிடமும் இருக்கவில்லை.

வடிசாலைபணியாளர்களுடன் நாம்பேசிய போது, பனை அபிவிருத்திசபை, பனை தென்னை வன அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணியிலுள்ள சில அதிகாரிகள் மீதும் அதிர்ச்சி குற்றச்சாட்டுக்களை வைத்தனர். வடிசாலையை நிர்வகித்த முன்னைய அமைச்சிற்கு நெருக்கமான அதிகாரிகள் பனை அபிவிருத்திசபை, பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் கொத்தணியிலும் உள்ளனர், வடிசாலையைஇயக்கஎடுக்கும்முயற்சிகளிற்கு அவர்கள்தான் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்கிறார்கள்.

பாரம்பரிய, சிறுகைத்தொழில் அமைச்சிற்கு மாதாந்தம் இரண்டு இலட்சம் ரூபாவை சமூக அபிவிருத்தி நிதியென கொடுத்த அதிகாரிகள், பணியாளர்களின் சம்பள நிலுவையை பற்றி யோசிக்கவில்லை. இவர்கள் மக்களிற்காக தொழிற்சாலையை இயக்கினார்களா அல்லது கட்சிக்காக இயக்கினார்களா என்றும் பல தொழிலாளர்கள் கொந்தளித்தனர்.

திக்கம் வடிசாலை எதிர்காலத்தில் இயங்குவதாக இருந்தால் அரசியல்சாராத அமைப்பொன்று அதனை எடுத்து நடத்துவதுதான் முறையானதாக இருக்கும் என்பதே பெரும்பாலானவர்களின் கருத்து. பனை அபிவிருத்தி சபை அரசியல் மயப்பட்ட அமைப்பு, அவர்கள் நிர்வகிப்பது மீண்டும் தொழிற்சாலையை முடக்குவதில்த்தான் போய் முடியும் என பகிரங்கமாக கூறுகிறார்கள் பணியாளர்கள். அதுபோல கடந்த அரசிற்கு விசுவாசமானவர்களாக கொத்தணியிலிருந்த அதிகாரிகள் இருந்ததையும் பணியாளர்கள் குறிப்பிட தவறவில்லை. முழுமையான அரசியல்நீக்கம் செய்யப்பட்ட நிர்வாகமொன்றின் அவசியத்தை தொழிலாளர்களுடன் பேசியபோது உணர முடிந்தது.



**சி.சிவகுமார்**
அல்வாய்

20 வருடங்கள் இந்தவடிசாலையில் பணியாற்றினேன். ரைப்பிஸ்ராக வந்து பின்னர் கிளார்க்காக பணியாற்றினேன். வடிசாலை இயங்காத போதும் தொடர்ந்து 3 வருடமாக காவலாளியாக சம்பளம் இல்லாமல் பணியாற்றி வருகிறேன். இந்த மூன்று வருடங்களில் 70 ஆயிரம் ரூபாய் பணம் மட்டும்தான் தந்திருக்கிறார்கள். நகைகளை அடகுவைத்தும் வங்கியில் கடன் பெற்றும் மீளமுடியாமல் இருக்கிறேன். அடுத்தகட்டம் என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கிறது.

---

5-ம் பக்க தொடர்ச்சி

வருமானத்தைப் பெற முடியாது போராடும் நிலையில் இருக்கிறார்கள். போரின் போது பயன்படுத்தப்பட்ட குண்டுகளின் நச்சுப் பதார்தங்கள் கூட அப்பகுதியில் விவசாய நடவடிக்கையின் விளைச்சலைக் கட்டுப்படுத்தியே வருகிறது. இதனால் விவசாயத்தில் கூட போதிய விளைச்சல் இன்றி மக்கள் இன்றும் பல்வேறு வாழ்வாதார சிக்கல்களை எதிர்நோக்கியே வருகிறார்கள்.

இதுதவிர, போரின் கோரத்தாண்டவத்தால் பெற்றோரை இழந்து பிறரின் அரவணைப்பில் வளரும் மாணவர்கள், குடும்பத் தலைவனை இழந்து வாழும் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ள மாணவர்கள் ஆகியோரின் நிலை மிகவும் மோசமாகவே உள்ளது.




ஆண்கள் இருந்தும் தொழில் செய்ய முடியாத நிலை ஒரு புறம் இருக்க, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொழில் இன்றியே வாழும் பரிதாப நிலை தொடர்கிறது. அவர்களுக்கான வாழ்வாதார கட்டமைப்புக்கள் எவையும் இதுவரை ஒழுக்காக அரசாங்கமும் சரி, மாகாணசபையும் சரி செய்யவில்லை. இதனால் நாளாந்த வயிற்றுப் பசியைக்கூட இந்தக் குடும்பங்கள் போக்க முடியாது திணறுகின்றது.

**சி.சிவகாந்தன்,**
தலைவர்,
இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை நிறுவனம்

இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை நிறுவனமானது இலண்டன் நம்பிக்கை ஒளி நிறுவனத்தின் இணை நிறுவனமாகும். புலம்பெயர் எமது உறவுகளால் நம்பிக்கை ஒளிக்கு வழங்கப்படும் நிதி மூலம் நாம் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதிகளில் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கான பல உதவித் திட்டங்களை செய்து வருகின்றோம். அதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் சில பாடசாலைகளில் பசியினால் காலை பிரார்த்தனையின் போது பல மாணவர்கள் மயங்கி விழுவதாகவும், அவர்கள் ஒருவேளை சாப்பாட்டிற்கே கஸ்ரப்படுவதாகவும் எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையில் நாம் முல்லைத்தீவில் இவ்வாறான பிரச்சனைகள் காணப்படும் கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, வலைஞர்மடம் அரசினர் தமிழ் கலவன் பாடசாரைல, தண்ணீருற்று இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு காலை பிரார்த்தனைக்கு முன்பாக தற்போது மூன்று மாதமாக ஒரு கப் பாலும் ஒரு சத்துணவும் (கடலை, கௌப்பி, சத்துமா, இலைக்கஞ்சி) வழங்கி வருகின்றோம். புலம் பெயர் மக்களின் உதவியுடன் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இன்னும் இவ்வாறான பாடசாலைகள் இருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளது. இருப்பினும் எம்மிடம் உள்ள நிதி வசதிக்கேற்ப அதனை தொடர்ச்சியாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.



வறுமைக்கு மத்தியிலும் படித்து சாதித்து விட வேண்டும் என நினைக்கும் மாணவர்கள் கடும் பசியுடன் பாடசாலை செல்கிறார்கள். 'பசி வந்தால் பத்தும் பறந்திடும்' என்பார்கள். அது போலவே மாணவர்கள் பசிக்கு மத்தியில் சென்று காலைப் பிரார்த்தனையில் பங்கேற்கின்ற போது பல மாணவர்கள் மயங்குகிறார்கள்.

தொடரும் இந்த அவலநிலைக்கு முடிவு தான் என்ன..? இந்த மாணவர்கள், குடும்பங்களின் வாழ்வில் மீண்டும் விருத்தியை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு யாருடையது...? என்பது சிந்திக்க வேண்டியதாகவுள்ளது. இந்நிலையில் வடக்கு, கிழக்கு பகுதியில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செயற்பட்டும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளை நிறுவனம் லண்டன் நம்பிக்கை ஒளி தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் இப்பாடசாலை மாணவர்களுக்கான காலை சாப்பாட்டை வழங்க முன்வந்துள்ளது. ஆனால் இந்த நிலை எவ்வளவு காலத்திற்கு நீடிக்கப் போவது என்பது ஒரு புறமிருக்க, பாடசாலைக்கு வரும் பிள்ளைகள் தவிர வீட்டில் உள்ள மற்றைய சின்னஞ் சிறு பிள்ளைகளின் நிலை பட்டினிப் போராட்டத்தால் தொடர்கிறது.

இதற்கு முடிவு தான் என்ன...? இந்த மக்களின் வாழ்வா தாரத்தை கட்டுவதற்கான உதவிகள் வழங்கப்படுவதன் மூலமே வளம் நிறைந்த முல்லைத் தீவை நாம் மீண்டும் பார்க்க முடியும். அதுவரை இம் மக்களின் வயிற்றுப் பசிக்கான பட்டினிப் போராட்டம் தொடரவே போகிறது.



# குசும்புக்காரன் பக்கம்

வடமாகாண கணக்கு எண்ணும் கல்வித்துறையில் பிரச்சினை ஒன்று எழுந்துள்ளது. 'கொதியன்' என்ற பட்டப்பெயரில் அழைக்கப்படுபவரால் கொதித்துப் போயுள்ளனர் ஆசிரியர்கள். இலங்கை ஆசிரிய சேவையைச் சேர்ந்த 'கொதி' என்றவர் ஓய்வு பெற்றும் இரு வருடங்களுக்கு மேலாக சேவையில் இருப்பதுதான் சர்ச்சைக்கு காரணம்.

கடந்த வாரம்தான் இந்த சர்ச்சை உச்சமடைந்தது. யாழ்ப்பாண கல்வி வலயத்தில் நடைபெற்ற உயர்தர கணித பாடத்துக்குரிய பொதுத் திருத்த செயற்பாட்டிலும் 'கொதி'யின் கை ஓங்கியிருந்தது. பரிட்சைத் திருத்தம் நடந்த முழு நேரத்திலும் உதவிப் பணிப்பாளர் மண்டபத்தில் இருக்கவில்லை. அவர் போனதும் 'கொதி'தான் உயர்அதிகாரி போல் செயற்பட்டார்.

அவர் தன் கைப்படவே புள்ளியிடும் திட்டத்தை தயாரித்து வந்த ஆசிரியர்களுக்குக் கொடுத்தார். இது தற்போது சேவையில் உள்ள கனிஷ்ட மற்றும் சிரேஸ்ட கணித ஆசிரியர்களுக்கு எரிச்சலை ஊட்டியது. உதவிப் பணிப்பாளர் இவ்வாறு இவருக்கு முழு அதிகாரத்தையும் கொடுத்தது E.code மற்றும் FR இற்கும் முரணானது என்றும் அவர்கள் குமுறுகிறார்கள்.

பொறுக்க முடியாத கணித ஆசியர்கள் சிலர் இலங்கை ஆசிரியர் சேவை யாழ் கிளைக்கு அறிவிக்க அவர்கள் உடனடியாக செயலில் இறங்கினார்கள்.

அதன் உயர் அதிகாரி ஒருவர் முதலில் மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டபோது 'இணைந்த கணிதம் அவருக்கு மாத்திரம் தான் தெரியும். அதுதான் அவரை வள ஆளணியினராக வைத்திருக்கிறோம்' என்றாராம்.

இது வடமாகாண கணித ஆசிரியர்கள் அனைவரையும் அவமானப் படுத்துவதாகவே ஆசிரியர்கள் கருதுகிறார்கள். இதேவேளை வள ஆளணி ஒருவர் பரிட்சை வினாத்தாள் திருத்துவதற்கு எந்த அடிப்டையில் தேவைப்படுகிறார் என்றும் கேள்வி கேட்கிறார்கள்.

உதவிப் பணிப்பாளர் தந்த தகவல்கள் முழுமையானதாகவோ தெளிவானதாகவோ இல்லாது இருந்ததால் ஆசிரிய சங்க அதிகாரி 'யாழ்ப்பாண கல்வி வலய மண்டபத்தில் இப்படியான ஒரு செயற்பாடு நடைபெறுகிறது தெரியுமா' என்று செயலாளரிடம் கேட்டுள்ளார்.

'இப்படி ஒன்று நடைபெறுவது எனக்குத் தெரியாது' என்று ஒற்றை வார்த்தையில் அவர் மறுமொழி சொன்னாராம்.

'கொதி'யர் பற்றி வேறும் முறைப்பாடுகள் உள்ளன. முன்னோடிப்பரீட்சைகளை நடத்தும் யாழ்மாவட்டத்தில் அமைந்துள்ள நிறுவனமொன்றும் 'கொதிய'ரின் நடவடிக்கைகளால் தள்ளாட ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த ஐந்து மாதத்திற்கு மேலாக நடைபெறவில்லை. நடைபெறாமல் தடுப்பதன் பின்னணியில் 'கொதியர்' இருக்கிறாராம். அதிகாரிகள், அரசியல்வாதிகளை வளைத்துப்போட்டு பொதுக்கூட்டம் இன்றுவரை நடக்காமல் தடுத்து வருகிறார்.

இந்த அடாத்தான செயற்பாடு பற்றி பலமுறை செயலாளர், போசகரிடம் பலரும் முறையிட்டுள்ளனர். குழுக்களாக கையொப்பம் வைத்தும் கொடுத்துள்ளனர். தீர்வுதான் இல்லை.

'கொதியர்' பற்றி நிறைய குற்றச்சாட்டுக்கள் வைக்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தில்; ஒரு போதும் களக்கற்கைகள் இவ்வாறு கைவிடப்பட்டிருந்ததில்லை. இதைப் பற்றி களக்கற்கைகளில் ஆர்வம் உள்ள சில அங்கத்தவர்கள் கேட்கும் போது மிரட்டல் பாணியில் பதிலளிக்கிறாராம்.

அவரது சம்பளம் செயற்குழுவில் பல அங்கத்தவர்களுக்குத் தெரியாது. கல்வித் தகுதி மிகச் சராசரியானது. அதிபர்கள் சேவை இலங்கை கல்வி நிர்வாக சேவை முதுமானிப்பட்டங்கள் எதுவும் இல்லை. சிறிது காலம் செயற்பாட்டு உதவிக் கல்விப் பணிப்பாளராக இருந்தவர்.

காரியாலய நேரம் பேணப்படுவதில்லை. தனது சொந்த நிறுவனம் போன்று நினைத்த நேரம் திறந்து நினைத்த நேரம் மூடுவார். விவசாய அமைச்சர் மே 12 ஆம் திகதி காரியமொன்றிற்காக தனது அதிகாரிகளை காரியாலயத்துக்கு அனுப்பிய போது காரியாலயம் மூடி இருந்தது.

2இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான போட்டோ கொப்பி மிசின் வாங்கும் போது முறையான செயற்குழுக் கூட்டம் நடைபெறாமல் தானே நேரடியாக வாங்கினார். இங்கு அடிப்படை நிதிப்பிரமானங்கள் எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை என்று கணக்காய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.


3-ம் பக்க தொடர்ச்சி

மக்கள் கவலையாக இருக்கிறார்கள். ஆனால் உண்மை அதுவல்ல. உண்மை என்னவென்றால், அரசாங்க அதிபர் அந்த விகாரையின் மதகுருவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அதாவது கடற்பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து அனுமதியைப் பெறுமாறு.

நான் அந்த இடத்திற்கு நேரடியாக விஜயம் செய்து பார்த்தேன். அந்தக் கோவிலை சிலை மறைக்கக் கூடியதாக இல்லை. ஏனென்றால் சிலை ஒரு சுவரல்ல. அதேநேரம் சிலையும் இன்னமும் அமைக்கப்படவில்லை.

புத்தர்சிலையால் கோவில் மறைக்கப் படுகிறதென கோவில் மதகுரு (பூசாரி) சொன்னால் அதை உண்மையென நாங்கள் ஏற்றுக்கொள்வதா? அந்தச் சிலையால் கோவில் மறைக்கப்படுகிறதா என்பதற்குப் பதில் எந்த இடத்தில் நாங்கள் நிற்கிறோம் என்பதைப் பொறுத்தது. உதாரணமாக நாங்கள் சில பேர் இதிலே இருக்கிறோம் என்றால் ஒருவரையொருவர் எந்த இடத்தில் நின்று பார்க்கப்போகிறோம் என்பதே முக்கியம். அவரை ஒருவர் முன்னாலும் மற்றையவர் பின்னர் அல்லது மற்றப் பக்கமாக நின்று பார்த்தால் ஒருவரை ஒருவர் மறைப்பதாக இருக்கும். அதற்காக மறைக்கப்படுகிறது என்று சொல்ல முடியுமா?

வடக்கிலே சொல்கிறார்கள் நீங்கள் இந்த



இடத்திற்கு (ஆளுனர் பதவி) பொருத்தமில்லை வெளியேறிச் செல்லுங்கள் என்று. அதனை எல்லோரும் சொல்லவில்லை. இங்கிருக்கின்ற தீவிரவாதிகள்தான் சொல்கிறார்கள். அதே போல தெற்கிலுள்ள தீவிரவாதிகளும் சொல்கிறார்கள், நீங்கள் அந்த இடத்திற்குப் பொருத்தமில்லை வெளியேறுங்கள் என்று. அதிலும் தெற்கிலே ஓய்வு பெற்ற சில படையதிகாரிகளே சொல்கின்றார்கள். வடக்கிலும் தெற்கிலும் தீவிரமானவர்கள் அவ்வாறு சொல்கின்றார்கள். அவர்கள் ஏன் அவ்வாறு கூறுகின்றார்கள் என்றால் அவர்கள் தீவிரவாதிகளும் அடிப்படை வாதிகளும். ஆனால் பெரும்பாலான அப்பாவி மக்கள் அவ்வாறு கூறவில்லை.

***தீபம்: வடக்கு கிழக்கு மாகாணசபைகள் பற்றிய அதிக சர்ச்சைகள் தென்னிலங்கையில் மேலெழுந்துள்ளன. மாகாண சபைகள் தொடர்பான எதிர்மறை உணர்வு சில சக்திகளால் கட்டியெழுப்பப்படுவதாக நினைக்கின்றீர்களா? அல்லது அது நியாயமானதா?***

***ஆளுனர்:*** நீங்கள் விளங்கிக் கொள்ளுங்கள், தீவிரவாதிகளும் அடிப்படை வாதிகளுமே இந்த விடயங்களிலிருந்து இலாபமீட்டப் பார்க்கிறார்கள். இதில் குறிப்பாக கிழக்கு மாகாண விடயம் இரண்டு பேருக்கு இடையிலான சூடான வாக்குவாதம். ஆனால் அது பெருப்பிக்கப்பட்டு இனத்துவ ரீதியான பரிமாணத்திற்கு கொண்டு வரப்பட்டது.

***தீபம்: வடக்கு ஆளுனராகப் பதவியேற்ற பின்னர் முன்னுரிமை கொடுக்க வேண்டிய பணிகளென எதையாவது பட்டியல்ப் படுத்தியிருக்கிறீர்களா?***

***ஆளுனர்:*** என்னுடைய முன்னுரிமை நல்லிணக்கச் செயற்பாடு. மத்திய அரசிற்கும் மாகாண அரசிற்குமிடையே ஒருங்கிணைப்பாளராக இருந்து இவற்றைச் செய்வேன். மத்திய அரசின் கொள்கைகளில் முதன்மையாக இருக்கின்ற நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் என்னால் இயன்றளவைச் செய்வேன்.

***தீபம்: யாழ் குடாநாட்டுத் தண்ணீரை அருந்துவதில்லை என பகிரங்கமாகவே கூறியிருந்தீர்கள். நீங்கள் அருந்தாத இந்த நீரை இலட்சக்கணக்கான மக்கள் அருந்துகிறார்கள். நீர்ப்பாதிப்பை ஏன் முன்னுரிமையின் அடிப்படையில் நிவர்த்தி செய்ய முடியாமல் உள்ளது?***

***ஆளுனர்:*** நான் அப்படிக் கூறவில்லை. யாழ் குடாநாட்டு நீரை அருந்தவில்லை என்று சொல்லவில்லை. எனக்கிருக்கும் சிறுநீரக நோய் காரணமாக நான் வரும் பொழுது என்னுடைய வாகனத்தில் அங்கிருந்து நீரைக் கொண்டு வருகிறேன். அதேநேரம் யாழ்ப்பாண மக்களுடைய பிரச்சனைகளையும் நான் அழுத்தமாக வெளிப்படுத்துகிறேன். அவர்களுக்கு தூயநீர் கொடுப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட . வேண்டுமென்று நான் கூறுகின்றேன். யாழ்ப்பாண மக்களுடைய பிரச்சனைகளை இலங்கை முழுவதற்கும் நான் தெரியப்படுத்துகிறேன். நான் யாழ்ப்பாணத் தண்ணீரை அருந்தவில்லை அல்லது அருந்துவதற்கு விருப்பமில்லை என கூறியதாக விடயம் திரிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

***தீபம்: வடக்கு தெற்கு உறவை கட்டியெழுப்ப என்னவகையான நடவடிக்கைகள் செய்யலாம்?***


***ஆளுனர்:*** நாங்கள் ஒரு பூகோளக் கிராமத்தில் வாழ்கிறோம். எல்லா நாடுகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டனவாகவும் ஒன்றுடன் ஒன்று தங்கியிருப்பதாகவுமே இருக்கின்றன. எந்த நாடும் சுயாதீனமாக இல்லை. எல்லா நாடுகளும் ஒன்றின் மீது ஒன்று தங்கியிருக்கின்றன. அதே போன்று தான் வடக்கும் தெற்கும். பரஸ்பரம் ஒன்றின் மீது மற்றையது தங்கியிருக்கிறது.

இன, மத, மொழி பேதங்களைக் கடந்து நாங்கள் ஒன்றித்துச் செயற்பட வேண்டுமென்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். எங்களுடைய வரலாற்றைப் பார்த்தால் நாங்கள் இணைந்தே இருந்திருக்கின்றோம். பண்பாட்டடிப்படையில் பார்த்தால் இந்து மதமும் பௌத்த மதமும் இந்தியாவிலிருந்தே இங்கே வந்து சேர்ந்தவை. சிங்களவர்கள் தமிழர்கள் இந்தியாவில் இருந்தே வந்தார்கள். சிங்கள மன்னர்கள் தமிழ் இளவரசிகளை திருமணம் செய்தார்கள். இதனுலீடாக இரத்தம் கலந்திருக்கின்றது. சமயங்கள் கலந்து இருக்கின்றன. இந்துக் கடவுள்களும் பௌத்த கடவுள்களும் ஒரே இடத்தில் இருக்கிறார்கள். இதில் விஷ்ணு கணபதி எல்லாம் பௌத்த விகாரைக்குள்ளும்; இருக்கிறது. ஆனால் நாங்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம்.

இதற்கான தீர்வென்பது வெறுமனே அரசாங்கம் மட்டுமல்ல சமயத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள் அனைவரும் ஒண்றிணைந்து இனவாத உணர்வுகளுக்கு எதிராக சித்தாந்த ரீதியான போராட்டங்களை நடத்த வேண்டும். அரசை மட்டும் நம்பியிராது இன, மத, மொழி பிளவுகள் பிரிவினைகள் என்பவற்றிற்கு எதிராக சமய சமூகத் தலைவரகள் இணைந்து போராட்டங்களை நடத்தி நாங்கள் முன்னேற வேண்டும்.

தீபம்: நாட்டில் அமைதியான நிலைமை தொடர்வதற்கு எவ்வாறான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்?

ஆளுனர்: இதற்கு ஏற்கனவே தயாரித்து வைத்த பதில் இல்லை. புத்தர் யேசுநாதர் எல்லோரும் சகவாழ்வுப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 2500 வருடங்களாக இந்த மனிதசாதி ஒருவரோடு ஒருவர் சண்டைபிடித்துக் கொண்டே இருக்கின்றார்கள். இதற்கு ரெடிமேட் ஆன்சர் இல்லை. நாங்கள் தொடர்ச்சியாக கஸ்ரப்பட்டு தொடர்ந்தும் சமாதானத்திற்காக முயற்சிக்க வேண்டும்.



எம்.ஜி.ஆருடன் மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் எம்.கல்யாணசுந்தரம்.

எம்.ஜி.ஆர்
100
நெடுந்தொடர் 8

# எம்.ஜி.ஆரின் பொதுவுடமை

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்** பொவுடமைக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டவர். திராவிட இயக்கங்களும் பொதுவுடமை கொள்கையை ஏற்றுக் கொண்டவைதான். எம்.ஜி.ஆர். தலைவர்களாக ஏற்றுக் கொண்டிருந்த பெரியாரும், அறிஞர் அண்ணாவும் ஏற்றத் தாழ்வுகளற்ற சமத்துவ சமூகம் அமைவதற்குத்தான் போராடினர்.

தனது படங்களில் பொதுவுடமைக் கொள்கைகள் தொடர்பான கருத்துகளையும் பாடல்களையும் எம்.ஜி.ஆர். இடம்பெறச்செய்வார். ஆரம்ப காலங்களில் எம்.ஜி.ஆரின் பொதுவுடமைக் கொள்கைகளுக்கு ஏற்ற பாடல்களுக்கு வரிவடிவம் தந்தவர் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த பாட்டுக்கோட்டையாக விளங்கிய பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகையான 'ஜனசக்தி' யில் அவர் எழுதிய பாடலான 'சும்மா கிடந்த நிலத்தைக் கொத்தி..' பாடலை தனது 'நாடோடி மன்னன்' படத்தில் எம்.ஜி.ஆர் பயன்படுத்திக் கொண்டார். அந்தப் பாடல் வரிகளில் திரைக்கு ஏற்றவாறு பின்னர் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. 19 ஆண்டுகளுக்குப் பின்னர் நடக்கப் போவதை தீர்க்க தரிசனத்துடன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதியது போல அமைந்து விட்ட அந்த வரிகள்தான்... 'நானே போடப் போறேன் சட்டம், பொதுவில் நன்மை புரிந்திடும் திட்டம்... நாடு நலம் பெறும் திட்டம்...'

அதற்கேற்ப, நாடு நலம் பெறும் திட்டங்களை இயற்றக் கூடிய இடத்தில், 1977ம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று எம்.ஜி.ஆர். முதல்வராக ஆகிவிட்டார். எதேச்சையாக இருந்தாலும் அதை முதலில் சொன்ன பெருமை பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்துக்கு உண்டு.

எம்ஜிஆருக்கு உள்ள வசீகர சக்தி எல்லோரும் அறிந்ததுதான். அதற்கான பல நிகழ்ச்சிகளில் உதாரணத்துக்கு ஒன்று.

கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் பால தண்டாயுதம். திமுகவை கடுமையாக விமர்சித்து வந்தவர். குறிப்பாக, அப்போது திமுகவில் இருந்த எம்.ஜி.ஆரை மிகக் கடுமையாக தாக்கி பேசியவர். பாலதண்டாயுதம் என்றில்லை திமுகவில் இருந்து பின்னர் காங்கிரஸில் இணைந்த கவியரசு கண்ணதாசன் உட்பட பலரும் குறிவைத்து எம்ஜிஆரை கடுமையாக விமர்சனம் செய்தே பேசுவார்கள்.

அதற்கு அவர்கள் சொல்லும் காரணம் அவர்களைப் பொறுத்தவரை சரிதான். 'அறிஞர் அண்ணாவால் முகத்தை காட்டினாலே 30 ஆயிரம் வாக்குகள் கிடைக்கும் என்று பாராட்டப்பட்ட எம்ஜிஆர்தான் திமுகவின் வாக்குகளை ஈர்க்கும் சக்தியாக விளங்குகிறார். எனவே, எம்ஜிஆரை தாக்கி அவரை விமர்சனம் செய்வதன் மூலம் திமுகவை பலவீனப்படுத்தி விடலாம்' என்பது அவர்கள் கணக்கு. அப்படித்தான் பால தண்டாயுதமும் எம்ஜிஆரை விமர்சித்து வந்தார்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதுபெரும்தலைவரான ஜீவா அவர்களின் மீது பேரன்பு கொண்டவர் பாலதண்டாயுதம். ஜீவாவின் மரணத்துக்குப் பின் அவருக்கு சிலை எழுப்ப பாலதண்டாயுதம் முடிவு செய்தார். நேர்மைக்கும் எளிமைக்கும் உதாரணமாகத் திகழ்ந்த, எல்லா தரப்பினரின் மதிப்பையும் பெற்றிருந்த ஜீவாவின் சிலையை நிறுவுவதற்காக கட்சி வேறுபாடு இல்லாமல் எல்லா கட்சிகளையும் சேர்ந்தவர்கள், பிரமுகர்களிடம் நிதி திரட்டினார் பாலதண்டாயுதம். ஓரளவு நிதி சேர்ந்திருந்தது.

'எம்.ஜி.ஆரிடமும் நிதி கேட்கலாமா?' என்று பாலதண்டாயுதத்துக்கு ஒரு யோசனை. ஆனால், எம்.ஜி.ஆரைப் பற்றிய தனது கடுமையான விமர்சனங்கள் அவரது மனதில் நிழலாடி தயக்கத்தை ஏற்படுத்தின. இருந்தாலும் எம்.ஜி.ஆரை சந்தித்து ஜீவாவின் சிலைக்கு நிதி கேட்பது என்று முடிவு செய்து அவரை சந்தித்தார். 'தனக்கு வரவேற்பு எப்படி இருக்குமோ' என்று தயங்கிபடி சென்ற பாலதண்டாயுதத்தை அகமும் முகமும் மலர மகிழ்ச்சியுடன் வரவேற்றார் எம்.ஜி.ஆர்.

வந்த விவரம் கேட்டதும் எம்.ஜி.ஆருக்கு மேலும் மகிழ்ச்சி. மனபூர்வமாக நன்கொடை வழங்குகிறேன் என்றார். பாலதண்டாயுதத்துக்கும் மகிழ்ச்சி ஒருபுறம். அதோடு, தான் பல சந்தர்ப்பங்களில் தாக்கி பேசியும் அதுபற்றிய விவரமே தெரியாதவர் போல தன்னுடன் எம்.ஜி.ஆர். இன்முகத்துடன் பழகியதால் வியப்பு மறுபுறம்.

"சிலை வைக்க உங்கள் கணக்குப்படி எவ்வளவு செலவாகிறது?" எம்.ஜி.ஆர். கேட்டார்.

குறிப்பிட்ட தொகையை சொல்கிறார் பால தண்டாயுதம்.

"அந்த தொகைதான் என் நன்கொடை" இது எம்.ஜி.ஆர்.

பாலதண்டாயுதத்துக்கு இன்ப அதிர்ச்சி. பின்னர், அவரிடம் "நான் கம்யூனிச கொள்கையில் ஈடுபாடு கொண்டவன். என் படங்களில் பாடல்கள், வசனங்கள் மூலம் கம்யூனிச கொள்கைகளையும் சொல்லி வருகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் பொதுவுடமை கொள்கை உடன்பாடே. சிறந்த பேச்சாளரான நீங்கள் உங்கள் பேச்சால் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். உங்கள் ஆற்றலை என்னை தாக்குவதில் வீணடிக்கிறீர்களே? பொதுவுடமை கொள்கையை பரப்புவதில் நீங்கள் மேலும் சிறப்பாக தொண்டாற்ற வாழ்த்துகள்" என்றார் எம்.ஜி.ஆர்.

அவரது உயர்ந்த குணத்தையும் பண்பையும் அறிந்து நெகிழ்ந்த பாலதண்டாயுதம், அன்று முதல் எம்.ஜி.ஆரை தாக்குவதை நிறுத்தியதோடு மட்டுமல்ல அவரது குணநலன்களை நண்பர்களிடம் புகழ்ந்தார்.

அதோடு மட்டுமல்ல திமுகவில் இருந்து நீக்கப்பட்டு எம்.ஜி.ஆர். அதிமுகவை தொடங்கிய பின் கம்யூனிஸ்ட்கள் அவருக்கு ஆதரவு அளித்தனர். "ஊழலை எதிர்க்கிறார் லஞ்சத்தை எதிர்க்கிறார் என்பதற்காக எம்.ஜி.ஆர். மீது ஒரு துரும்பு பட்டாலும், ஒரு கீறல் பட்டாலும் தமிழ்நாட்டில் மோசமான விளைவுகள் ஏற்படும் என்பதை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எச்சரிக்கையாக பிரகடனப் படுத்துகிறேன்" என்று சென்னை கோடம்பாக்கத்தில் நடந்த கூட்டத்தில் பாலதண்டாயுதம் பேசும் அளவுக்கு எம்.ஜி.ஆர். மீது அவர் அன்பு கொண்டார்.

மாற்றுக் கருத்து கொண்டவர்களையும் தன்பால் ஈர்த்துக் கொள்ளும் வசீகரத்தின் பெயர் எம்.ஜி.ஆர்.

அதிமுக தொடங்கிய 7 மாதங்களிலேயே திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி இடைத் தேர்தல் 1973 மே 20ம் தேதி நடந்தது. இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளும் அதிமுகவுக்கு ஆதரவு அளித்தன. அதிமுக வேட்பாளரான மாயத் தேவர் 2 லட்சத்து 60 ஆயிரத்து 930 ஓட்டுக்கள் பெற்று பதிவான வாக்குகளில் பாதிக்கும் மேல் பெற்று வெற்றி பெற்றார். ஸ்தாபன காங்கிரஸ் இரண்டாவது இடத்தையும் திமுக 3வது இடத்தையும் பெற்றன. இந்திரா காங்கிரஸ் டெபாசிட் இழந்தது. இந்த பிரம்மாண்டமான வெற்றி அகில இந்தியாவையும் எம்.ஜி.ஆரை திரும்பிப் பார்க்க வைத்தது!

**தொடரும்...**

**ஊழலை எதிர்க்கிறார் எதிர்க்கிறார் என்பதற்காக எம்.ஜி.ஆர். மீது ஒரு துரும்பு பட்டாலும் தமிழ்நாட்டில் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று சென்னையில் நடந்த கூட்டத்தில் பாலதண்டாயுதம் பேசும் அளவுக்கு எம்.ஜி.ஆர். மீது அவர் அன்பு கொண்டார்.**



அன்னமிட்ட கை' படத்தில் தொழிலாளர் தோழனாக எம்.ஜி.ஆர்.



திண்டுக்கல் நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தல் பிரசார மேடையில் எம்.ஜி.ஆருடன் இரு கம்யூனிஸ்ட் தலைவர்கள் கே.டி.கே.தங்கமணி. ஏ.பாலசுப்பிரமணியம் மற்றும் எஸ்.டி.சோமசுந்தரம்.




சைனா கெய்றெற்சி
தமிழில்: தேவா

# குழந்தைப் போராளி

## புதிய கவலையும் புதிய நம்பிக்கையும்

அப்பா தனது மனைவியின் தாய் ஜேனிற்குப் பண்ணையில் ஒரு வீட்டை ஒதுக்கியிருந்தார். ஜேன் தனது மகள்களுடனும், ஒரு மகனுடனும் சில பசுக்களுடனும் அங்கு குடியேறினார். பெண் பிள்ளைகளை நான் சின்னம்மா என்றும் ஆண்பிள்ளையை மாமா என்றும் அழைக்கவேண்டும். அவர்களோ என்னையொத்த வயதினராகத்தான் இருந்தனர். அம்மாவின் சகோதரிகள் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார்கள். அவர்களுடன் அம்மா நன்றாகவே கதைப்பார். ஆனால் மிரட்டல் பார்வை பார்ப்பதைத் தவிர அம்மா வேறெதுவும் என்னுடன் பேசுவதில்லை. அது என்னை மிகவும் வருத்தியது. வெறுக்கப்பட்ட, வேண்டப்படாத ஒரு தொற்றுநோய் போல நான் ஒதுக்கப்பட்டேன்.

இந்த உணர்வே வெறுப்பைத் திருப்பிக் கொடுக்கும் தன்மையை என்னுள் தூண்டி விட்டது. நான் எப்போதும் அன்பையே செலுத்தும்சிறுமியாகஇருந்தபோதிலும்எனது குடும்பம் எனக்கு எந்தவிதத்திலும் நேசத்தைத் திருப்பி அளிக்கவில்லை. இவ்வுணர்வு என்னுள் அலை மோதிக்கொண்டேயிருந்தது. ஏதாவதொரு வடிகால் கிடைக்காவிடில் நான் நிலை தடுமாறவேண்டிய நிலை உருவாகிக்கொண்டிருந்தது. என் வாழ்வு நேசத்திற்காகவும் அரவணைப்புக்காகவும் தவிக்கும்ஒருபரிதாபவாழ்நிலையாகஇருந்தது. எனது தாகத்தினை எவ்வாறு தணிப்பதென்று தெரியாது நான் நிலைதடுமாறினேன். ஒரு சுவரில் முதுகு பதியக் கைகால்களை என் விதி கட்டிவைத்திருந்தது.

ஒரு பக்கத்தில் அம்மாவும் மற்றைய பக்கத்தில் நானுமாக இழுபறிப்பட்டுக் கொண்டே என் ஆன்மாவைக் காப்பாற்றிக் கொள்ளவும் பலப்படுத்தவும் நான் முயன்று கொண்டிருந்தேன். என்றோ ஒரு நாள் என் விலங்குகள் தெறித்து விழத்தான் போகின்றன. இங்கிருந்து ஓடிவிட வேண்டும். இம்முயற்சியில் என் வாழ்வே பறிபோனாலும் நான் ஓடிவிட வேண்டும்.

ஒரு பிற்பகல் நேரம் ஜேன் வீட்டிற்கு வந்து அம்மாவிடம் புலம்பிக் கொண்டிருந்தார். மாட்டுச் சாணங்களைச் சேகரிக்க அவருக்கு உதவ யாருமில்லை என்பதும் தனது குழந்தைகள் இந்த வேலையைச் செய்தால் அவர்கள் பாடசாலைக்குப் பிந்திப்போக நேரிடும் என்பதும் அவர் கவலையாய் இருந்தது. அம்மா நாளைக் காலையில் என்னை அங்கு அனுப்புவதாகச் சொன்னார். இவ்வாறு இந்த வேலையும் தொடங்கியது. இந்த வேலையைப் பல வாரங்களாக நான் தொடர்ந்து செய்தபோது தான் ஒன்றை கவனிக்கத் தொடங்கினேன். என் கால்கள் உருமாறத் தொடங்கின.

பின்னேரங்களில் களைப்பின் காரணமாக நான் கால்களைக் கழுவாமல் விட்டுவிடுவதுண்டு. இப்போது கழுவும் போது ஒட்டி உலர்ந்த சாணம் கால்களில் தோலையும் உரித்துக்கொண்டு வந்தது. கல்லால் தேய்த்துக் கால்களைக்கழுவினால்கால்களில்கறுப்பாகப் புள்ளிகள் தோன்றின. அத்துடன் இரத்தமும் வடியத் தொடங்கியது. இப்போது ஜேனின் பிள்ளைகளுக்காகவும் நான் அடிமை வேலை செய்தாக வேண்டியுள்ளது.

நான் அவர்களையும் தீவிரமாக வெறுக்கத் தொடங்கினேன். ஒருநாள் அம்மா தனது அம்மாவிற்கு ஒரு கூடை வாழைப் பழங்களைக்கொண்டுசென்று கொடுக்கும்படி எனக்குக் கட்டளையிட்டார். வாழைப்பழக் கூடையை வாங்கிய ஜேனின் பெண்கள் அதனைப் பார்துவிட்டு நான் சில வாழைப்பழங்களைச் சாப்பிட்டு விட்டதாகக் குற்றம் சாட்டினர். நான் கோபத்தோடு அவர்களின் குற்றச்சாட்டை மறுக்க அவர்கள் என்னைத் தரித்திரம் பிடித்தவளெனச் சொன்னார்கள். "இங்கு வராவிட்டால் பட்டினி கிடக்கவேண்டிய நீங்கள் எனது அப்பாவின் உணவைச் சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்" என ஆத்திரத்துடன் கூறினேன். இரு சிறுமிகள் கத்திக்கொண்டே என்பின்னே ஓடி வர நானும் விடாது திட்டிக்கொண்டே மயிரிழை வெளியில் தப்பி ஓடிவந்தேன்.

நான் வீட்டிற்கு வந்த போது அம்மா அங்கிருக்கவில்லை. எனவே நான் சிறிது களைப்பாறிக் கொள்ளலாமென நினத்தேன். திரும்பிப் பார்க்கும்போது என்னத் துரத்திக் கொண்டு வந்த இரு சிறுமிகளும் தூரத்தே வந்து கொண்டிருப்பதைக் கண்டேன். குசினிக்குள் ஓடிச்சென்று வாழைப்பழங்களை அள்ளிக்கொண்டு அப்பாவின் கட்டிலுக்கு அடியில் ஒழிந்து கொண்டேன். வயிறு நிறைய வாழைப்பழங்களைத் திணித்துக்கொண்டு அப்படியே உறங்கிப்போனேன். திடீரென அப்பாவின் குரல் எனது தூக்கத்தைக் கலைத்தது. இவர் நகரத்திலல்லவா இருக்க வேண்டும்? கனவு காண்கிறேனோ? ஒரு வழியாக வெளியே நழுவி இப்போது தான் வெளியேயிருந்து அறைக்குள் வருவதுபோல் வந்தேன். அவருக்கு முகமன் கூறிவிட்டு யாரும் கட்டிலுக்குக் கீழே கிடக்கும் வாழைப் பழத்தோல்களைக் கண்டுவிடக் கூடாது என மனதினில் வேண்டிக் கொண்டே வீட்டிற்கு வெளியே வந்தேன்.

வீட்டுத் தரையை எப்போதாவது சுத்தமாக்கும் அம்மா அடுத்த நாளே தோல்களைக் கண்டு கொண்டார். மற்றக் குழந்தைகளெல்லாம் பாட்டியிடம் போய் விட்டதால் சந்தேகம் முழுவதும் என்மீதே விழுந்தது. தோற்குவியல் சற்றுப் பெரியதாகவே இருந்தது. அதனால் அம்மாவே தோல்களை அங்கு போட்டு விட்டதாகக் குற்றஞ் சாட்டினேன். அம்மா கடுகடுப்பாக என்னைப் பார்த்துக் கொண்டு நின்றார். இறுதியில் நான் அப்பாவைப் பரிதாபமாகப் பார்தேன். தனது தலையை ஆட்டிய அவர் என்னை அமைதியாகப் பார்த்தார். "யார் இந்தப் பழங்களைச் சாப்பிட்டதென்று சொன்னால் நான் உன்னை அடிக்கப் போவதில்லை" எனச் சொன்னார். வேறு வழியின்றி உண்மையைச் சொன்ன நான் இரு சிறுமிகளும் என்னைத்து ரத்தி வந்த செய்தியையும் சொன்னேன். ஏதோ சொல்ல வாயெடுத்த அப்பா ஒன்றுமே சொல்லாது என்னை அங்குவிட்டுவிட்டு அறையை விட்டு வெளியேறினார்.

உள்ளே வரவேற்பறையில் அப்பா அம்மாவிடம் அவரது தாயைப் பண்ணையைவிட்டுப் போகும்படி கேட்கப் போவதாகச் சொல்ல அம்மா ஏறக்குறைய மயக்கமே அடைந்துவிட்டார். அப்பாவின் எண்ணத்தை அம்மா மாற்ற முயற்சி செய்வதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பாவோ பிடிவாதமாகத் தன் முடிவிலேயே நின்றிருந்தார். எனது உணர்வுகளெதையும் மறைக்காமல் எனது வெற்றியைக் காட்ட அம்மாவின் பக்கம் மிதப்பாகத் திரும்பினேன். அம்மாவின் மீதான அப்பாவின் கோபம் எல்லைமீறிய போது நான் ஒரே ஓட்டமாகக் கட்டிலைத் தேடி ஓடினேன்.

அலறல் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருந்தன. இருவரும் சண்டையிடுவதைப் பார்த்தேன். அம்மா தோற்றுக்கொண்டிருந்தார். கதவருகே அம்மா விழுந்து கிடந்தார். அவளது அலறல் பயங்கரமாக இருந்ததால் நான் காதுகளைப் பொத்திக் கொண்டேன். அப்பா தனியாகப் படுக்கறைக்குச் செல்ல அம்மா அடுத்த நாள் வரை கதவருகே தரையிலேயே கிடந்தார். (தொடரும்)






coral நிறுவனம் திதாக ஆரம்பித்த coral plaza தொடர்மாடி திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வெள்ளவத்தை குளோபல் விடுதியில் அண்மையில் நடந்த இந்த நிகழ்வில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச பிரதமஅதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

# நல்லாட்சி பற்றியதொரு நோக்கு




மு.யசிந்தன்
மூன்றாம் வருடம்
மெய்யியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்

ஆட்சியமைப்பு பற்றி பற்றிய எதிர்பார்ப்புகளில் முதன்மையான இலக்கு நிலை நல்லாட்சி அமைப்பு. நாட்டின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அவசியம் தேவையானதொன்றாக அன்றிலிருந்து கருதப்பட்ட நல்லாட்சியெனும் அமைப்பு 1980 களின் பின்னரே முனைப்பாகப் பேசப்பட்டது. ஐநாவின் அபிவிருத்தி திட்டங்களிலும் முதன்மை பெற்றது.

சர்வதிகாரத்தன்மை வலுப்பெற்ற வருமானம் பங்கீடும் வாழ்க்கைத்தரமும் குறைந்த மூன்றாம் உலக நாடுகளான அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இதன் தேவை பெரிதும் உணரப்பட்டது. காலணித்துவத்தினின்று விடுபட்டு தனியான இறைமையோடு நிமிர்ந்து நிற்க பொருளாதாரபலமும் சமூக பலமும் இவற்றிடம் பெரிதாக இருக்கவில்லை. இந்நிலையே அவர்களை இத்தேவை பற்றி உந்தித்தள்ளியது. எல்லோரும் எதிர்பார்க்கிற மக்கள் நலன் பேணும் நல்ல அரசு என்ற தொனிப்பொருளே நல்லாட்சியின் தாரக மந்திரம். மனித நாகரீகத்தின் வெளிப்பாடு தீர்மானம் எடுத்தல், அவற்றை நடைமுறைப் படுத்தல் எனும் ஓர் ஆட்சிச் செயற்பாட்டின் அனைத்துக்கட்டங்களிலும் மக்கள்நலன் முன்னுரிமை பெறுவதே இதன் இயல்பு. ஒரு நாட்டின் பொதுவளங்களை பொறுப்புடனும் செயற்றிறனுடனும் பயன்படுத்தி ஊழலை தவிர்த்து மனிதஉரிமை பேணி சட்டவாட்சி நடத்துவது இதன் தொனிப்பொருள். பல்லினகுழுக்களும் மதக்குழுக்களும் வேற்றுமையோ பாராபட்சமோவின்றி சிறுபான்மை பெரும்பான்மை என்ற வேறுபாடுகளின்றி அரசியலமைப்பில் பங்குபற்றுகின்ற பண்பே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

இலக்கிய காலங்களிலிருந்தே பேசப்பட "எல்லோருக்கும் இன்பங்கள் எழிவாய் இறைஞ்சிஎன்றும்நல்லாட்சிசெய்திடும்"என்ற எதிர்பார்ப்பும் அபிலாஷையும் மேற்குலக அறிஞர்களிடமும் வலுப்பெற்றிருந்தது. பிளெட்டோவின் சிந்தனை அறிவுடையோர் பொதுநலனை நோக்காகக் கொண்டோர் ஆளும்போது அவ்வாளப்படும் சமூகத்தில் நல்லாட்சி நிலவும் என்பதாய் அமைய, இதே கருத்தை இந்தியப்பத்திரிகை மக்களாட்சி எண்ணக்கருவோடு இணைக்கிறது. மக்களாட்சி முறைவாக்குச் சீட்டின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்தும் வாய்ப்பை வழங்குகின்றது. நல்லவர்களை தேர்ந்தெடுத்தல் நல்லாட்சி இல்லையென்றால் இருக்கவே இருக்கிறது ஐந்தாண்டுக்கு ஒருமுறை அந்த ஆட்சியை தூக்கி எறிந்து மாற்றுவதற்கு என்பது தான் மக்களாட்சி முறையின் சிறப்பு" ஆகவே நல்லாட்சி நல்ல அரசியல் தலைமைகளால் தீர்மானிக்கப்படுகிறது என்பதோடு உடன்பட்டாலும் நல்லாட்சியை உருவாக்கும் அடிப்படை சக்தி குடிகளின் கையிலேயே உள்ளதெனலாம்.

நல்லாட்சியமைப்பின் அடிப்படை தகுதிகள் எட்டெடன வரையறுக்கின்றனர். அறிஞர்கள். அவற்றில் குடிகளின் பங்களிப்பு, சட்ட ஆட்சி, வெளிப்படைத்தன்மை, விரைந்த செயற்பாடு, சமத்துவத்துடன் அனைவரையும் உள்வாங்கும் பண்பு, தகுதி செயற்றிறன், பொறுப்பாண்மை என்பவை தான் பேசப்படுகின்றன. குடிகளின் பங்கேற்பென்பது ஊர்நிலை, மாவட்டம், மாநிலம் என அனைத்து நிலைகளிலும் சார்பின்மை ஆட்சியை கருதுகிறது. ஒரு நாட்டின் ஆட்சி அதிகாரம் குடிகளின் சம அந்தஸ்து தலைவர்களிடம் போகிறபோது அதிகாரத்திற்கும் மக்களிற்கும் இடையிலான இடைவெளி குறைக்கப்படுகிறது. அரிஸ்டோட்டில் இது பற்றி சிந்திக்கிறார். "நடுத்தர வர்க்கத்தினர் ஆளும் போதே நல்லாட்சி நிலவமுடியும். ஏனெனில் அவர்களே ஐக்கியத்தை ஏற்படுத்த கூடியோர்'.

சட்ட ஆட்சி என்பது சட்டங்களின் உருவாக்கம்மற்றும்நடைமுறைஎன்றஎண்ணக் கருக்களோடு தொடர்புறுகிறது. உருவாக்கத்திலும் நடைமுறையிலும் சட்டத்தின் முன் சகலரும் சமன் என்ற எண்ணக்கரு முதன்மையாகப் பேசப்படும். வெளிப்படைத்தன்மையான ஆட்சியின் மூலம் தான் ஊழல் நிலைமைகள் இல்லாதொழிக்கப்படும். அரசின் நடவடிக்கை பற்றியும் நிர்வாகம் பற்றியும் சட்டம் பற்றியும் அரசு வெளிப்படையான கொள்கையோடு இருந்தாலும் மக்களிற்கு கருத்துச் சுதந்திரம் வழங்கலையும் இது சுட்டிக்காட்டி நிற்கிறது.

திட்டங்களை தீட்டுவதும் அவை பற்றி பேசுவதுமன்றி அவற்றை விரைந்து செயலாற்றும் செயற்றிறன் ஒரு அரசாங்கத்திடம் இருத்தலை இது எதிர்பார்பதனால் குறுகிய காலத்தில் பாரிய அபிவிருத்தி நோக்கி நகரும் வாய்ப்புக்கள் திறக்கிறது. தகுதியும் செயற்றிறனும் உடைய அரசின் மூலமே நல்லாட்சியை நிறுவ முடியும் என்பதனை மாக்கியவலி அன்றே சித்தரித்தார். "ஓராட்சி நிலையாக அமைய வேண்டுமாயின் ஆள்பவன் பலமிக்கவன் அதிகாரமுள்ள ஒருவராக இருக்க வேண்டும்" ஆட்சியின் ஸ்தரத்தன்மையே இதன் வலுவான அபிலாஷை. நன்மை செய்கிற அரசு நலிவடையும் வாய்ப்பற்றதாக இருப்பதே நாட்டு நலனை உயர்த்தும்.

சிறுபான்மை சமூகம் நாட்டின் தனித்துவம் அவர்களின் விருப்பு வெறுப்புகளும் ஆட்சியின் போது க்ருத்தெடுத்தல் நாட்டில் பழங்குடிகள் தனித்துவ சமூக அமைப்புகளை காத்தல். என்பனவும் இதன் பால் கருதப்படுகின்றன. நாட்டின் தனித்துவ அடையாளங்களான மக்கள், மரபுரிமை, பண்பாடு என்பவற்றினோடு ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்தின் மீதான சுதந்திரத்தன்மை என்பவை காக்கப்பட்டு மக்களிடம் கொண்டு சேர்க்கப்படும் நலத்திட்டங்கள் மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு உதவும். இவ்வாறான அரசினையே எல்லோரும் எதிர்பார்ப்பர். ஆனால் அதற்கு இருக்ககூடிய சவால்கள் சிலவுள.

அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருத்தல், நபர்களின் சர்வதிகாரப்போக்கு, ஆட்சியாளர்களின் செயற்றிறனின்மை, அரசின் கொள்கை தீர்மானம் என்பவற்றில் மக்கள் புறந்தள்ளப்படல், ஜனநாயக பிரதிநிதிகள் மக்களிற்கு பொறுப்பு கூறாமை என்பவை தாம் அவை. இவைகள் களையப்பட்டு நல்லாட்சி மலர வேண்டும். மூன்றாம் உலக நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் தங்கி வாழும் நிலை மறுக்கப்பட வேண்டும். கடன், ஊழல், பசி, பட்டினி, வறுமை என்ற அடிப்படை துன்ப விடயங்கள் இல்லாமல் செய்யப்பட வேண்டும். நாடு நல்லவைகளை உள்வாங்கும் பயிற்றும் இடமாக பாராளுமன்றம் நல்லவைகளை இயற்றும் இடமாக ஊடகம் நல்லவற்றை பரிந்துரைக்கும் ஆற்றலுள்ளதாக மக்கள் ஆக்கபூர்வமானதை அதிகரிக்கும் திறனுள்ளவர்களாக அரசியல்வாதிகள் ஆற்றலும் பொறுப்பின்மையும் உள்ளவர்களாக உருவாகின் நல்லாட்சி சாத்தியமாகும். அந்நிலை உருவானால் மூன்றாம் மண்டலம் என்ற பேச்சுக்கே இடமில்லை.

நச்சுக்கலப்பில்லாத உணவுப்பொருட்களை உற்பத்தி செய்து நியாயமான விலையில் மக்களிற்கு வழங்கும் நோக்கத்துடன் முல்லைத்தீவில் வர்த்தக வியாபார நிலையமொன்றை வடமாகாண விவசாய அமைச்சு திறந்து வைத்துள்ளது. இறுங்கு, கௌபி, குரங்கன் போன்ற பாரம்பரிய உற்பத்திப்பொருட்களிலிருந்து உருவாக்கப்படும் சுவையான உணவுப்பொருட்களும் இங்கு விற்பனை செய்யப்படுமென விவசாய அமைச்சு தெரிவித்தது.











## அதுக்கு சரிவராத தமன்னா

தமன்னாவின் சினிமா என்றால், கிளுகிளுப்பாக வருவார், ஆடுவார் அவ்வளவுதான் என்று இருந்தது. இதில் மாற்றத்தை ஏற்படுத்தியது பாகுபலி. அவரை பிடித்து அதில் நடிக்க வைத்தார்கள். தமன்னாவின் அடுத்த படம் ஏ.எல். விஜயினுடையது. அதில் வித்தியாசமான வேடம், உடல் எடையென தகவல் கசிந்தது. உடனே சினிமா வட்டாரம் கிசுகிசுத்தது "அனுஷ்கா மாதிரி நடிப்பில் வெரைட்டி காட்ட போகிறார் தமன்னா. உடல்எடை, தோற்றமெல்லாம் மாற்றப் போகிறார்" என. ஆனால் தமன்னா அதை மறுத்துள்ளார். நமக்கு இதெல்லாம் ஆகாது. வழக்கமான அல்வாவாகவே இருப்பேன் என்றுள்ளார். இப்பொழுதுதான் ரசிகப்பட்டாளம் மூச்சே விட்டுள்ளது.

## கவலைப்படும் கீர்த்தி!

ரஜினி முருகன் படம் வந்ததுதான் வந்தது கீர்த்தி சுரேஸின் மார்க்கெட் எகிறிவிட்டது. எவ்வளவு எகிறியதென்றால் விஜயுடன் ஜோடி சேருமளவிற்கு எகிறியுள்ளது. எவ்வளவுதான் உயர்ந்தாலும் அவர் நடித்த படங்கள் கொஞ்சம்தான். சினிமாவிற்கு வந்து சிலகாலம்தானே. அதனால் ஒவ்வொரு படத்தையும் அக்கறையாக பார்க்கிறாராம். பாபி சிம்ஹாவுடன் நடித்த பாம்புசட்டை படம் இன்னும் வெளியாகவில்லை. பல மாதங்களாக வெளிவர முடியாமல் திண்டாடும் அந்த படம் திண்டாடுவதால் கீர்த்தி கவலையில் இருக்கிறாராம்.

சோஞ்சாட்

## நயன் பாதையில் கத்தரீன்

அழகிருந்தும், தமிழில் ஒரு இடத்தை பிடிக்க முடியாமல் தவிக்கிறார் கத்தரீன் தெரசா. நிலையான இடத்தை பிடிக்க நயன்தாரா கடைப்பிடித்த றூட்டையே கத்தரீன் பின்பற்ற முடிவு செய்துள்ளாராம். மார்க்கெட்டை பாராமல் குத்துப்பாட்டில் ஆடுவது. நயன்தாரா ஆரம்பத்தில் விஜய், ரஜினி படங்களிலெல்லாம் குத்துப்பாட்டு ஆடியவர். அதே பாணியை பின்பற்ற கத்தரீன் முடிவு செய்துள்ளாராம். சிரஞ்சீவி தெலுங்கில் நடிக்கும் கத்தி ரீமேக்கில் ஒருபாடலுக்கு கத்தரீன் குத்தாட்டம் போட சம்மதித்துள்ளாராம்.

றூட் கவனம் அம்மணி.

## புரமோசனான கலையரசன்

கார்த்தியின் மெட்ராஸ் படத்தில் பெயரெடுத்தவர் கலையரசன். பின்னர் டார்லிங் 2 படத்தில் நடித்தார். அதிலும் பேசப்பட்டார். அடுத்த கபாலியில் முக்கிய வேடம் கிடைத்தது. இப்பொழுது கதாநாயகனாக புரமோசனாகியுள்ளார். சி.வி.குமார் தயாரிக்கும் இந்த படம் கடந்தவாரம் ஆரம்பமானது. நகைச்சுவை, காதல் கலந்த இந்தப்படத்தில் கலையரசனுக்கு ஜோடி போடுபவர் முட்டைக்கண் அழகி ஜனனி ஐயர்.


நீங்க கலக்குங்க கலை.

# டூரிங் டாக்கீஸ்

## கதை கேட்கும் கல்ராணி!

நடிகைகள் என்றால் நாலு டூயட், நாற்பது கிளாமர் காட்சியென உள்ள தமிழ் சினிமாவில் கொஞ்சம் வித்தியாசம் காட்ட முயல்கிறார் நிக்கி கல்ராணி. கதை சொல்லும் இயக்குனர்களிடம் கவனமாக கதை கேட்பது மட்டுமல்லாமல், அது ஏன் அப்படி நடந்தது என லொஜிக் கேள்வி கேட்டு லொடுக்கெடுக்கிறாராம். காதல் காட்சியில் நடித்துவிட்டு போவதாக மட்டுமிருக்காமல் நடிப்பை வெளிப்படுத்தும் கதைகளையும் உருவாக்குங்கள் என மிரட்டுகிறாராம்.


கண்டிப்பாக கல்ராணி!



## மேக்அப் இல்லாத விஜய் அண்டனி

விஜய் அண்டனியின் அடுத்த படமான சைத்தானில் அவருக்கு மென்பொருள் பொறியியலாளர் வேடமாம். இதில் அவருக்கு அதிக மேக்அப் கிடையாதாம். இயல்பான தோற்றத்திலேயே நடிக்கிறார். படத்துக்கு படம் வித்தியாசம் காட்டும் விஜய் அண்டனிக்கு இந்தப்படமும் கைகொடுக்கும் என்கிறார்கள். அவரது ஜோடி அருந்ததி நாயர். இசையும் அவர்தான். இந்தப்படமும் ஹிட் அடித்தால் சத்தமின்றி தொடர்ந்து ஹிட் அடிக்கும் நாயகனாவார்.

மேக்அப் இல்லாத சைத்தான்



## இலியானாவும் ரெடி!

இலியானா என்றால் இடுப்பழகுதான் நினைவுக்கு வரும். இலியானாவின் கொடி ஒரு காலத்தில் தென்னிந்திய மொழிகளில் ஓகோவென பறந்தது. ஏனோ திடீரென இந்தி ஆசை வந்து அதை குழப்பினார். ஒல்லிப்பிச்சானாக இருந்தால்த்தான் அங்கு ரசிப்பார்கள் என தோற்றத்தை மாற்றியது விபரீதத்தில் முடிந்தது. அனுஷ்கா, தமன்னா, திரிஷா ஆகியோர் இரண்டாவது ரவுண்ட் வருவதை பார்த்து இலியானாவிற்கும் ஆசை வந்துவிட்டதாம். அண்மையில் மும்பையில் நடந்த நிகழ்வொன்றில் பழைய இலியானாவாக வந்து கெத்து காட்டினாராம்.

இடுப்பா.. இலியானா



## ஆறுக்காக பாடிய அழகி!

கேரள ஆறுகள் எதிர்கொள்ளும் பிரதான சவால்களிலொன்று ஆற்று நீரில் கழிவுகள் கலப்பது. தொழிற்சாலை, வீட்டு கழிவுகள் தாராளமாக கலப்பதால் நதிகள் அசுத்தமாகின்றன. கேரளாவின் பெருமிதங்களில் ஒன்றான பெரியாறும் நாசமாகி வருகிறது. இதனை தடுக்க சேவ் பெரியாறு என்ற விழிப்புணர்வு அமைப்பு உருவாக்கப்பட்டது. கொச்சியில் நடந்த கூட்டத்தில் விழிப்புணர்வுபாடல் பாடியவர் மடோனா செபஸ்டியன். பிரேமம், காதலும் கடந்து போகும் படங்களில் நடித்தவர்.

இதை கடந்து போக முடியாது.

# வைத்தியரிடம் கேளுங்கள்




கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com.
0776284687



**காண்டிபன், வயது 24, சிவலிங்க புளியடி.**

**கேள்வி:** எனக்கு இரவில் படுத்தால் அனேகமாக கெட்ட கனவுகள் வந்து விழிப்பு வந்துவிடுகிறது. அதற்குப் பின் மனதில் இனம்புரியாத பயம் வருகிறது. நித்திரையும் குறைவாக இருக்கிறது என்ன செய்யலாம்.

**பதில்:** கனவுகள் இயற்கையானவை மனதின் எண்ணங்களின் படியே பெரும்பாலும் கனவுகள் அமைகிறது. மனதில் அமைதியையும், நல்ல சிந்தனைகளையும் ஏற்படுத்த முயலுங்கள் இரவுபடுப்பதற்கு முன்பாக புயங்காசனம், சர்வாங்காசனம், போன்ற யோகப் பயிற்சிகளை செய்துவாருங்கள். இறுதியாக தியானம் செய்வது மிகுந்த பலன் அளிக்கும். காற்றோட்டமுள்ள தனி அறை ஒன்றில் அமர்ந்து தியானத்தில் ஈடுபடலாம். உங்களுக்கு பிடித்த குலதெய்வம் ஒன்றை ஒளிவடிவமாக மனதில் தியானித்து .அதனோடு ஒன்றி இருக்க முயற்சியுங்கள். ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் போகப்போக நீண்ட நேரம் தியானம் சேய்ய முடியும். ஆரம்பத்தில் ஜோகாசன ஆசிரியர் ஒருவரிடம் சென்று கற்றுக்கொள்ளல் நலம். தூக்கத்துக்கு முன்பான நல்லநூல்களை வாசித்தலும் மனதுக்கு இதமான இசைப்பாடல்களை கேட்பதும் நன்மை அளிக்கும்' இவற்றை பின்பற்றினால் மனஅமுத்தம் குறைந்து மனஅமைதி ஏற்படும் . இவற்றால் உங்களை பயமுறுத்தும் கனவுகளில் இருந்து விடுபடலாம்

**ஜீவதா, வயது 30, சங்கானை**

**கேள்வி:** நீண்ட நாட்களாக சளி இருமலால் அவதிப்படுகிறேன். நோய் நீங்க மூலிகை மருத்துவம் கூறுங்கள்?

**பதில்:** தூதுவளை, ஆடாதோடை, சுண்டங்கத்தரி இலையுடன் சுக்கு, மிளகு, திப்பிலி, கலந்து கசாயம் செய்து தேன் கலந்து சாப்பிடலாம். தூதுவளை இரசம் சளிக்கு மிகச் சிறந்ததாகும். தேங்காய் எண்ணெயில் கற்பூரம் சேர்த்து சுடவைத்து மார்பில் பூசிவர சளி இளகி வெளியேறும்.

**டினோஷா, வயது 22, சாவகச்சேரி**

**கேள்வி:** தலைவலிக்கு வெளிப்பூச்சாக பூசக்கூடிய சித்தமருந்துகள் எவை?

**பதில்:** சுக்கு, கராம்பு, துளசி இலை என்பவற்றை அரைத்து பற்றுப்போல



இட தலைவலி குணமாகும். அல்லது நீர்க்கோவையை மாத்திரையை தேசிப்புளியில் குழைத்து பற்றாக பூசலாம்.

**தர்ஷா, வயது 28, ஆஸ்பத்திரி வீதி**

**கேள்வி:** எனது கன்னங்களிலும், கழுத்துப் பகுதியிலும் வட்டவடிவான பருக்கள் (skin tag)காணப்படுகிறது. சிலவகை கிறீம்கள் பாவித்தேன் பயனளிக்கவில்லை என்ன செய்யலாம்?

பதில்: அம்மாள் பச்சையரிசி எனும் (மூலிகையின் இலைகளை ஒடிக்கும் போது அதில் வருகின்ற பாலை எடுத்து பருக்களில்ப் பூசிவரவேண்டும். 67 நாட்கள் பூசிவர பருக்கள் உதிர்ந்து விடும். மூன்று கற்றாளை தண்டுகளை எடுத்து துண்டுகள் ஆக்கி படிகாரத்தூள் சேர்த்து வைக்க கற்றாளை நீர் தனியே நீருக்கு சமமான நல்லெண்ணை சேர்த்து காச்சி பருக்கள் மீது பூசிவர மறைந்து விடும்.

**ராமநாதன், வயது 40, கோப்பாய்**

**கேள்வி:** வயிற்றுப்புண் எதனால் ஏற்படுகிறது. வயிற்றுப்புண்ணை குணமாக்கும் மூலிகை உணவுகள் எவை?

**பதில்:** வயிற்றிலே சுரக்கின்ற அதிக அமிலச் சுரப்பினால் வயிற்றுப்புண் ஏற்படுகிறது. இரப்பை சிறுகுடல் பகுதிகளில் இப்புண் ஏற்படுகிறது. மனஅழுத்தம், நேரம் பிந்தி உணவு உண்பது. அதிக கொழுப்பு காரம் நிறைந்த உணவுகள் வயிற்றுப் புண்ணை எற்படுத்தலாம். இதை விட புகைப்பிடித்தல், மதுபாவனை என்பவையும் வயிற்றுப்புண் ஏற்படக் காரணம் ஆகலாம். பச்சைவாழைப்பழம், பப்பாசி என்பன குடற்புண்ணை குறைக்ககூடியது. மேலும் அகத்திக்கீரை, பாவற்க்காய் என்பன குடற்புண்ணை ஆற்ற உதவுகின்றது. குப்பைமேனி, வெந்தயம், அறுகம்புல், கடுக்காய், நெல்லி, கற்றாளை, மிளகு, வெங்காயம், மஞ்சள், வசம்பு, சீரகம் போன்ற மூலிகைகள் வயிற்றுப் புண்ணுக்கான சிகிட்சையில் பாவிக்கப்படுகின்றன.

தீபத்தின் இந்த மாபெரும்
பரிசுத்திட்டத்தில் சரியான விடையெழுதி
வெற்றியாளர் ஆகும் வாய்ப்பை இன்றே
உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்...

தீபத்தின் பரிசு மழை

கேள்வி
வடக்கில் இருக்கும் பறவைகள் சரணாலயம் எது?

பதில் : ........................
பெயர் : ........................
முகவரி : ........................
தொ.பே : ........................

இந்த கூப்பனை வெட்டி நிரப்பி எமது அலுவலக முகவரிக்கு
தபாலிலோ அல்லது நிரப்பப்பட்ட கூப்பனை புகைப்படம் எடுத்து
facebook/DeepamNews என்ற முகபுத்தகத்தினூடாக எமக்கு அனுப்பவும்.
வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு
பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

10
முடிவு திகதி : 09.06.2016
இல. 211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 221 6633

தீபத்தின் பரிசு மழை
சென்ற வார வெற்றியாளர்கள்

இ. செல்வலிங்கம்
திடல்வளவு, நவிண்டில், கரவெட்டி

கேள்வி
தற்போதைய கிழக்கு மாகாண ஆளுநரின் பெயர் என்
பதில்
ஒஸ்டின் பெர்னாண்டோ



# சோதிடக்கலை மூலம் மக்கள் அறியக்கூடிய முக்கிய செய்திகள்

## 12 பாவங்களுக்குமானவை


சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392




*சென்றவாரத் தொடர்ச்சி...*

**ஒன்பதாம் பாவம்:** இது மிகவும் சிறப்பாக அமையவேண்டிய பாக்கிய ஸ்தானமாகும். தகப்பனாரின் தகுதி, புகழ், புகழ்தருமம், செயல்கள் ஆசைகள் நிறைவேறுதல், செல்வத்தால் அடையும் சௌபாக்கியங்கள், தெய்வீக கடாட்சம், மருந்து, செல்வாக்கு, தானதர்ம ஈடுபாடு, அரசாங்க உதவிகள், புத்திரப்பேறு, பேரர்கள், வெளியூர்ப் பயணம், வெளிநாட்டுப் பயணம், மனைவி அல்லது கணவன் உடன் பிறப்பு நிலைகள், போன்ற பலதையும் இப் பாவம் மூலம் அறிய முடியும்.

சூரியன் பகலில் பிறந்தவர்கட்கும்.

சனி இரவில் பிறந்தவர்கட்கும்.

பிதுர் காரகன் நிலை தரும். எனவே இவற்றையும் கவனத்தில் கொண்டு இந்தப் பலன்களை மதிப்பிட வேண்டும்.

***முக்கிய விளக்கம்:*** குருபகவான் வசதிகட்கும் கடமைக்கும் தவத்துக்கும் நாயகன். அவர் வலுவாகவும், சுப நோக்கிலும் இருந்தால் சாதகர் வசதிகள் பெற்றவராகவும், முதியோருக்குச் செய்யும் கடமைகளில் தவறாதவராகவும் இருப்பார். நல்ல மகன்களும்,பேரர்களும் பெற்று மகிழ்வார்.

ஒன்பதாம் அதிபன் வலுத்து கேந்திர கோணங்களில் இருந்து லக்கினாதிபனும் லக்கினத்தை வலுவாக நோக்கினால் செல்வப் பெருக்கமும், வசதிகளும் குறையாமல் வந்தடையும். எந்தக் கிரகமாவது ஒன்பதில் உச்சமாயிருந்தாலும் சகல வசதிகளும் வந்து சேர மகிழ்ந்திருப்பான்.

***ஒன்பதாம் பாவமும் தகப்பனாரும்:*** ஒன்பதாம் பாவதிபன் வலுவுற்றும், சூரியன் மோசமாக அமைந்திருந்தாலும் தகப்பனாரை சிறு வயதிலேயே இழந்து விடச் சந்தர்ப்ப முண்டாகும்.

ஒன்பதாம் இடத்தை பாவர் பார்த்தாலும் தகப்பனார் வருந்த நேரலாம். எங்கிருந்து எந்தக் கிரகங்கள் பார்க்கின்றன என்பதை வைத்து இதை அறியலாம்.

ஒன்பதாம் அதிபன் ஒன்பதில் இருப்பவன் சூரியன் ஆகியோர் வலுவாயின் தகப்பனார் உயர்ந்த நிலையிலே இருப்பார். தகப்பனார் மரணத்தை ஒன்பதாம் இடத்திற்கு ஏற்படும் பாவர் பார்வை, அதன் அதிபன் அல்லது சூரியனுக்கு ஏற்படும் பாவப் பார்வைகளால் முடிவு செய்யலாம். இந்தப் பாவப் பார்வை யின் சத்திக்கு தக்கபடி சாவு முன் பின்னாக நிகழக்கூடும்.

தசாபுத்திகள் நிலையும் கவனிக்க வேண்டும். ஒன்பதுக்கு எட்டாம் இடம் அதாவது நான்காமிடத்து நிலையும் அவசியம். கவனிக்க வேண்டும்.

**பத்தாம் பாவம்:** இது சாதகருடைய அறிவாற்ற லையும், செய்தொழில், தர்ம ஈடுபாடுகள், வழிபாடு, புகழ், செல்வாக்குகளையும், அலுவல்களையும்,பதவிகளையும்,தகப்பனார் சாவு தொடர்பான தகவல்களையும், நகரம் தெரு தன் பெயரால் அமைக்கும் யோக பாவங்களையும் விபரித்துக் கூறும்.

***கவனிக்கத்தக்கவை:*** பத்தாம் பாவத்தில் சுபர்கள் இருந்தாலும், பத்தாம் அதிபன் உச்ச மாகவோ,சொந்தவீட்டிலோ கேந்திர கோணங் களில் இருந்தாலும் ஜாதகர் பிரகாசமாகவும், பெருமிதமாகவும் விளங்குவார். நல்ல செல்வாக்கோடு தார்மீக சிந்தனையுடன் காணப்படுவார். அரசாங்க ஆதரவுகளும் நீண்ட ஆயுளும் பெறுவார்.

லக்கினாதிபன் பத்தில் இருந்தாலும் இதே சிறப்புக்களை அடைவார். சூரியன் பத்தில் இருந்தால் அனைவரும் விரும்பும் நிலையடைவார். பத்தில் செவ்வாயிருந்தால் எதையும் ஒழுங்குபடுத்தி முடிக்கும் திறமை இருக்கும்.

சனியோ, ராகு கேதுக்களோ பத்தில் இருந்தால் தீய காரியங்கள் பலவற்றை செய்பவராக விளங்கலாம்.

***பத்தாம் பாவமும் செய்தொழிலும்:*** ஒருவருடைய செய்தொழிலும் பத்தாமிடத் தைச் சார்ந்து அமையும். லக்கினம், சந்திரன், சூரியன், ஆகிய மூன்றுக்கும் பத்தாம் இடத்தையும் கவனிக்க வேண்டும். மூன்று இடங்களிலும் கிரகங்கள் இருந்தால் வலிமை மிக்க கிரகம் எதுவோ அந்தக் கிரகமும் தொழிலை உறுதிப்படுத்தும்.

பத்தாம் இடத்தில் கிரகம் ஏதும் இல்லா விட்டால், பத்தாம் அதிபன் நாவாம்சத்தில் இருக்கும் இடத்தை வைத்து முடிவு செய்ய வேண்டும்.

லக்கினம் தெரிவிக்கும் மனோபாவத்திற்கு ஏற்ற தொழிலையும், ஒருவர் செய்ய முன் வரலாம். ராசிச் சக்கரத்தில் மிகவும் வலுவான கிரகமும் செய்தொழிலை உருவாக்கும்.

***வேலைகளின் தன்மை:*** சூரியனுக்கோ, பத்தாம் அதிபதிக்கோ, நல்ல இடத்தில் செவ்வாய் இருந்தால் முன்னேற்றம் வெகுவேக மாகவே ஏற்படும். பத்தாம் அதிபன் ஆறில் இருந்தால் அடிக்கடி இடமாறுதல்கள் நிகழும். எட்டாமிடத்தினால் வேலை கெடுதலும், அவமானமும் அடிக்கடி ஏற்படும். பன்னிரண்டில் இருந்தால் தொழில் மாற்றம் அடிக்கடி உண்டாகும். மூன்றில் இருந்தால் தற்காலிக வேலைகளே அடிக்கடி கிடைக்கும்.

பத்தாம் அதிபனோ, சூரியனோ பாதிக்கப் பட்ட செவ்வாயால் பார்க்கப்பட்டால் எப்போதும் வேலைத்தளத்தில் வாக்குவாதம், தகராறு, சச்சரவு, பிணக்கு ஏதாவது உண்டாகக் கூடும்.

**பதினோராம் பாவம்:** மூத்த சகோதரம், லாபம், வண்டிகள், தடைகள், தாரம் இருக்க இன்னொரு தாரம் சேர்தல் அல்லது இன்னொருவருடன் சேர்தல், குடும்ப உறவு, கணவன் மனைவி உறவு, நண்பர்கள், நம்பிக்கைகள், போன்றவற்றை இந்த பாவம் மூலம் அறியலாம்.

பதினோராம் பாவ அதிபன் அல்லது அதில் இருப்பவன் மிகவும் வலுவாக இருந்தால், அதாவது உச்சமாகவோ சொந்த வீட்டிலோ நட்பு வீட்டிலோ இருந்தால் சுப பார்வைகளும் வலுவாக அமைந்தால் ஏராளமான செல்வம் பெற்றுச் சகல வசதிகளு டனும் வாழ்வார். இவை பாதகமானால் அதற்கு ஏற்றபடி வசதிகள் அமையக் கூடும்.

**லாபம் எங்கிருந்து வரும்.**

*11 இல் சூரியன் இருப்பின் இனசனம் அல்லது அரசவருவாய் மூலம்.*

*11 இல் சந்திரன் இருப்பின் தாயார் வகை மூலம்.*

*11இல் செவ்வாய் இருப்பின் சகோதரர் மூலம்.*

*11 இல் புதன் இருப்பின் படித்தவர்கள், நண்பர்கள் மூலம்.*

*11 இல் குரு இருப்பின் பிள்ளைகள் மூலம், தர்மஸ்தாபனங்கள் மூலம்.*

*11 இல் சுக்கிரன் இருப்பின் பெண்கள் மூலம் மற்றும் கலைத்துறை மூலம்.*

*11 இல் சனி இருப்பின் விவசாயம், வாகன இயந்திரம் மூலம்.*

இலாபம் ஈட்டக்கூடியதாய் அமையும் என்பதையும் சம்பந்தப்படும் கிரகம் 11 ஆம் வீட்டில் பலமுடன் உள்ளதா? என்பதைப் பொறுத்தும் இலாபம் காணப்படலாம்.

இலாபம் வரக்கூடிய திசைகள்.

பதினோராம் அதிபன் இருக்கும் வீடு எதுவோ இந்த வீட்டு அதிபனுக்குரிய திசையிலிருந்து பணம், பொருள் வர இடமுண்டு.

*11 ஆம் வீட்டு அதிபன் சூரியன் கிழக்கு*

*11 ஆம் வீட்டு அதிபன் சந்திரன் தென்கிழக்கு*

*11 ஆம் வீட்டு அதிபன் செவ்வாய் தெற்கு*

*11 ஆம் வீட்டு அதிபன் புதன் வடகிழக்கு*

*11 ஆம் வீட்டு அதிபன் வியாழன் வடக்கு*

*11 ஆம் வீட்டு அதிபன் வெள்ளி கிழக்கு*

*11 ஆம் வீட்டு அதிபன் சனி மேற்கு*

இதை விட 11 இல் ராகு இருப்பின் தென் மேற்கு

11 இல் கேது இருப்பின் வட மேற்கு

இவற்றை நோக்குமிடத்து சாதகர் ஒருவர் தொழில் புரியும் இடம், தொழில், நடாத்தும் இடம் சம்பந்தப்படும் திசையிலாயின் மிகவும் சிறப்பு.

பதினோராம் இடமும் மூத்த சகோதரரும்: குரு மூத்த சகோதரத்தைக் குறிக்கும். பதினோராம் பாவமும், மூத்த சகோதர ஸ்தானமாகும். இவை வலுவாயிருந்தால் மூத்த சகோதரத்தால் வசதிகள் உண்டாகும், இவை பாதகமாய் அமையின் சகோதர மூல வருவாய் பாதிப்பதுடன் மூத்த சகோதரத்தையும் பாதிக்கும்.

**பன்னிரண்டாம் பாவம்:** செலவீனங்கள், பிரயாணங்கள், வெளிநாடு சென்று தொழில் புரிதல், நித்திரை நிம்மதி தேகசுகம் பரிசுகள் கப்பல்தொழில் அரசாங்கத் தொழில் இரகசிய எதிரிகள் சிறைவாசம் திருடர் தொல்லை, பொருள் பறிபோதல் போன்றவை இப்பாவத்தால் அறியப்படும்.

***செலவீனம் தொடர்பான விளக்கம்:*** பன்னிரண்டாம் பாவத்திற்குரிய அதிபன் லக்கினத்தில் இருந்தால் சொந்த வகையில் செலவிருக்கும். மூன்றில் இருப்பின் சகோதர வகையிலும், நாலில் இருந்தால் தாய் வகையிலும், ஐந்தில் இருந்தால் பிள்ளைகள் வகையிலும், ஏழில் இருந்தால் மனைவி வகையிலும், ஒன்பதில் இருந்தால் தகப்பனார் வகையிலும், செலவுகள் அதிகம் இருக்கும் என்பதை அறிக. பண்ணிரண்டாம் பாவம் சுப நிலையில் இருப்பின் நல்ல வைக்கான செலவாயும் அசுபநிலையிலிருந்தால் வீண் செலவாயும், தீய கருமங்களுக்கான செலவாயும் அமையும்.

பன்னிரண்டு பாவங்களும் சாதகர் ஒருவருக்குக் காட்டக் கூடிய நல்லவை, கெட்டவை, சாதகநிலை, பாதகநிலை இதுவரையில் அறிந்து கொண்டிருப்பீர்கள். யோகங்களும் ஒருவருக்கு விசேடமான சிறப்புப் பலன் தரும். அதே நேரம் சிலர் வாழ்வு மிகவும் பாதிக்கப்படும்.

**நீசபங்க ராஜயோகம்.**

ஒரு கிரகம் நீசப்பட்டிருக்கும் ராசிக் குரியவன், சந்திரனுக்கு கேந்திர ஸ்தானங்களில் வலுத்திருந்தால், அந்த தோஷம் நீங்குவதுடன் ராஜயோகமும் ஏற்படும்.

நீசக் கிரகம் இருக்கும் ராசிநாதர், உச்சமாகவோ, ஆட்சியாகவோ இருந்தாலும், நீசபங்க இராஜயோகம் நிலை தரும்.

நீசக் கிரகம் இராசியில் உச்சபலன் பெறக் கூடிய கிரகமானது சந்திரனுக்கு கேந்திரத்தில் வலுவாக இருந்தாலும், நீசபங்க இராஜயோகம் என்க.

**தர்ம கர்மாதி யோகம்.**

இதுவும் ஒரு சுப யோகம் ஆகும். ஒன்பதாம், பத்தாம் அதிபர்கள் ஒன்றாக லக்கின கேந்திர திரிகோண ஸ்தானங்களில் இருந்தால் இந்த யோக பாவம் ஏற்படும். கெட்ட கிரக சேர்க்கை ஏதும் இருப்பின் இந்த யோக நிலை கெட்டுவிடும்.

**ஹம்ச யோகம்.**

குரு உச்ச சுய மூல தோஷங்களில் இருக்க அது லக்கின திரிகோண கேந்திரங்களில் ஒன்றாக அமைந்தால் இந்த யோகம் உண்டாகும். எதிரிகளால் பாராட்டும், அரச பதவி அமையவும், மங்கள நிலையும், தார்மீக் உள்ளமும் பெற்றவன், கை கால்களில் மச்சம், பத்மம், சங்கம், போன்ற ரோகைகளும் அமையப்பெறலாம். நீடித்த நாள் ஆயுள் பலமும் தரும்.

**மாளவி யோகம்.**

சுக்கிரன் உச்ச, சுய மூல சேஷத்திரங் னளில்இருக்க அந்த இடம் லக்கின கேந்திர திரிகோண கேந்திரங்களில் ஒன்றாக அமைவது இந்த யோகத்தைக் குறிக்கும். இதனால் செல்வம், சேமிப்பு, உணவு உறை, காணி, பூமி, மனை வாகனம், போன்ற அசையும், அசையாத சொத்துக்கள், சேரவும் பலன் செய்யும், தர்ம சிந்தனையும், வித்துவப் புலமையும், உச்சமாய்க் காணப்படும். ஆயுளும் பலமும் உண்டு.

**பாரிஜாத யோகம்.**

பதினொன்றில் சுபக்கிரகம் இருக்க பதினோராம் அதிபதி உச்ச சுய நட்பு வீடுகளில் வலுவாக அமைந்தால் இந்த யோகம் அமையும். இது நல்ல குடும்பம், நல்ல செல்வம், நல்ல கௌரவம், புகழ், நல்ல தெய்வ பக்தி உள்ள நிலை, சீமான் நிலை என்பவைதரும்.

**இவ் வார சந்திராஸ்டமம்.**
**05.06.2016 தொடக்கம் 11.06.2016**

துலாராசி 5 ஆம் திகதி

விருச்சிகராசி 6 ஆம் திகதி 7 ஆம் திகதி

தனுராசி 8 ஆம் திகதி 9 ஆம் திகதி

மகரராசி 10 ஆம் திகதி 11 ஆம் திகதி.

ஏனைய இராசிகளுக்கு இவ்வாரம் சந்திராஸ்டமம் இல்லை.

இந்த சந்திராஸ்டம நாட்களில் நோய், பிணி, துன்பம், துயரம், கஸ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்பு நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

**வாரம் ஒரு தகவல்.**

***விரதம் இருப்பதற்கு விதியும் விதிவிலக்கும்.***

விரத அனுஷ்டானத்துக்கான சுத்தமான நீராடலாயினும், துலக்க முழுக்கானாலும் பச்சைத் தண்ணீரில் தான் குளிக்க வேண்டும். ஆனால் தீபாவளி ஸ்நானம் மட்டும் பூமாதேவியின் வரத்தின் படி எண்ணை தேய்த்துக் கொண்டு வெந்நீரில் ஸ்நானம் செய்ய வேண்டும்.

அது போல சூரிய உதயத்திற்கு முன்னால் "எண்ணெய்க் குளியல்" (அப்யிங்க ஸ்நானம்) பண்ணக்கூடாது என்பது விதி. ஆனால் தீபாவளி ஒரு நாளில் மட்டும் சூரிய உதயத்திற்கு முந்தி அருணோதயம் எனச் சொல்லப்படும் காலத்திலேயே எண்ணை ஸ்நானம் பண்ண வேண்டும்.



# கருவண்டு உயிரினவியல் கட்டுப்பாடு

## Black beetle - Biological control

ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



**அறிமுகம்:**

கருவண்டினைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திற்காக "பச்சை மஸ்காடைன்" பங்கசுக்களைப் பண்ணையில் உற்பத்தி செய்தல்.

கருவண்டு (oryctesrhinoceros) இலங்கையில் தென்னை வளரும் இடங்களில் பாரிய பீடையாக இருக்கிறது. முதிர் வண்டின் தாக்கம் இளம் கன்றுகளிலும், இளம் தென்னைகளிலும் கூடுதலாகக் காணப்படும். பல கட்டுப்பாட்டு முறைகளை சிபார்சு செய்கின்றோம். உதாரணமாக: பௌதீக முறை, பண்பாட்டு முறை, இரசாயன முறைகள் ஆகும். தோட்டச்சுகாதாரம், அடிக்கடி தென்னங்கன்றுகளை அவதானித்தல், கூராக்கிய கம்பியினூடாக வண்டினைக் குத்தி வெளியில் எடுத்தல், திரவத்தார் மற்றும் கழிவு ஓயிலினை கன்றின் அடிமட்டையில் பூசுதல். நப்தலின் உருண்டைகள் பாவித்தல், காபோபியூரான் குருணல்களைப் பாவித்தல், போன்ற கட்டுப்பாட்டு முறைகளாகும்.

கருவண்டினைக் கட்டுப்படுத்த இரண்டு உயிரினவியல் கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துகின்றோம்.

01.Baculovirus Oryctes - Virus.(வைரஸ்)

02.Metarrhizium anisopliae. (மெற்றாரைசியம் அனிசோபிலியே (பங்கசு))

Metarrhizium பங்கசு பல்வேறு வகை நலைகளில் (வாழ்க்கை வட்டத்தில்) Green muscardine நோயினை உருவாக்குகிறது. இதனால் இந்த பங்கசுவினை (பச்சை முயூஸ்காடின்) Green muscardine fungus (G.M.F) என அழைப்பார். இந்த பங்கசு கருவண்டின் larva, (குடம்பி) கூட்டுப்புழு மற்றும் முதிர் பருவ கருவண்டுகளுக்கு நோய்த் தொற்றினை ஏற்படுத்தும். நோய்த் தொற்று ஏற்பட்டவுடன் குடம்பி நிலையிலுள்ள கருவண்டு முதிர் வண்டு ஆவதற்குரிய வாழ்க்கை வட்டத்தினை பூரணப்படுத்த முடியாது. அதாவது கருவண்டாக மாறாது. தொற்று ஏற்பட்ட முதிர் வண்டு மிகவும் குறுகிய காலத்தில் முட்டையிடுவதற்கு முன்பாகவே இறந்து விடும்.

இந்தப் பங்கசு தோலினூடாக வளர்ந்து உள்ளே பல்கி பெருகி இழையங்களில் இருந்து சத்துக்களை உறிஞ்சி எடுக்கும்.



இந்த செயற்பாடு வண்டின் உள்ளே உள்ள இழையங்களை சேதப்படுத்தி இறப்படையச் செய்யும் இறப்பின் பின்னர் அதனுள் பல்கிப் பெருகிய வித்திகள் (conidia) ஒலிவ் பச்சை நிறத்தில் காணப்படும்.

பொதுவாக இந்த பங்கசு இயற்கையாக கருவண்டிலேஉற்பத்தியாகக் கூடியது. ஆனால், இந் நிகழ்வு சீரான பரவும் நிலையாக இல்லை. Metarrhizium பங்கசு வளர்வதற்கு ஈரலிப்புத் தேவை ஆனால் நேரடி சூரிய வெளிச்சம் இந்தப் பங்கசினைக் கொல்லும்.

இந்த பங்கசுவினை வளர்ப்பதற்கு ஆய்வு கூட செலவு அதிகம். அத்துடன் விசேட உபகரணங்களும் தேவை. ஆகையால் இரு சுலபமான முறைகளை பண்ணை உற்பத்தி முறையில் உற்பத்தி செய்ய அறிமுகப்படுத்துகின்றோம்.

**பச்சை முயூஸ்காடின் பங்கசினை உற்பத்தி செய்தல்.**

தென்னந் தோட்டக்காரர்கள் தங்கள் தோட்டங்களில் இரு விதமாக இந்தப் பங்கசுகளை உற்பத்தி செய்யலாம்.

01. சோளத்தானியத்தில் வளர்க்கலாம்.
02. கருவண்டின் குடம்பியிலே வளர்க்கலாம்.

**சோளத்தானியத்தில் வளர்த்தல் முறை.**

2 படி முறைகள் உள்ளன. சோளத்தானியத்தினை தொற்று நீக்குதல். மற்றும் கிருமி புகுத்தல் (inoculation) ஆகும்.

**தேவையான பொருட்கள்.**

01. உடைக்கப்பட்ட சோளம் (நடுத்தர அளவு) 1 கிலோகிராம். (5 பைக்கற்)
02. பொலிபுறப்பலீன்பை 12"x6" (150 தடிப்பம்)
03. அடுப்பு அல்லது காஸ்குக்கர்
04. Inoculum (CRL இருந்து பெற்றுக் கொள்ளலாம்) (கிருமி)
05. மெழுகுதிரி - 03
06. பருத்திப் பஞ்சு
07. PVC குழாய்த்துண்டுகள் (1" விட்டம் 1" நீளம்)
08. றபர் பேண்ட்
09. சிறிதளவு சத்திர சிகிச்சை ஸ்பிறிட்
10. றபர் கையுறை (1 சோடி) (கழிக்க வேண்டியது)
11. முகமூடி (கழிக்கவேண்டியது) - 1

**முறை: படி 01 தொற்று நீக்கவும்.**

வர்த்தக ரீதியாக கிடைக்கும் சோள விதைகள் பல நுண்ணங்கிகளைக் கொண்டது. எனவே ஊடக வளர்ப்புக்கு (GMF) முன்பாக இதனை தொற்று நீக்கம் செய்யவும். சோளத்தினை நடுத்தர அளவிலான துண்டாக உடைக்கவும். நீரில் கழுவி சுத்தமாக்கி வடிய வைக்கவும். 150 - 200 கிராம் வரையான உடைத்த சோளத்தினை பொலிகுரோம் பையில் போடவும். பின்பு, பையின் திறக்கப்பட்ட வாய்ப்பகுதியின் 4-5" உடைய மிகுதியான PVC குழாயினுள் உட்செலுத்தி பையின் வாய்ப்பகுதியை வெளியில் எடுக்கவும்.

பையில் உள்ள மேலதிக நீரை வெளியேற்றிய பின் பருத்தி பஞ்சினால் பையின் வாயினை மூடி வெளியில் தெரியத்தக்க மாதிரி பொலிபுறப்பலீன் பை உபயோகித்து பஞ்சினை றபர்பான்டால் கட்டவும். இது ஈரலிப்புத் தன்மையைக் கொடுக்கும். இந்தப் பையினை (சோளம் உள்ள) ஸ்ரிமரில் அல்லது அமுக்க அடுப்பில் (Pressure cooker) வைத்து தொற்று நீக்கவும். அமுக்க அடுப்பு உபயோகித்தால், தொற்று நீக்கல் நேரம் 1 மணி 20 நிமிடம் ஆகும். ஸ்ரிமர் ஆயின் 3 மணித்தியாலங்கள் தொற்று நீக்கல் செய்யத் தேவையாகும்.

**படி 02 கிருமி உட்புகுத்தல்** (inoculation).


தொற்று நீக்கப்பட்ட சோளத்தானியத்திற்குள் green muscardine (GMF) பங்கசுவின் வித்திகளை உட்செலுத்துவது தான், கிருமி உட்புகுத்தல் முறை ஆகும். இச் செயல் முறையினை மிகவும் அவதானத்துடனும், தூய்மையான சூழலிலும் செய்ய வேண்டும். கிருமி உட்புகுத்தலிற்காக வித்திகளை தென்னை ஆராய்ச்சி நிலையம் லுணுவிலவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

- தூய்மையானது, உலர்ந்த மேற்பரப்பினைத் தெரிவு செய்ய வேண்டும்.
- இது மரப்பலகையாகவோ அல்லது மேசையாகவோ அல்லது தட்டையான பிளாஸ்ரிக் தட்டு ஆகவோ இருக்கலாம்.
- ஒரு துணியால் தெரிவு செய்யப்பட்ட மேற்பரப்பினைத் துடைக்கவும்.
- பின்பு, பருத்திப் பஞ்சினை சத்திரசிகிச்சை ஸ்பிறிட்டில் தோய்த்து எடுத்து, தெரிந்தெடுத்த மேற்பரப்பினை தொற்று நீக்கவும்.
- படம் 2 இல் காட்டியவாறு 3 மெழுகு திரிகளை அரை வட்டமாக நிறுத்திக் கொழுத்தவும்.
- சுற்றாடலின் காற்றினைத் தொற்று நீக்குவதற்காக சுமார் 10 தொடக்கம் 15 நிமிடங்கள் வரை மெழுகுதிரியினைக் கொழுத்தி விடவும்.(கிருமி புகுதல் செயற்பாட்டுக்கு முன்பு)
- தேவையான சாமான்களினை (கிருமி புகுதலுக்கு) மெழுகுதிரி கொழுத்திய இடத்திற்கு அண்மையாக வைக்கவும், கத்தரிக் கோலினையும் 1-2 நிமிடங்களுக்கு மெழுகுதிரி சுவாலையில் பிடித்து சூடாக்கவும்.
- தொற்று நீக்கப்பட்ட சோள மணிகளை கிருமி உட்புகுதல் செயற்பாட்டு நேரத்தில் அறை வெப்பநிலையில் வைத்திருத்தல் வேண்டும்.
- கிருமி உட்புகுதல் செயற்பாட்டுக்கு முன்பதாக, கைகளை சவர்க்காரம் கொண்டு கழுவுதல் வேண்டும்.
- ஸ்பிறீட் கொண்டு கைகளை தொற்று நீக்கம் செய்யவும். பின்பு ஒரு சோடி கையுறைகளையும், முகமூடிகளையும் அணிந்து கொள்ளல் வேண்டும்.
- எரிக்கப்பட்ட மெழுகுதிரி உள்ள பகுதியில் தான் கிருமி உட்புகுதல் செயன்முறை நடைபெற வேண்டும்.
- பருத்திப் பஞ்சுகளை சோள மணிகள் உள்ள பையிலிருந்து அகற்றி பின்பு விரல்களின் உதவியினூடு பிடிக்கவும். (மேசையின் மேல் வைப்பதினைத் தவிர்க்கவும்)
- தொற்று நீக்கிய கத்தரிக் கோலினால் GMF வத்திகள் அடங்கிய பையில் சிறிது துவாரம் இடவும்.
- பின்பு சோள மணி உள்ள பையினுள், GMF வித்தியின் 1/5 பங்கினை எமது மெதுவாக செலுத்தி உரியமுறையில் பஞ்சினால் மூடி றபர் பாண்ட் இடவும். இச் செயற்பாட்டினை சகல சோளப் பைகளுக்கும் மேற்கொள்ளவும். (தொற்று நீக்கிய சோள மணி பையில் கிருமி உட்புகுத்தல்)

இறுதியாக சோளமணிகளுக்குள் விடப்பட்ட GMF வித்திகளிடப்பட்ட சோளப் பைகளை கசக்கி நன்றாக கலக்கவும். பின்பு பைகளை குளிர்ச்சியான இருட்டு சூழ்நிலையில் வைக்கவும். (பங்கசு வளர்வதற்காக) 3-4 நாட்களுக்குப் பின்பு பங்கசுகளின் வெள்ளை மைசீலியம் (Mycelium) சோள மணிகளின் மேல் காணமுடியும். படிப்படியாக இதன் நிறம் பச்சையாக மாறும். 8-10 நாட்களின் பின்பு, சோள மணிகள் உள்ள பைகள் முழுமையாக பச்சை நிறமாக மாறும். (GMF சோளமணிகளில் வளர்கின்றது.) இந்த GMF பக்கற்றுக்களை 8-10 நாட்களுக்கு அறை வெப்பநிலையிலும் மற்றும் குளிர்சாதனப் பெட்டியில் ஒரு மாத காலமும் வைத்துப் பாவிக்க முடியும்.

# வவுனியாவில் ஒரு நறுமணம் வீசும் மதுரை

வன்னிமது



மல்லிகை ஒரு மருத்துவ மூலிகைப் பயன்பாடுடைய ஒரு தாவரமாகும். இதன் பூக்கள் மிகுந்த நறுமணமுடையவை. தமிழ் பெண்கள் அதிகம் தலையில் சூடும் மாலைகளாகவும் கோயில்களில் பூசையிலும் பயன்படுகிறது. இப்பூக்களினை மூலிகை மருத்துவத்தில் பால் சுரப்பு நிற்க, மார்பக வீக்கம் குறைய பயன்படுகிறது. இது பிலிப்பைன்ஸ் நாட்டின் தேசிய மலராகவும் உள்ளது. தமிழில் "மல்லி" என்பதன் பொருள் பருத்தது, உருண்டது மற்றும் தடித்தது. இதன் காரணமாக, இம்மலர் "மல்லிகை" எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

மிதமானது முதல் அதிகரித்த வெப்ப மண்டலங்களில் வளரும் ஓர் இனமாகும். இதில் பல பிற செடிகளின் மீதாகப் பற்றிப் படரும் கொடிகளாகவும் தோட்டங்களில் கம்பிகளின் மீதாகப் படர்ந்தோ அல்லது கதவுகள் அல்லது வேலிகள் மீதான வேலிப் பந்தலாகவோ அல்லது திறந்த வெளிகளில் புதர்களாகவோ வளர்கின்றன. இவற்றின் இலைகள் என்றும் பசுமை மாறாமலோ வருடம் முழுதும் பச்சையாகவே அல்லது உதிரிலைகளாகவோ இருக்கலாம்.

தமிழ் இலக்கியத்தில் முல்லை எனச் குறிப்பிடப்படும் இது ஒரு வகை வன மல்லிகை. தற்போது குண்டு மல்லி, அடுக்கு மல்லி மற்றும் இருவாச்சி என மொத்தமாக 200 இனங்கள் காணப்படுகின்ற போதும் தமிழ்நாட்டில் குறிப்பாக மதுரை மாவட்டத் தில் பயிரடப்படும் மல்லிகைக்கு என்றும் கிராக்கி அதிகம். இங்கு பயிரிடப்படும் மல்லிகைகள் உள்ளூர்த் தேவைகளுக் காகவும் அங்கிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதிக்காகவும் அனுப்பி வைக்கப்படு கின்றன. மதுரை நகரம் "மல்லிகை மாநகரம்" என்றே அழைக்கப்படுகிறது.

இத்தனை சிறப்புமிக்க மதுரை மல்லிகை யினை இலங்கையில் முதல்முறையாகசாகுபடி செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தின் உதவிடனும் தமிழ்நாட்டில் உள்ள இந்திய வர்த்தக சம்மேளனத்தின் உதவியுடனும் 30 ஆயிரம் மல்லிகைப் பதியன்களை வவுனியாவைச் சேர்ந்த விவசாயி பிரேமந்திரன் ராஜா பெற்று வவுனியா புளியங்குளத்தில் தம்பா மாதிரிப்பண்ணையினை அமைத்து சாகுபடி செய்துள்ளார்.

## பிரேமந்திரன் ராஜா

தமிழர்களின் கலாச்சாரங்களில் மல்லிகைக்கு மிக முக்கிய இடமுண்டு. தமிழகத்தில் உள்ள அனைத்து கோயில்களிலும் பூஜை மற்றும் இதர வழிபாடுகளில் மல்லிகைப் பூ பயன்படுத்தப்படுகிறது. அதிலும் குறிப்பாக மதுரை மல்லிகையின் நறுமணம் மூன்று நாள் வரை நீடிக்கும். இலங்கையில் மல்லிகைப் பூவுக்கு நல்ல வரவேற்பு உள்ள போதும் இலங்கையில் உள்ள கோயில் களில் மல்லிகைப் பூக்கள் பயன்படுத்தப்படுவ தில்லை. ஏன் இலங்கை தமிழ் பெண்களும் பயன்படுத்துவதில்லை. இதற்கு காரணம் என்ன என்று ஆராய்ந்த போது இங்கே மல்லிகை செடி வளர்ப்பதற்கு யாரும் ஆர்வம் காட்டவில்லை. இதனால் தமிழ்நாட்டில் விசேடமான மதுரை மல்லிகை பயிரிடப்படும் இடங்களுக்கு நேரடியாக சென்று சாகுபடி செய்யும் முறைகளை கற்றுக்கொண்டேன்.

அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணை தூதரகத்தின் உதவியுடன் வவுனியா புளியங்குளத்தில் உள்ள எனது தோட்டத்தில் 14 ஆயிரம் கன்றுகளை முதற்கட்டமாக சாகுபடி செய்துள்ளேன். மீதமுள்ள 16 ஆயிரம் கன்றுகளை சுற்று வட்டாரப்பகுதிகளில் உள்ள விவசாயிகளிடம் சாகுபடி செய்ய வழங்கியுள்ளேன். அத்துடன் யாழில் புன்னாலைக்கட்டுவானிலும் அமைத் துள்ளேன்.

யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளி லும் மல்லிகை சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மல்லிகைப் பூ மூலம் நல்ல வாழ்வாதாரம் கிடைக்கும். தற்போது எனது வவுனியாவில் உள்ள பண்ணையின் மூலமாக நாள் ஒன்றுக்கு 01 கிலோகிராம் வீதம் மாதம் ஒன்றிற்கு 30 கிலோ மல்லிகை பூக்களினை பெற்று உள்ளூரில் விற்பனை செய்து 90000 ரூபா வருமானத்தினை பெற்றுக்கொள்கின்றேன். அத்துடன் எனது பண்ணையில் 05 பேருக்கு தொழில்வாய்ப்பினையும் வழங்கியுள்ளதோடு எதிர்காலத்தில் இதன் வினைதிறனை 50 கிலோ தொடக்கம் 100 கிலோவாக அதிகரிக்க எண்ணியுள்ளேன்.

## பராமரிப்புமுறை

இம் மதுரை மல்லிகை செடிகளை வளர்க்க இறுவாட்டி மண் சிறந்ததாக உள்ளதுடன் கோடை வெய்யிலிலும் தாக்குப்பிடித்து வளரக் கூடியதாகவும் காணப்படுகின்றது. செடி நாட்டப்பட்டு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை நீர் இறைத்தால் போதுமானதுடன் மண்ணுக்கு ஏற்பவே விளைச்சல் தரக்கூடிய தாகவும் உள்ளது. நவம்பர், டிசம்பரில் கவாத்து எடுக்க வேண்டும். தரையில் படர்ந்து வளரும் கிளைகளை வெட்டிவிட வேண்டும். பூக்காமல் மேல்நோக்கி வளரும் செடிகளை கிள்ளிவிட வேண்டும். முறையாக பராமரித்தால் 15 ஆண்டுகள் வரை இப்பயிரில் இருந்து வருமானம் பார்க்கலாம்.

வடக்கே ஈழப்போர்களில் தமது உறவு களை இழந்து உடைமைகளை இழந்து நிர்க்கதி யாக நிற்கும் எம் உறவுகளும், பெண்களை தலைமையாக கொண்ட பெண்களும், புனர் வாழ்வு பெற்று தமது புதிய வாழ்வை தொடங் கியுள்ள முன்னாள் போராளிகளுக்கும் எதிர்காலத்தில் மதுரை மல்லிகை வளர்ப்பில் ஆர்வம் காட்டும் பட்சத்தில் அவர்களிற்கான சிறந்தவாழ்வாதாரமாக காணப்படுவதோடு எதிர்காலத்தில் ஏற்றுமதியாளர்களாக மாற முடிவதோடு ஈழத்தழிழர்களின் கலாச் சாரங்களை மீள கட்டியெழுப்புவதற்கு ஒரு உந்து கோலாக மாற்றமடையும். இதன் மூலம் தமிழ் நாட்டில் மதுரை மல்லிகைக்கு பிரசித்தம் போன்று இலங்கையில் வவுனியா பிரசித்தமாக மாறும் என்பதற்கு ஐயமில்லை.










திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com



# கண்களும் கவிபாடுமே

ஒருவரை பார்த்த மாத்திரத்தில் வசீகரிப்பது கண்கள் தான். அந்தக் கண்கள் பிரகாசமாக இருக்க ஒரு நாளில் எட்டு மணி நேரம் தூக்கம் அவசியம். உணவு வகைகளில் கரட், கீரை, மீன் மற்றும் இரும்புச் சத்துள்ள பொருட்களை அடிக்கடி உணவில் சேர்க்க வேண்டும்.

**கண்ணுக்கு கீழ் உள்ள வீக்கம் குறைய**

ஒரு டிஸ்பூன் பச்சை உளைக்கிழங்கு சாறை அந்த இடத்தில் தடவவும். பத்து நிமிடம் வைத்திருந்த பின் கழுவவும்.

**கண்களுக்கு கீழ் ஏற்படும் பைக்கு சிகிச்சை**

சிலருக்கு கண்களின் கீழ் சிறு பை மாதிரி வீங்கிக் காணப்படும். மது புகைப்பிடிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கும் இப்படி வரும். இதைப் போக்க

சோயா பௌடர் 2டிஸ்பூன்
தண்ணீர் 2டிஸ்பூன்

கலந்து தடவவும். பின் அதன் மேல் அலுமினியம் ஃபாலிலால் சுற்றி எடுக்கவும்.

**கண்களின் சோர்விற்கு**

கொம்யூட்டரில் அதிக நேரம் அமர்ந்திருப்பவர்கள், அடிக்கடி தொலைக்காட்சி திரைப் படம் பார்ப்பவர்களுக்குத்தான் சோர்வு ஏற்படும்.கண்களின் மீது குளிர்ந்தநீரை அவ்வப் போது அடித்தால் கண் சோர்வு நீங்கும்.

இரண்டு டேபிள் ஸ்பூன் குளிர்ந்த பாலில் பஞ்சை நனைத்து கண்களின் மேல் வைத்து சிறிது நேரத்தில் எடுக்கவும். கண்களின் மேலே வெள்ளரிக்காய் அல்லது உருளைக்கிழங்கைத் துண்டு துண்டாக நறுக்கிச் சிறிது நேரம் வைத்து எடுத்தால் கண் சோர்வு நீங்கி புத்துணர்வு கிடைக்கும்.

நெல்லிக்காய் பௌடர் ஒரு டிஸ்பூன் எடுத்து ஒரு கப் சுத்தமான நீரில் கொதிக்க வைக்கவும். ஆறியதும் அதை எடுத்து வடிகட்டி வைத்துக் கொண்டு கண்களை மூடி மேலே தெளிக்கவும். வாரத்திற்கு இரு முறை இதை செய்யலாம்.

**கருவளையம் போக**

நாம் எவ்வளவு தான் அழகாக இருந்தாலும் கண்களின் கீழ் கருவளையம் வந்தாலே மொத்த முக அழகையும் கெடுத்துவிடும். எனவே ஆரம்பத்திலேயே கருவளையம் போக சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்.

கருவளையம் ஏற்படக் காரணங்கள்

பரம்பரை, தூக்கமின்மை, ஊட்டச் சத்தில்லாத உணவு, அதிகமான டென்சன் சோர்வு, கண்களுக்கு அதிகவேலைகொடுத்தல்.போன்றவற்றில் ஏதேனும் காரணம் இருக்கலாம்.

**உணவு**

கரட், பீட்ரூட், ஜூஸ், கீரை, பப்பாளி, மாம்பழம் மற்றும் இரும்புச் சத்து அதிகமுள்ள உணவுவகைகளை சாப்பிட வேண்டும்.

**தீர்வு**

தாய்ப்பாலுடன் இளநீர் கலந்து கண்களின் அடியில் மெதுவாக மசாஜ் செய்யலாம்.

புரோட்டீன் பௌடர் அல்லது ஸ்கிம்ட் மில்க் பௌடர் 2டிஸ்பூன் எடுத்து தேவையான நீரில் கலந்து கருவளையம் மீது தடவி சிறிது நேரத்தில் கழுவவும்.

உப்பு கலக்காத வெண்ணெய் ¼ டிஸ்பூன்
விளக்கெண்ணெய் ¼ டிஸ்பூன்
பாதாம் எண்ணெய் ¼ டிஸ்பூன்

இவை மூன்றையும் கலந்து கண்களின் உள்ளே போய் விடாத படி மெதுவாக மசாஜ் செய்யவும்.

விளக்கெண்ணெய் மெதுவாக கண்களின் மீது தடவி பதினைந்து நிமிடங்கள் கழித்து கழுவவும். கற்றாழையின் சோற்றுப் பகுதியுடன் பன்னீர் கலந்து கண்களின் கீழ் தடவி 15 நிமிடங்கள் கழித்து கழுவவும்.

பேரிச்சம்பழம் 3
பாதாம் பருப்பு 4
பிஸ்தா பருப்பு 4
குங்குமப்பூ ஒரு சிட்டிகை

இவை அனைத்தையும் கலந்து முதல் நாள் இரவே ஊற வைக்கவும். அடுத்த நாள் காலை அதை அரைத்து பேஸ்ட்டாக்கவும். இதை கரு வளையங்களின் மேல் தடவவும். 15 நிமிடம் வைத்திருந்து பின் கழுவவும்.

தொடரும்...

# கோதுமை மா அல்வா



**தேவையான பொருட்கள்:**

கோதுமை 1 கப், சுகர் 3 கப், முந்திரி பருப்பு சிறிது, நெய் 1/ 12 கப்

**செய்முறை:** ஒரு கப் கோதுமையை எடுத்து முதல் நாள் இரவே தண்ணீரில் ஊற வைக்கவும்.

6 8 மணி நேரம் நன்றாக ஊற வேண்டும். பிறகு அதை மிக்சியில் அரைத்து பால் எடுக்க வேண்டும். மிக்சியில் ஊறிய கோதுமை மற்றும் 1 கப் தண்ணீர் ஊற்றி நன்றாக அரைக்கவும்.பிறகு அரைத்ததை சல்லடையில் வடிகட்டவும். மறுபடி மிக்சியில் கோதுமை மற்றும் 1 கப் தண்ணீர் சேர்த்து அரைத்து பாலை அதே பாத்திரத்தில் வடிகட்டவும்.

கோதுமை பாலை 3 4 மணி நேரம் அசைக்காமல் மூடி வைக்கவும். பிறகு பார்த்தால் மேலே தெளிந்த நீரும் கீழே கொஞ்சம் கட்டியான கோதுமை பாலும் இருக்கும். ஒரு கரண்டியால் மேலே உள்ள தெளிந்த நீரை மெதுவாக எடுத்து விடவும். நெய்யை உருக்கி கொள்ளவும். முந்திரி பருப்பை ஒரு மேஜைக்கரண்டி நெய்யில் வறுத்து எடுத்து கொள்ளவும். தேவையான பொருட்களை தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

ஒரு கடாயில் கோதுமை பாலை ஊற்றவும். அதனுடன் 3 கப் தண்ணீர் சேர்த்துக் கொள்ளவும். இப்பொது அடுப்பை ஓன் செய்து கடாயை வைக்கவும். மிதமான தீயில் வைக்கவும்.

இப்போது இருந்தே கிளற ஆரம்பிக்கவும். சூடானதும் அடியில் கட்டி போல் உருவாகும். கிளற கிளற எல்லாம் ஒன்றாக வரும். பால் கெட்டியானதும் சக்கரையை சேர்க்கவும். கை விடாமல் கிளறி கொண்டே இருக்கவும். ப்ரவுன் சுகர் சேர்த்திருப்பதால் தானாகவே அல்வா கலர் மாறி விடும்.

வெள்ளைசீனி சேர்ப்பதாக இருந்தால் தானாக பிரவுன் கலர் வராது.


கை விடாமல் கிளறி கொண்டே இருந்தால் கொஞ்சம் கொஞ்சமா அல்வா கெட்டியாக ஆரம்பிக்கும். இப்போது உருக்கிய நெய்யை கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து கிளறவும். மொத்தமாக நெய்யை சேர்க்காமல் கடாயில் அல்வா ஒட்டும் போதும் மட்டும் கொஞ்சம் நெய்யை சேர்த்துக் கிளறி கொண்டே இருக்கவும். வறுத்த முந்திரியை சேர்த்து கொள்ளவும்.

கடைசியாக நெய் அல்வாவிலிருந்து வெளியே வர ஆரம்பிக்கும். கரண்டியில் ஒட்டாமல் அல்வா கீழே விழும். அது தான் சரியான பதம். அடுப்பில் கோதுமை பாலை வைத்ததிலிருந்து இந்த பதம் வருவதற்கு கிட்டதட்ட ஒரு மணி நேரம் ஆகும்.

அடுப்பை அணைக்கவும். சுவையான அல்வா ரெடி. ரெடியான அல்வாவை ஒரு நெய் தடவிய ட்ரேயில் போட்டு ஆறியதும் கட் செய்து பரிமாறலாம் அல்லது அப்படியே பரிமாறலாம்.

# பெண்களிற்கு

1. கம்பளி உடைகளின் மேல் பொடி செய்த படிகாரத்தை தூவி வைத்தால் பூச்சி அரிக்காமல் இருக்கும்.
2. கறுத்து மங்கலாகிப் போன அலுமினியப் பாத்திரங்களை எலுமிச்சை சாற்றினால் துடைத்தால், பளீர் என்று ஆகும்.
3. மாதவிலக்கு நேரங்களில் பெண்கள் கோதுமைக் கஞ்சி குடித்து வந்தால்,வயிற்று வலி வராது.
4. ஓமத்தை அரைத்து தலையில் தேய்த்து வெந்நீரில் குளித்தால் கடுமையான தலைவலி நீங்கும்.
5. வெந்தயக் கீரையை சாம்பார்,கூட்டு செய்து சாப்பிட்டு வந்தால் ரத்தக் கொதிப்பு குறையும்.
6. காலையில் வெறும் வயிற்றில் சிறிது வெந்தயத்தை வாயில் போட்டு மென்று, தண்ணீர் குடித்தால் உடல் சூடு தணியும்.
7. வாரம் ஒரு முறை பாகற்காயை சாப்பாட்டில் சேர்த்து வந்தால் வயிற்றுப் பூச்சிகள் மடிந்து விடும்.
8. தாய்ப்பால் கொடுக்கும் பெண்கள் ,அடிக்கடி இளம் முருங்கக் கீரையை உண்டு வந்தால்,பால் அதிகம் சுரக்கும்.
9. ஓம்லேட் மேல் உப்பு,மிளகுத் தூளுடன் சீரகப் பொடியையும் தூவினால்,சுவையாக இருக்கும்.
10. பாயசம் நீர்த்துப் போனால்,அதில் வாழைப் பழத்தை பிசைந்து போட்டு,சிறிது தேனும் கலந்து விட்டால் சுவையான பாயசம் தயார்.
11. நெல்லிக்காயை தேனில் ஊற வைத்து சாப்பிட்டு வந்தால், இளமையாக இருக்கலாம்.
12. காய்ந்த எலுமிச்சை, ஒரேஞ் தோல்களை, அலமாரியில் வைத்தால் பூச்சிகள் வராது.
13. வாழைப் பூவை நறுக்கிய பின் வினிகர் கரைத்த நீரில் கை கழுவினால்,கறை நீங்கி விடும்.



# கை, கால் பராமரிப்பு

கை, கால் முட்டிகளில் கருப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சப்பழ சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும் நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஒலிவ் ஒயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

ஒலிவ் எண்ணெயுடன் சர்க்கரை கலந்து உள்ளங்கைகளில் தேய்த்து கழுவ வேண்டும். இவ்வாறு செய்ய் உள்ளங்கைகளின் கடினத் தன்மை மறைந்து மிருதுவாக மாறும்.

தண்ணீரை மிதமாக சூடுபடுத்தி, சிறிது உப்பு கலந்து, அதில் விரல்களை சிறிது நேரம் வைத்திருந்தால், விரல்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும். நகங்களை வெட்டும் முன் எண்ணெய்யை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

சிலருக்கு நகம் கடினத் தன்மையுடன் இருப்பதால், நகத்தை வெட்டுவதற்கு கஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் குளித்தவுடன் நகம் வெட்டினால், நகம் ஈரத் தன்மையுடன் இருப்பதால், எளிதாக வெட்ட வரும். அதே போல், தேங்காய் எண்ணெய் தடவி சிறிது நேரம் கழித்து வெட்டினாலும் எளிதாக வெட்டலாம்.

நகங்கள் அடிக்கடி உடைந்து போகிறவர்கள், சிறிதளவு பேபி ஓயிலில் நகங்களை மூழ்கும் படி வைத்தால், நகங்கள் உறுதியாகும். ஈரமாக இருக்கும் போது ஷேப் செய்தால், நகங்கள் உடைவதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே, நகங்கள் ஈரமாக இருக்கும்போது ஷேப் செய்வதை தவிருங்கள். கிளிசரின் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து, அதை நகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், நகங்கள் பளபளப்பாக இருக்கும். அதே போல், பாதாம் எண்ணெயை நகங்களில் பூசி சிறிது நேரம் கழித்து, கடலை மாவினால் கழுவினாலும் நகம்பளபளப்படையும்.மாத்திற்குஒருமுறை இப்படி செய்ய நல்ல பலன் கிடைக்கும்.

ஒலிவ் எண்ணெயை மிதமாக சூடுபடுத்தி அதை விரல்களில் தேய்த்து சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு தினமும் செய்து வந்தால் நகங்கள் நன்றாக வளரும்.மிதமான சூடுள்ள பாலில் பஞ்சை நனைத்து அதை வைத்து நகங்களை தேய்த்து சுத்தப்படுத்தினால், நகங்களில், காணப்படும் அழுக்குகள் நீங்கி நகங்கள் பளபளப்பாகும்.

நகங்கள் உறுதியற்று உடைவதற்கு இரும்பு மற்றும் கல்சியம் போன்ற சத்துக்குறை பாடுகளே காரணம். எனவே நகங்கள் ஆரோக்கியமாக வளர ஊட்டச்சத்து நிறைந்த காய்கறிகள் மற்றும் உணவு வகைகளை சாப்பிட வேண்டும். பாத வெடிப்பிருந்தால் பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை பெடிக்யூர் செய்து கொள்ளலாம். உப்பு, ஷம்போ, எலுமிச்சம் பழச்சாறு கலந்த வெந்நீரில் கால்களை ஊற வைத்துக் கழுவலாம். அதிக வேலைகள் காரணமாக கால்களில் வலி எடுத்தால் கால்களை சுடுதண்ணீரில் ஊற வைத்தால் சரியாகும்.

பாதத்தில் உள்ள வெடிப்பு நீங்க விளக்கெண்ணை ஒரு ஸ்பூன், பன்னீர் இரண்டு ஸ்பூன், எலுமிச்சம் சாறு ஒரு ஸ்பூன் மூன்றையும் கலந்து வெந் நீரில் பத்து நிமிடம் காலை ஊறவிட்டு பின்பு இக்கலவையைப் பூசிவர வெடிப்பு நீங்கும்.

# மாதவிடாய் தாமதம் ஆவதற்கு இவை தான் காரணம்

வயதுக்கு வந்த பெண்களுக்கு மாதவிடாய் சுழற்சி என்பது மிகவும் முக்கியமான ஒன்று. பொதுவாக 2835 நாட்களுக்குள் மாதந்தோறும் மாதவிடாய் வருகிறது என்றால் எந்தவொரு பிரச்சனையும் இல்லை.

அதுவும் 40 நாட்களுக்கு மேல் அல்லது வராமல் நின்று விடுகிறது என்றால் உடனே மருத்துவரை அணுக வேண்டியது அவசியம்.

ஒரு சில காரணங்களால் மாதவிடாய் சுழற்சி தள்ளிப்போக கூடும். அதிக மன அழுத்தம் காரணமாக ஹோமோனில் சுரப்பு குறைகிறது, இதனால் கருப்பையில் இருந்து கருமுட்டை உருவாவது தாமதம் ஆவதால் மாதவிடாய் தடைபடுகிறது.

திடீரென உடல்நிலை சரியில்லாமல் போதல் அல்லது ஏதேனும் நோயின் வெளிப்பாடாக கூட மாதவிடாய் தள்ளி போகலாம்.

பகல் ஷிப்ட், இரவு ஷிப்ட் என்று அடிக்கடி வேலை மாற்றம் ஏற்படுவதன் விளைவாக, மாதவிடாய் சுழற்சியும் மாறுவதை உணர முடியும்.

நீங்கள் மருந்து ஏதேனும் உட்கொண்டு வந்தால், அதன் பக்கவிளைவாக கூடவும் மாதவிடாய் தள்ளி போகலாம், ஆகவே புதிய மருந்தின் பக்க விளைவுகளை பற்றி மருத்துவரிடம் கட்டாயம் விசாரிக்க வேண்டும். சில சமயங்களில் கர்ப்ப தடை மருந்துகள் இது போன்ற விளைவுகளை சாதாரணமாக ஏற்படுத்துகின்றன.

அளவுக்கு அதிகமாக எடை இருந்தால், ஹோமோன்கள் மாதவிடாய் சுழற்சியை மாற்றி சில சமயம் அவற்றை நிறுத்திவிடும்.





# வெப்பத்தில் இருந்து பச்சிளம் குழந்தைகளை பாதுகாப்போம்

கொளுத்தும் வெயிலைச் சமாளிக்க முடியாமல், ஆரோக்கியமானவர்களே தடுமாறும்போது, குழந்தைகளும் முதியவர்களும் எப்படி வெப்பத்தின் உக்கிரத்தைத் தாங்குவார்கள்? வெயிலின் கடுமை, குழந்தைகளையும் முதியவர்களையும் தாக்காத அளவுக்கு, அவர்களைப் பாதுகாக்க வேண்டும். உடை, தண்ணீர், உணவு என்று எல்லா விஷயங் களிலுமே, வழக்கத்தைவிடக் கூடுதல் அக்கறை எடுத்துக்கொள்வது, கோடை நோய்களிலிருந்து குழந்தைகளையும் முதியவர்களையும் பாதுகாக்க உதவும்.

**பச்சிளம் குழந்தை (0 - 5 மாதங்கள்)**

கோடையில் பிறக்கும் குழந்தைகளுக்கு, சீக்கிரமாகவே தொப்புள்கொடி விழுந்து விடும். இதற்காகப் பயப்படத் தேவை இல்லை. இது இயல்பான நிகழ்வுதான். குழந்தையை அதிகத் துணிகள், துண்டுகள் போட்டுச் சுற்றிவைக்கக் கூடாது. அப்படிச் செய்தால், குழந்தையின் உடல் வெப்பநிலை அதிகமாகி, காய்ச்சல் அடிப்பது போல தோன்றும். மிக மிருதுவான ஒரு பருத்தித் துணியால் போர்த்தினால் போதும்.குழந்தையைக் காற்றோட்டமான இடத்தில் வைத்திருக்க வேண்டும். ஏ.சி அறை என்றால், குளிர் 27 டிகிரி அளவில் இருப்பது போல் வைக்க வேண்டும். எப்போதும் ஏ.சி அறையிலேயே வைத்திருப்பதும் கூடாது.

தாய்ப்பாலிலேயே 80 சதவிகிதம் தண்ணீர் இருப்பதால், கோடையில் குழந்தைகளுக்குத் தனியாகத் தண்ணீர் தர வேண்டிய அவசியம் இல்லை. உடலில் பலவகையான 'ராஷஸ்' உண்டாகும். துணியினால் வருகிறதா எனப் பார்த்து, குழந்தைக்கு உறுத்தாத, சௌகரியமான உடைகளை அணிவிக்க வேண்டும். உடைகள், படுக்கை எல்லாமே மிகத் தூய்மையாக இருக்க வேண்டியது அவசியம். குழந்தைக்கு வியர்க்குரு பவுடர், சாதாரண பவுடர் எதுவுமே தேவை இல்லை. சுத்தமாக வைத்துக்கொண்டாலே போதும். தேவைப் பட்டால், மருத்துவ ஆலோசனைக்குப் பிறகு, கற்றாழை அல்லது காலமைன் லோஷன் தடவலாம்.

பி.சியா

இந்த சமூகஅமைப்பு பெண்களிற்கு செய்துள்ள மிகப்பெரிய அநீதி சீதனம். திருமண வாழ்க்கையென்பது சீதனத்தால் தீர்மானிக்கப்படுவதாகிவிட்டது. சிறிய வீதத்தினர் இதில் விதிவிலக்காக இருக்கலாம். ஆனால் இந்த சமூகமே சீதனத்தால் நிறைந்தது, சீதனத்தால் ஆனது, சீதனத்தை நம்பியே வாழ்வது.

சீதனமென்பது எந்தகாலக்கட்டத்தில் தோன்றியிருக்குமென அறுதியிட முடிய வில்லை. ஆனால் தமிழ்சமூகத்தின் மரபில் ஊறிய ஒரு சம்பிரதாயமாகுமளவிற்கு பழமை யானது. சீதனம் தொடர்பில் சில வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்தாலும், சமூகத்தில் உள்ள பெரும்பாலானவர்கள் அதனை தவிர்க்க முடியாதவர்களாகத்தான் உள்ளனர். சீதனம் வாங்குபவர்கள் பலவீனமாக ஆண்கள் என்பது மாதிரியான ஒரு எண்ணம் இப்பொழுது மெல்லமெல்ல தலைதூக்க ஆரம்பித்துள்ளது. இது மிகச்சிறிய அதிர்வு. இது நிகழவே பல தசாப்தங்களாக பலர் போராட வேண்டியிருந்தது.

சீதனம் வாழ்வின் தவிர்க்க முடியாத ஒரு நியதியென்பதாகிவிட்டது. இந்த சமூகத்தில் மிகப்பெரும்பாலானவர்கள் சீதனம் வாங்கித்தான் திருமணம் செய்கிறார்கள். திருமணங்களை சீதனம்தான் தீர்மானிக்கிறது.

மனிதஉறவுகள் என்பது மகத்தானவை. நண்பர்களாகுவதென்பதே அவ்வளவு இலகுவில் நிகழ்வதில்லை. இரண்டு நபர்களிற்கிடையிலான புரிதலே நட்பை ஆழமாக்குகிறது. நடித்த நட்பிற்கு மனப்புரிதல் அவசியம்.

இதுவே, திருமணத்திற்கென்றால் எவ்வளவு அதிகமாக தேவைப்படும்? ஆனால் தமிழ் கல்யாணங்கள் அப்படி நடக்கிறதா? இல்லை. திருமணங்களை சீதனம்தான் தீர்மானிக்கிறது என்றானபின் மனம், உணர்ச்சிகள் பற்றி யார் அலட்டிக்கொள்கிறார்கள்.

திருமணமும் சந்தை வியாபாரம் ஆகிவிட்டது. அதிகம் படித்தவர்கள், நல்ல உத்தியோகத்திலிருப்பவர்கள் திருமணச்சந்தையில் கிராக்கி அதிகம் உள்ள விற்பனைப் பொருள்கள். இந்தவகையானவர்களை விலை பேசி பிடிக்க வங்கிக்கணக்கு புத்தகங்களுடன் பெண்களைபெற்றவர்கள் அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

இது என்னவிதமான சமூக தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை யாருமே உணர்ந்து கொள்வதில்லை. திருமணச்சந்தையில் அனைத்தையும் நிர்ணயிப்பது பணம். எவ்வளவு அதிகம் பணம் கறக்கலாமென்பதில் மாப்பிள்ளை தரப்பு குறியாக இருக்கும். எவ்வளவு பணத்தைமிச்சம்பிடிப்பதென்பதில் பெண்வீட்டுதரப்பு கவனமாக இருக்கும். இதில் வாழப்போகிறவர்களின் கருத்தையும், விருப்பத்தையும் யார் கவனத்தில் எடுக்கிறார்கள்.

திருமணம் செய்யும்போதே தமது பிள்ளைகளின் காலம் பற்றிய தயக்கம் ஏற்படும் காலமிது. மூத்தது பெண்பிள்ளையெனில் எப்படி குடும்பத்தை திட்டமிடுவதென்பதை திருமணமான புதிதிலேயே பேசிக்கொள்கிறார்கள்.

திருமணம் ஒரு சமூகஅக்கறையென்பதில் இரண்டாவது கருத்திருக்க முடியாது. ஏனெனில் சீதனத்தால் குடும்பவாழ்க்கை சீரழிந்த எத்தனையோ பெண்கள் உள்ளனர். சீதனத்தால் வெளிப்படையாக பெண்களின் வாழ்க்கை பாதிக்கப்படுகிறதெனில், ஏராளம் ஆண்கள் மனதுக்குள்ளாக எதிர்பார்ப்புக்களை புதைத்துக் கொள்ளும் துயரமும் நிகழ்கிறது. குடும்பம், சகோதரிகளிற்காக நல்ல சீதனத்துடன் வரும் திருமணங்களிற்காக தலையாட்டி, விலையாகும் ஆண்களை பற்றி தமிழ்ச் சூழலில் அதிகமாக பேசப்பட்டுள்ளதா? தமிழர்கள் மத்தியில் உள்ள விவகாரத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ சீதனம் கணிசமான செல்வாக்கை செலுத்துகிறது.

நமது குடும்பங்களில் ஆண்கள்தான் பெறுமதியான விற்பனை சரக்கு. நல்ல கல்வி, சமூக அந்தஸ்து, வேலையென்பவற்றின்மூலம் அவர்களின் “விலை“யை உயர்த்த ஒவ்வொரு பெற்றோரும் விரும்புகிறார்கள். அவர்களிற்கு வாங்கும் சீதனத்தின் மூலமே அவரின் சகோதரிகளின் திருமணத்தை நடத்தி முடித்துவிடலாமென கணக்கு பண்ணும் பெற்றோர்கள்தானே ஒவ்வொருவரும்.

அந்த கலாசாரம் மோசமான கட்டமொன்றை இன்றைய காலத்தில் எட்டியுள்ளது. கல்வி கற்றவர்களும் சீதனம் ஒரு சமூககறையென்பதை உணர்வதில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் இணைத்த இந்த சமூகத்தில் சீதனம் தொடர்பான மீள்மதிப்பீடு அவசியம். சீதனத்தை விடுதலைப்புலிகள் தடைசெய்திருந்தனர். எனினும், அது கொடுக்கப்பட்டுக் கொண்டுதானிருந்தது. சீதனம் இல்லாததால் திருமணம் செய்யாமலிருப்பவர்கள், காதலித்த பின் சீதனத்திற்காக இன்னொருவரை திருமணம் செய்பவர்கள், சீதனக்கொடுமைகள் செய்பவர்கள் நமது சமூகத்தில் நிறைந்துள்ளனர். பெண்பிள்ளைகளை பெற்றவர்களை சீதனம் ஒரு கொடிய விலங்காக துரத்திக் கொண்டேயிருக்கும். ஏழைகளை இரக்கமில்லாமல் வேட்டையாடும் சீதனக்கொடுமையால் பாதிக்கப்படும் பெண்களிற்கு உதாரணம் சிவபாக்கியம். யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பை சேர்ந்த சிவபாக்கியம் பெண்பிள்ளையை பெற்று சீதனக்கொடுமையின் ஒருவகையான விளைவை எதிர்கொள்கிறார்.

**கணவனின் அடிஉதையால் அவருக்கு கருச்சிதைவு ஏற்பட்டு இரத்தப்போக்கு அதிகமாகியது. 2015 மார்ச் மாதத்தில் வீட்டை விட்டு வெளியேறி தனது சகோதரி வீட்டுக்கு சென்றுள்ளார். பொலிஸ்நிலையத்திற்கும் சென்று முறையிட்டார்**

சிவபாக்கியத்தின் நான்காவது மகளிற்கும் வவுனியாவை சேர்ந்த வாலிபர் ஒருவரிற்கும் திருமணம் செய்துவைக்கப்பட்டது. திருமணத்தின் பின்னரான ஐந்து மாதங்கள் சிவபாக்கியத்தின் வீட்டிலும், பின்னர் சிறிதுகாலம் கணவர் வீட்டிலும் வாழ்ந்து, பின்னர் கொடிகாமத்தில் தனிக்குடித்தனம் சென்றனர்.

தனிக்குடித்தனம் சென்றபின்னர் அவர்களிற்கிடையில் சண்டை உருவாக காரணம் சீதனம். கொடுத்த சீதனம் காணாதென சண்டை ஆரம்பித்தது. கடன்தொல்லைகள் அதிகரிக்க, இன்னும் சீதனம் அதிகம் தேவையென மனைவியை நச்சரிக்க ஆரம்பித்துள்ளான். மனைவியின் நகைகளை அடைவு வைத்தும், வங்கிக்கடனான மனைவியின் பெயரில் 120,000 ரூபாவும் மேலும் கைமாற்றாக 100,000 ரூபாவும் வாங்கியுமுள்ளார். இன்னும் அதிக பணம் தேவையென நச்சரித்து, இறுதியில் அடிஉதை ஆரம்பித்தது. அப்பொழுது சிவபாக்கியத்தின் மகள் 3 மாத கர்ப்பிணி.


கணவனின் அடிஉதையால் அவருக்கு கருச்சிதைவு ஏற்பட்டு இரத்தப்போக்கு அதிகமாகியது. 2015 மார்ச் மாதத்தில் வீட்டை விட்டு வெளியேறி தனது சகோதரி வீட்டுக்கு சென்றுள்ளார். பொலிஸ்நிலையத்திற்கும் சென்று முறையிட்டார்.

வைத்திய சிகிச்சைகளை முடித்த பின்னர் தனது தாயாருடன் சென்று தங்கியுள்ளார். இந்த சமயத்தில் துன்புறுத்தலில் ஈடுபட்ட கணவன் கைது செய்யப்பட்டான். இந்த சமயத்தில் சிவபாக்கியத்தின் மகளை, தடுத்து வைக்கப்பட்ட கணவனின் உறவினர்கள் மிரட்டியதாக கூறப்படுகிறது. கணவனை பிரிந்த பெண்ணிற்கு இந்த சமூகம் வழங்குவது எதனை? வசைகளையும், அவதூறுகளையும் ஊகங்களாக வெளியிட்டு திண்ணைப்பேச்சில் திருப்திப்பட்டுக் கொள்ளும். அதுதான் அங்கும் நடந்தது. இவையெதையும் எதிர்கொள்ளும் திராணிசுமதிக்கு இருக்கவில்லை. விபரீத முடிவெடுத்தார். ஒருநாள் எல்லோரும் தூங்கிய பின்னர் தனது அறையில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இறப்பதற்கு முன்னர் தனது கைப்பட தற்கொலைக்கான காரணத்தை எழுதிவைத்துள்ளார்.

இதன்பின்னான நாட்களில் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லும் சமயத்தில் தற்கொலை செய்த பெண்ணின் கணவன் கண்ணாடித்துண்டால் தனது கழுத்தில் காயத்தை ஏற்படுத்திய சம்பவமும் நடந்தது.

தற்கொலை செய்த பெண்ணின் பெயரில் வங்கியில் பெறப்பட்ட கடனின் சுமையை அவரது தாயார்தான் எதிர்கொண்டதாக கூறப்படுகிறது. சீதனமாக வழங்கப்பட்ட நகைகள் அடைவு வைக்கப்பட்டு விட்டன. இந்த சுமைகள் எல்லாவற்றையும் அந்த ஏழைத்தாய்தான் சுமக்கிறார்.

அந்த ஏழைத்தாய் செய்த குற்றமென்ன... ஏழையாய் வாழ்ந்ததா? பெண்பிள்ளையை பெற்றதா?




## சீதன சந்தை நிலவரம்

| | |
|---|---|
| வைத்தியர் | : 80 இலட்சம் 1 கோடி + வீடு + நகை |
| பொறியியலாளர் | : 60 - 90 இலட்சம் + வீடு + நகை |
| சட்டத்தரணி | : 40 - 70 இலட்சம் + வீடு + நகை |
| ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் | : 20 - 40 இலட்சம் + வீடு + நகை |
| தனியார்துறை | : 15 - 30 இலட்சம் + வீடு + நகை |
| விவசாயி, சுயதொழிலாளி | : 8 - 15 இலட்சம் + நகை + வீடு (சில சமயம்) |
| சும்மாயிருப்பவர் | : 8 இலட்சம் வரை + நகை + வீடு (சில சமயம்) |

அன்ரூ இன்னேஷ்



# முட்டுச்சந்திற்குள் மாட்டிய இலங்கையணி

நினைத்தபடியே இங்கிலாந்தில் எல்லாம் நடக்கிறது. ஆப்கான் அணியே ஆட்டிப்படைத்த இலங்கை கிரிக்கெட் அணியை 'தெறிக்க விடலாமா' பாணியில் கதிகலங்க வைத்துக் கொண்டிருக்கிறது இங்கிலாந்து அணி. இலங்கையணியின் தற்போதைய நிலை தெரிந்ததால் 'ஏற்கனவே விஜய் படத்தில் பார்த்துவிட்டோம்' என ரிவியை ஓவ் பண்ணிவிட்டு போய்க்கொண்டிருக்கிறார்கள் இலங்கை ரசிகர்கள்.

ஹெடிங்லேயில் நடந்த முதல் போட்டியில், அண்மைக்கால இலங்கையணியின் வழக்கப்படி பெலோஒன் ஆனது. மூன்றாம் நாளில் இன்னிங்ஸ் மற்றும் 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இன்னிங்ஸ் வெற்றிபெற இங்கிலாந்து 400, 500 ஓட்டங்கள் குவிக்கவில்லை. வெறும் 298 தான். இந்தப்போட்டியில் ஒரே ஆறுதல் ஆட்டத்தின் ஆரம்பத்தில் மிரட்டிய இலங்கையின் அறிமுக பந்துவீச்சாளர் ஷானக. 'நம்மாளும் அச்சுறுத்துவான்' என ஆறுதல்பட்டுக் கொண்டதுதான் மிச்சம். மொத்த அணியே சேர்ந்து இரண்டு இன்னிங்சிலும் அடித்தது 91,119 ஓட்டங்கள்தான்.

இரண்டாவது டெஸ்டிலும் இங்கிலாந்து தான் விளையாடியது. முதலில் ஆடி 498 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்ய, பின்னர் ஆடிய இலங்கை முதல் இன்னிங்சில் 101 ஓட்டங்களை பெற்றது. பெலோஒன் ஆகி இரண்டாவது இன்னிங்ஸ் ஆடியபோதுதான், இலங்கைக்குள் ஆவி புகுந்து கொண்டது. முன் வரிசை சொதப்ப நடுவரிசை அதகள ஆட்டம் ஆடியது. உண்மையில் தற்போதைய இலங்கையணியில் நடுவரிசைதான் ஓரளவு துடுப்பாட்ட பலம் கொண்டது. இரண்டாவது போட்டியில் அவர்களின் திறன் 'அத்திபூத்தது' சந்திமால் 126, மத்யூஸ் 81, ஹேரத் 61 ஓட்டங்கள் அடிக்க இலங்கை 475 ஓட்டங்கள் எடுத்தது. ஹேரத் 61 ஓட்டங்கள் எடுத்தது ஒன்றும் ஆச்சரியமல்ல, இலங்கையின் தொடக்க வீரர் கௌஷால் சில்வா 60 ஓட்டங்கள் அடித்தார் என்பதுதான் ஆச்சரியம். இலங்கையின் தொடக்கவீரர் ஒன்பது இன்னிங்ஸ்களின் பிறகு அரைசதம் அடித்துள்ளார்.

இலங்கை பெற்ற சிறிய முன்னிலையை ஒரு விக்கெட்டை இழந்து கடந்து இரண்டாவது போட்டியிலும் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

இலங்கையின் தொடர் தோல்விகளிற்கு என்னதான் காரணம்?

மிக முக்கியமான காரணம் சிறப்பான தொடக்கம் கிடைப்பதில்லை. கருணாரத்ன, கௌஷால் சில்வா தொடக்க வீரர்களாக விளையாடுகிறார்கள். முதல் டெஸ்டில் இலங்கையின் முதலாவது விக்கெட் சராசரியாக 10 ஓட்டத்தில் இழக்கப்பட்டது. கௌஷால் சில்வா விளையாடிய கடைசி பத்து இன்னிங்ஸ்களின் சராசரி 15.6. முன்னர் ஒருகாலத்தில் சௌரவ் கங்குலி நமது தொடக்கவீரர்கள் மாதிரி இருந்தார். அப்பொழுது ஒரு நகைச்சுவை துணுக்கு வெளியானது. இந்தியா துடுப்பாடுத்தாட மைதானத்திற்குள் நுழைய, கங்குலியின் மனைவி இரண்டு ஐஸ்கிறீம் வாங்கிக்கொண்டு செல்வார். எதற்கு இரண்டு ஐஸ்கிறீம் என கேட்க, 'இப்ப போறார். ஐஸ்கிறீம் உருகுவதற்குள் திரும்பி வந்துவிடுவார்' என்ற சாரப்பட மனைவி சொல்வார். நமது தொடக்கவீரர்கள் இருவரின் மனைவிமாருமே ஐஸ்கிறீம் வாங்குவார்களோ என்னவோ!

நிலையான மூன்றாம் இலக்க துடுப்பாட்டகாரர் இல்லாமை அடுத்த பிரச்சனை. பல வீரர்களையும் முயன்று பார்த்து இறுதியில் இப்பொழுது மெண்டிஸ் வந்திருக்கிறார். இரண்டு டெஸ்டிலும் சேர்த்து ஒரு அரைச்சதம் மட்டும் அடித்திருக்கிறார் இந்த இளையவீரர். மெண்டிஸ் ஆடியதே மொத்தம் 5 டெஸ்ட் என்பதால் அவருக்கு அவகாசம் தேவை. ஆனால் மூன்றாமிலக்க வீரரை கண்டுபிடிக்க தேர்வாளர்கள் அதிககாலத்தை செலவிடுகிறார்கள். மூன்றாமிலக்க வீரரை கண்டுபிடிக்க இனியும் அதிககாலத்தை செலவிட முடியாதென்ற நெருக்கடி உருவாகிவிட்ட நிலையில், மெண்டிஸிற்கு நெருக்கடி கொடுப்பது நல்ல பலனை தராது. திரிமன்னவிற்கு திரும்பதிரும்ப அந்த வாய்ப்பை கொடுக்காமல், மெண்டிஸிடம் ஏற்கனவே கொடுத்திருக்கலாம்.


எப்பொழுதும் இலங்கையணியை கவிழ்க்கும் தலையாய பிரச்சனை, நிலைத்து ஆடும் வீரர்கள் இல்லாமை. முன்னர் ஒருகாலத்தில் திலான் சமரவீர, அத்தபத்து, சங்கக்கார, மஹேல என நங்கூர துடுப்பாட்டகாரர்கள் இருந்த இலங்கையணியில் இன்று நிலையான ஒரு துடுப்பாட்டக் காரரைக்கூட காணக்கிடைப்பதில்லை. எப்பொழுதாவது மத்யூஸ், சந்திமால் சோபித்தால் கௌரவமான ஓட்டத்தை எட்ட முடிகிறது.

தொடக்க ஆட்டக்காரர்கள், மூன்றாம் இலக்க வீரர் பிரச்சனை இருந்து கொண்டிருக்கும் நிலையில், அதற்கு பின்னாலும் பலவீனமான துடுப்பாட்ட வரிசை நீடிப்பதுதான் இலங்கை தலைநிமிர முடியாமல் உள்ள பிரதான காரணம். லஹிரு திரிமன்னவை எல்லாம் திருஷ்டி கழிப்பதற்காகத்தான் இன்னும் அணிக்குள் வைத்திருக்கிறார்களா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. தற்போதைய இலங்கையணியிலுள்ள ஓரளவு அனுபவஸ்தரான திரிமன்ன 25 டெஸ்டின் பின்னரும் வைத்திருக்கும் சராசரி 24.16 தான். இப்படியான பெறுதியை வெளிப்படுத்தும் ஒரு துடுப்பாட்டக்காரர் தேவைதானா?

ஏற்கனவே நொந்து நூடில்ஸ் ஆகியுள்ள அணிக்கு இன்னும் தலையிடியை கொடுத்தது தம்மிக்க பிரசாத், துஷ்மந்த சமீரவின் காயங்கள். இலங்கையின் வேகப்பந்துவீச்சை தலைமைதாங்கும் இருவருமே இல்லாதது இலங்கைக்கு மேலும் பலவீனமே.

இம்முறை இங்கிலாந்தில் இலங்கையின் சுழற்பந்துவீச்சும் எடுபடவில்லை. ஹேரத் விக்கெட் வீழ்த்தாவிட்டால் விக்கெட் வீழ்த்தும் பகுதிநேர பந்துவீச்சாளர்கள் தேவை. மிலிந்த சிறிவர்த்தன ஒருவர் மட்டுமே அதனை செய்து வருகிறார். முன்வரிசை வீரர்களில் ஒருவர் ஓரளவு பந்துவீசவும் தெரிந்திருப்பது நல்லது. ஜெயசூரியா, டில்சான் இருந்த அணியல்வா!

இவ்வளவு பிரச்சனைகளையும் ஈடுகட்டுவது தேர்வாளர்களின் கையில்த்தான் உள்ளது. இல்லையென்றால், முன்னர் கென்யா, சிம்பாவே அணிகளிற்கு நடந்ததுதான் நமக்கு நடக்கும். எந்த அணிக்காவது பொழுது போகவில்லையென்றால் போன் போட்டு கூப்பிட்டு அடித்துவிட்டு இன்னொரு அணியிடம் மூட்டைகட்டி அனுப்பிவிடுவார்கள். ரசிகர்களும் வலிக்காத மாதிரி எத்தனை காலம்தான் சமாளித்துக் கொண்டிருப்பது?





## தெரிந்து கொள்வோம்

1. பார்வை இல்லாத விலங்கு வௌவால்.
2. 500 தாள்கள் கொண்டது ஒரு ரீம்.
3. இரவில் மலரும் பூக்களில் நிஷாகந்தியும் ஒன்று.
4. யூதர்களின் புனித நூல் டோரா.
5. உலகில் சுமார் 850 எரிமலைகள் உள்ளன.
6. இலியட் என்ற நூலை எழுதியவர் ஹோமர்.
7. இரவில் மிகவும் பிரகாசமாக ஒளிரும் நட்சத்திரம் சீரியஸ்.
8. ஒக்டோபஸ் போலவே பல கால்களுடன் நீரில் வாழும் பிராணி ஸ்குவிட். இதன் நரம்புகள் மிகவும் தடியானவை.
9. ஹம்மிங் பறவையால் ஒரு மணி நேரம் அசையாமல் இருக்க முடியும்.
10. மானுக்கு ஆண்டுதோறும் கொம்புகள் புதுசாக முளைக்கின்றன.
11. சூரிய மீன் என்ற ஒருவகை மீன் கோடிக்கணக்கில் முட்டை இடும்.
12. எலிகளின் இதய துடிப்பு நிமிடத்திற்கு 700 முறையாகும்.
13. தமிழ் இலக்கியத்தில் முதலில் தாலாட்டு பாடியவர் பெரியாழ்வார்.
14. சிரிப்பை பற்றிச் சொல்லித் தரும் பாடசாலை மான்செஸ்டரில் உள்ளது.
15. சிலந்திகளின் வலை அமிலத்தன்மை உடையது. பாசி, பக்டீரியா போன்ற நுண்ணுயிரிகளால் பாதிப்படையாது.
16. கடலில் சுமார் 25,000த்துக்கும் மேற்பட்ட மீன் இனங்கள் உள்ளன.
17. உலகிலேயே அதிக பக்கங்களுடன் வெளிவந்த நாளேடு நியூயோர்க் டைம்ஸ். 1956 மே 5ம் திகதியன்று 516 பக்கங்களுடன் வெளியானது.
18. முதன்முதலில் கிளிஜோதிடம் தோன்றிய நாடு மியான்மர்.
19. நேபாள மன்னர்களின் குலதெய்வம் தமிழ்நாட்டிலுள்ள ராமேஸ்வரம் ராமநாதசாமி கோயில்.
20. உலகில் அதிகளவில் பழத்தோட்டங்கள் உள்ள நாடு கொலம்பியா.
21. உலோகங்களில் உயர்ந்தது புளுட்டோனியம்.
22. சூரியனின் மகள் என்றழைக்கப்படும் தாவரம் பருத்தி.
23. நெல்லிக்காய் சாப்பிட்டால் பித்தம் நீங்கும்.
24. அவுஸ்திரேலியாவில் கங்காருவைப் போல புகழ் பெற்ற மற்றொரு விலங்கு கோலா. இது தன் குட்டிகளை சுமந்தபடி மரத்துக்கு மரம் தாவுமாம்.
25. வேப்பமரத்தின் மாற்றுப் பெயர்கள் அரிட்டம், துத்தை, பரிமதரம், பின்மந்தம், வாதாரி, அருட்டம், அருணாவதி, கடிப்பாறை, கேசமுட்டி, பூமாரி, புயாரி, மந்தமரம் ஆகியனவாகும்.
26. ஒக்டோபஸின் ரத்தம் நீல நிறமாக இருக்கும்.
27. ஆர்டிக் கடல் வருடத்தில் 8 மாதங்கள் உறைந்திருக்கும்.
28. முதன்முதலில் கடல் பயணத்தின் மூலம் உலகைச் சுற்றி வந்தவர் மெகல்லன்
29. பச்சயம் இல்லாத தாவரம் காளான்.
30. உலகையே நடுங்க வைத்த சர்வாதிகாரி ஹிட்லர் இளம் வயதில் ஓவியராக இருந்தார்.
31. பிறந்த ஐந்தே நாட்களில் குதிரைக் குட்டி ஓடத் துவங்குகிறது.
32. பறவைகளில் நீரை உறிஞ்சிக் குடிப்பது புறா மட்டுமே.

## விடுகதைகள்

1 அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?
2. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும். அது என்ன?
3. காக்கைப் போலக் கருப்பானது. கையால் தொட்டால் ஊதா நிறம் வாயால் மென்றால் நீல நிறம். அது என்ன?
4. தாடிக்காரன் மீசைக்காரன். கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன். அது என்ன?
5. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது. அது என்ன?
6. காற்றிலே பறக்கும் கண்ணாடி குண்டு. தொட்டுவிட்டால் பார்க்க முடியாது. அது என்ன?
7. ஐந்து அடுக்கு. நான்கு இடுக்கு. அது என்ன?
8. ஒற்றைக் காலில் ஒய்யாரமாய் ஆடுவான். ஓய்ந்து விட்டால் படுத்துவிடுவான். அவன் யார்?
9. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல். அது என்ன?
10. நடைக்கு உதாரணம் சொல்வார்கள். ஆனால் குறுக்கே நடந்தால் சிலருக்கு பிடிக்காது. அது என்ன?

விடைகள்

*1. வாழைப்பூ 2. பேனா 3. நாவல் பழம் 4. தேங்காய் 5. காய்ந்த மிளகாய் 6. நீர்க்குமிழி 7. விரல்கள் 8. பம்பரம் 9. கிளி 10. பூனை*

## வித்தியாசமான உதவி



ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தில் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான். மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கெனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு 'யாராவது காப்பாற்றுங்கள்' என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.


தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. 'பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு' என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு 'நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்' என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். 'ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?' என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக் கொண்டே 'தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்' என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். 'நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்' என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.




## விழித்தெழு

விழித்திடு சமுதாயமே
விரைந்து செயற்படு
எம் இளைய சமுதாயம்' எங்கே?
எங்கோ தொலைந்து
விட்டோமோ?

அதோ மதுவின் பின்னும்
அடிமைகளாக போதையின்
பின்னும்
வாழ்த்திப் பேசப்பட
வேண்டியவர்கள்
வாழ்க்கையை தொலைப்பது ஏன்?

கைகொடுத்து வாழ்த்தப்பட
வேண்டியவர்கள்
கைதிகளாக சிறையில் ஏன்
மனிதமின்றி நேயமின்றி
மிருகங்களாக வாழ்வதேன்?

விஞ்ஞான விந்தைகளில்
விழுந்துவிட்டனர்
விபரீதங்களை தேடுகின்றனர்
நல் வழி தொலைத்து
நரகவழி நடக்கின்றனர்.

கரம் கொடு சமுதாயமே
கரை சேர்ப்போம் இளைய
சமூதாயத்தை
தீமையற்ற பாரினை உருவாக்க
வாருங்கள் அணிதிரள்வோம்.

க.அனற்கியூரி
தரம்10
யா. வேம்படி மகளீர் கல்லூரி





# உயிர்வாங்கும் வைத்தியசாலைகள்

நரேஜி

வவுனியா சிதம்பரபுரம் வைத்தியசாலையில் வைத்தியர் இல்லாததால் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்ற பரபரப்பு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. நோயாளியை இரவு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது கடமையில் வைத்தியர் இருக்காதது உயிரொன்றை அநியாயமாக இழக்க வைத்துள்ளது.

165, கற்குளம் 4, சிதம்பரபுரம் எனும் முகவரியில் வசித்த 64 வயதுடைய செல்லத்துரை சந்திரலிங்கம் என்பவர் இரவு 12 மணியளவில் நெஞ்சு வலி ஏற்பட்டு சிதம்பரபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் அங்கு வைத்தியர் இருக்கவில்லை. வெள்ளையுடையுடன் அங்கிருந்தவர்கள் சிகிச்சை அளித்து கையொப்பம் இடப்படாத படிவமொன்றினூடாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு நோயாளியை அனுப்பியுள்ளதாகவும் அங்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் நோயாளி மரணமடைந்துள்ளதாகவும் மரணமடைந்தவரின் மகனான ஜோன்சன் டைம் மரண விசாரணையின் போது சாட்சியமளித்துள்ளார்.

இவ்வாறான சர்ச்சைக்குரிய சம்பவங்கள் சில வவுனியாவில் முன்னரும் இடம்பெற்றிருந்ததாக திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் தெரிவித்துள்ளார். இது பற்றி தீபம் கேட்டபோது அவர் சில அதிர்ச்சி



சிவநாதன் கிசோர்

தகவல்களை வெளியிட்டார்.

“இந்தச் சம்பவம் தொடர்பில் இறந்தவரின் மனைவி மற்றும் மகனால் எனக்கு கூறப்பட்டது என்னவென்றால், புதன்கிழமை இரவு 12 மணியளவில் நெஞ்சுக்குத்து ஏற்பட்டு சிதம்பரபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அங்கு அந்த நேரத்தில் வைத்தியர் இருக்கவில்லை. வைத்தியர் 24 மணித்தியாலயமும் அங்கு இருக்க வேண்டும். அவருக்கான வைத்திய விடுதியும் அங்கு உள்ளது. அங்கு உள்ள ஓடினறி லேபர்ஸ் ஒட்சிசனை மூக்கில் செலுத்திவிட்டு நோயாளியை வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பாது வைத்திருந்தார்கள். நாங்கள் சண்டைபிடித்த பின் தான் அம்புலன்ஸ் வண்டியில் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பினார்கள் என்றும் நோயாளியை இன்னொரு வைத்தியசாலைக்கு அனுப்புவதற்கான சிட்டையில் கூட மருத்துவ அதிகாரியின் கையொப்பம் இருக்கவில்லை. இறப்பர் முத்திரை மட்டுமே அதில் இடப்பட்டிருந்ததாகவும் கூறினார்கள். அவர்களின் அசமந்தத்தாலேயே வவுனியா வைத்தியசாலைக்கு வந்த நிலையில் அவர் மரணமடைந்தார் என்றும் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இதற்கு முன்னரும் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றதாகவும் அவர்கள் என்னிடம் தெரிவித்திருந்தார்கள்.

உண்மையில் இதேபோல் பல வைத்தியசாலைகளில் நடந்திருக்கின்றது. ஒரு வைத்தியர் உள்ள வைத்தியசாலைகளில் இவ்வாறான நோயாளிகள் பலர் வருகின்ற போது அங்கு வைத்தியர்கள் இருப்பதில்லை. அதனால் மரணமான சம்பவங்களும் இருக்கின்றது. உதாரணமாக கிணற்றில் விழுந்த ஒரு பெண்ணை பூவரசன்குளம் வைத்தியசாலைக்கு கொண்டு வந்த போது அங்கு வைத்தியர் இருக்கவில்லை. அந்த பெண் மரணமடைந்த பின் அங்கு நின்ற தாதிமார் உடலை வீட்டிற்கு கொண்டு செல்லுமாறு கூறியுள்ளார்கள். அந்த பெண்ணின் சடலத்தை வவுனியா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்கு கொண்டு வராது, வீட்டிற்கு கொண்டு சென்று உறவினர்கள் சடலத்தை இன்போம் செய்ய முற்பட்ட போது 119 பொலிஸ் அவசர சேவைக்கு யாரோ தகவல் கொடுத்தார்கள். மறுநாள் நான் நீதிபதியின் உத்தரவுக்கமைய சென்று பிரதே பரிசோதனை செய்தேன். இப்படியான சம்பவங்கள் எல்லாம் இங்கு இருக்கிறது. ஒரு வைத்தியர் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர் விடுதி இருக்கின்ற போது அந்த வைத்தியர் வைத்தியசாலையில் இல்லா விட்டாலும் விடுதியில் இருக்கலாம். நோயாளி வந்தால் அவருக்கு தகவல் கொடுக்கப்பட்டதும் அவர் வந்து சிகிச்சையளிப்பார். தங்குமிட வசதிகள் இருந்து சில வைத்தியசாலைகளில் வைத்தியர் இருப்பதில்லை.

இந்த வைத்தியர்களின் சில செயற்பாடுகள் மக்களின் உயிருடன் விளையாடுகின்ற விளையாட்டாக இருக்கின்றது. இந்த நல்லாட்சி அரசாங்கம் வைத்தியசாலைக்கு மருந்துகளுக்கு என பெருமளவு நிதியை செலவு செய்கின்றது. மறுபுறம் வைத்தியர்கள் பகிஸ்கரிப்புக்கள் செய்து தங்களுடைய வசதிகளை எடுக்கின்ற போது ஏன் மக்களினுடைய தேவைகளை கவனிக்க முடியாது என கேட்கின்றேன்“ என்றார்.

மக்களின் உயிருடன் சம்பந்தப்பட்ட இந்த பிரச்சனை வவுனியாவின் கிராமங்களில் தொடர்கதையாக நீடிக்கின்ற போதும் உரிய அதிகாரிகளும், மக்கள் பிரதிநிதிகளும் கவனம் செலுத்தாமல் இருப்பதுதான் ஏனென்று புரியவில்லை.

சீனாவில் பாடசாலை செல்வதற்காக தினமும் 800 மீ பாறைகள் அடர்ந்த மலையைக் கடந்து சிறுவர்கள் செல்வது தெரியவந்துள்ளது. பல்வேறு விருதுகளை வென்ற சீனாவின் பிரபல புகைப்படக் கலைஞர் சென் ஜீ எடுத்த புகைப்படங்கள் மூலம் இந்த செய்தி உலகத்தின் கவனத்துக்கு வந்துள்ளது.



அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோவில் பிடிக்கப்பட்ட மிக அரிதான புகைப்படம். “இரண்டு அணில்களின் சண்டையேஞ் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. எண்டர் தி டிராகன் படத்தில் புரூஸ் லீ காற்றில் பறந்து சண்டை போடுவது போல இரண்டு அணில்களும் சண்டையிட்டன. கைகளால் குத்தின. கால்களால் உதைத்தன. தற்காப்பு கலைகள் தெரிந்த ஒருவரால்தான் இப்படிச் செய்ய இயலும். என் வாழ்நாளில் வித்தியாசமான காட்சிகளைப் படம் பிடித்துவிட்டேன்!” என்கிறார் கிஸ்கிலோவ் என்ற அந்த படப்பிடிப்பாளர்.







இறந்த பாம்பொன்றை இரையாக்க இரண்டு ராஜநாகங்கள் மல்லுக்கட்டிய படம். இணையங்களில். வைரலாக பரவும் படம் இது. வழக்கம்போல முடிவு அமைந்தது. ஒரு பாம்பு வெற்றியடைந்து இரையை 'லபக்'கியது.




இப்பத்திரிகை நோர்ச் மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 05.06.2016 அன்று வெளியிடப்பட்டது